80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

பாடசாலை ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் மிகவும் ஏற்றதாய்,
அறிவை விளக்கி உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும்,
ஆனந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள உயரிய மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
புதுச் சுவை.] திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.) [மிகு அநுபவம்.

கமலம்-9.	சென்னை : பவஹு தைமீ 1உ	இதழ்-106.
Vol. 9.	1935 ம்ஹு ஜனவரிமீ 14உ	No. 106.

ஆனந்த  தர்சனம்

"ஸ்ரீராம ஜெயம்" என்று பெரியோர்கள் அடிக்கடி சொல்லி ஒரு காரியத்தைச் செய்வது வழக்கம். இதன் கருத்து யாது? ஸ்ரீராம மூர்த்தி ஜெயமடைந்ததுபோல் நமக்கும் ஜெயம் கிடைக்கவேண்டுமென்பதோ? அல்லது ஸ்ரீராமபிரானுடைய ஜெயத்தை ஸ்மரிப்பதால் நமக்கும் ஜெயமுண்டாகுமென்பதோ? இரண்டும் கருத்தாயிருக்கலாம். எவ்வாறாயினும் ஆகுக. ஸ்ரீராமனை நினைப்பதாலும், அவர் அடைந்த வீர வெற்றியைக் கூறுவதாலும் நாம் காரியானுகூலமடைகிறோம். ஸ்ரீராமர் வீரராகவும் பகவானாகவும் விளங்குவதால், அவரது வீரத்தை நினைப்பவர்களுக்கு வீரத்வம் சித்திப்பதுடன் ஸகல மங்களங்களும் கிடைக்கின்றன வென்பதுண்மை. அநேக வீடுகளில் இராகவனது பெருமையைக் கூறும் இராமாயணத்தைக் கிரமமாகவும் சிரத்தையோடும் படனம் செய்கின்றனர். இதனால், புத்திரப்பேறு, குடும்பவிர்த்தி, தன தான்யவிருத்தி முதலியவை ஸித்திக்கின்றன. பிதிர் தேவதைகள்கூட இராமாயணம் படனம் செய்யும் தன்யர்களிடம் பிரீதி பாராட்டுகிறார்கள். ஆகவே, நாமும் இராமமூர்த்தியை ஸதா போற்றித் துதிக்கக் கடவோம்.

ஃ

"தரிசன விசேஷம் பாவ விமோசனம்" பிரதிதினமும் பகவத் தரிசனம் செய்த பிறகே போஜன முண்பதென்னும் கொள்கையைப் பக்தர்

ள் கொண்டிருக்கின்றனர். உடம்பிலுள்ள அழுக்கை ஸ்நானத்தாற் போக்கிப் பிறகு ஆகாரத்தை யுட்கொள்வதுபோல், மனதென்னும் சூக்ஷ்ம சரீரத்திலுள்ள பாபமாகிய அழுக்கைப் பகவத் தரிசனத்தால் போக்குவதவசியம். தேகத்துக்கு ஸ்நானமும், மனோசுத்தத்துக்கு பகவத் தரிசனமும் முக்கியம். முற்காலத்தில் கொங்கணதேசத்தில் ரமணீயமான சிற்றூர் ஒன்றிருந்தது. இதில் வசிக்கும் ஜனங்கள் மிகுந்த ஸாதுக்கள். பட்டணவாஸிகளைப்போல் இவர்களுக்கு விபாஜ்ய வியவகார முதலிய கவலைகளில்லை. நாள்தோறும் வயல்களுக்குச் சென்று நிலமுழுதும் விதை தெளித்து பயிரை விருத்தி செய்து, ஆடுமாடுகளை மேய்த்து வீட்டுக்கு வந்து தங்கள் புத்திர மித்திரர்களுடன் இன்பமாக சம்பாஷித்துக் காலங் கழிப்பது வழக்கம். இவர்கள் வஸிக்கும் ஊருக்கு ஈசான்ய மூலையில் ஓர் குன்றுண்டு. இதில் வெகு காலத்துக்குமுன் எந்த மகானாலோ பிரதிஷ்டை செய்யப்பட்ட ஓர் அழகிய விக்கிரகமுண்டு. இந்த விக்கிரகத்தைப்போல் லக்ஷணமான முகமும் கை கால்களுமுள்ள ஒருவன் அவ்வூரார்களுக்கு ஆசாரியனாக ஏற்படுவானென்றும், அவனால் அவ்வூரார் திவ்ய ஞானத்தை யடைவார்களென்றும் கல்லில் எழுதியிருந்தது. இதில் பெரிய நம்பிக்கைகொண்டு சிற்றூராரெல்லாம் எந்த சமயத்தில் அந்த ஆசாரியன் வருவாரோவென்று காத்துக்கொண்டிருந்தனர். இவ்வாறிருக்கையில் மேற்படி ஊரில் ஓர் ஏழைப் பையன் இடும்பன் என்ற பெயரோன் மேற்குறித்த குன்றுக்கு வந்து அங்கே யிருந்த விக்கிரகத்தைக் கண்டு அதன் முகத்தையும் கால் கைகளையும் நோக்கி, "ஆஹா! இத்தனை லக்ஷணமுள்ள ஆசாரியர் சுத்த ஹிருதயமு முள்ளவராயிருப்பாரே? அவர் பிறருக்குத் தீங்கு நினைக்க மாட்டாரன்றோ? எப்போதும் கடவுளிடம் பக்தி செலுத்துவாரன்றோ? மண், பெண், பொன் ஆகிய மூன்றிலும் ஆசை வையாரன்றோ?" என்று ஸதா அவருடைய நற்குணங்களையே தியானித்துக் கொண்டிருந்து அந்தி நேரத்தில் வீட்டுக்குப் போவான். இராமுழுவதும் ஆசாரியனது நற்குணங்களையே நினைத்துக்கொண்டிருப்பதால் அவர் வந்ததுபோற் கனவு காண்பான். மறுதினம் காலையில் விக்கிரகத்தண்டை வருவான். அதன் முகத்தை உற்று நோக்குவான். தன் முகமும் அவ்விதமே இருக்கவேண்டுமென்று எண்ணுவான். இவ்வாறாக நாளுக்கு நாள் சித்தத்தை நல்ல வழியில் நடத்தி அந்த சிலையைப் பார்த்துக்கொண்டிருந்த பழக்கத்தால் இடும்பனுடைய முகத்தில் ஓர்வித ஒளியுண்டாகத் தலைப்பட்டது. அவனையறியாமலே ஆசாரியனுக்கு இருக்கவேண்டிய பற்பல நற்குணங்களுண்டாயின. தேஜஸ், புத்தி, ஞானம் முதலியன அவனுக்கு இயற்கையாகவே தோன்றின. ஓர் நாள் ஊராரெல்லாம் குன்றினருகே வந்து சிலையின் முகத்தையும், எதிரிலிருந்த இடும்பன் முகத்தையும் உற்று நோக்கவே இரண்டும் ஒன்றாயிருக்கக் கண்டு அதிசயித்தனர். இடும்பனே ஆசாரியனாக வரவேண்டிய காரணமென்ன; பூர்வத்தில் மகான் இடும்பனையே தீர்மானித்திருந்தார் போலுமென்று நம்புவதாயினர். தக்ஷணமே அவனிடம் பயபக்தியுள்ளவர்களாய் எல்லோரும் அவனது அடிபணிந்து சிஷ்யர்களாயினர். இடும்பனும் பூரண ஞானியின் நிலையைப் பெற்று அனைவருக்கும் உபதேச கர்த்தா

அந்யர்கள் அனுசரிக்கும் நல்ல மார்க்கங்களை யவமதித்துவிட்டு, அவர்களிடமிருந்து துர்வழக்கங்களை மட்டும் கற்றுக்கொள்வது பெருமைக்குக் குறைவேயாம்.

வாயினன். ஆசார்யஸ்தானம் அவனுக்குப் பொருந்தி விட்டது. மேற் கூறிய கதையால் தரிசனத்தின் மகிமை புலப்படுகிறது. இந்தக் காரணத் தாற்றான் விவேகிகள் கோயிலுக்குச் செல்வதும், ஸ்வாமி தரிசனம் செய்வ தும், பெரியோர்களைத் தரிசிப்பதும் தங்களுடைய இன்றியமையாத கடமை யாகக் கொண்டார்கள். ஆகலின், நாம் பிரதிதினமும் பகவானைப் பிரார்த் தித்து அவரது பாதாரவிந்தங்களைத் தியானிக்கக்கடவோம்.

ஃ

"ஆசார ஹீனனான பிள்ளை சத்துரு" ஆசாரம் என்பது நல்லொழுக் கமே ஒரு உருவமாக அமைந்தது. உத்தமகுணங்களுடன் குலாசார தர்மத்தை நடத்துவதே ஆசாரம். தாழ்ந்த ஜாதியாரிடம் அன்பாய் இருப்பதும், அவர் களைத் தொடுவதும் ஆசாரக் குறைவன்று. மனப் பரிசுத்தம் பிரதானமே யன்றி, இவ்விதம் தொடுவதால் இடிவந்து விழுந்திடாது. ஆனால், இழிந்த ஜாதியாருடன் புசித்தல் அருந்தல் முதலியன அனாவசிய அதிகப் பிரசங்க விஷயம். ஆசார ஹீனனான பிள்ளையை ஒவ்வொரு பிதாவும் சத்துருவாக மதித்து சிக்ஷிப்பது நன்று. இவ்விதம் செய்யலாமாவெனில், அது நம் முடன் பிறந்த வியாதியை நாம் ஒழிக்கலாமாவென்று கேள்வி கேட்பது போலாம்! வியாதியினால் உண்டாகிற வருத்தம் தக்ஷணமே அனுபவத்துக்கு வருவதால், அதை யொழிக்கவேண்டுமென்ற கவலையும் அப்போதே யுண்டாய் விடுகிறது. நல்லொழுக்கங் கெட்ட பாபியான பிள்ளையால் உண்டாகும் கஷ்டம் வெகு காலத்துக்குப் பிறகே தெரிவதால் அவனை உடனே சிக்ஷிப்ப தும் ஒட்டுவதும் இல்லை. தீர்க்காலோசனை செய்கிறவர்கள் வியாதியைக் காட்டிலும் ஆசார ஹீனனான பிள்ளையையே பெரிய சத்துருவாக நினைப்பர். இவ்விதம் கருதித் தம் மக்களை சிக்ஷியாதவர்கள் புத்திர துரோகிகளேயாவர். தந்தை செய்யவேண்டிய கடமைகளில் மக்கட்கு மத கிரந்தங்களைக் கற்பிப் பதே பெருங்கடமையாம்.

ஃ

"தத்துவம்" என்றால், உண்மையென்று ஓர் அர்த்தம். "அவன் தத்துவத்தைச் சொன்னான்" என்றால், அவன் உண்மையைச் சொன்ா னென்று அர்த்தம் கொள்ளுகிறோம். பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ண பர மாத்மா ஓம், தத், ஸத் என்ற மூன்று வார்த்தைகளும் பிரம்மத்தைக் குறிக் கிறதாகச் சொல்லுகிறார். ஆகவே, "தத்" என்பது பிரம்ம மென்றாயிற்று. "த்வம்" என்னும் ஸம்ஸ்கிருத பதத்துக்கு "நீ" என்றருத்தம். ஆதலின், "தத்வம் என்றால், "நீ பிரம்மம்" என்பது பொருள், "தத்" என்றால் மற்றொரு அர்த்தம் 'அது' என்பதாம். ஆகவே, "தத்துவம்" என் றால், "அது நீ" என்று பொருள்படும். உண்மைப் பொருள். பரப்பிரம்ம மென்று நாம் உணரவேண்டியது. ஆதலின், ஞானத்தை யடைவதுடன் தத்துவத்தையும் அறிவதவசியம்.

ஃ

"தெளிந்த மனம் உலர்ந்த தீக்குச்சி" போலாம். நன்றாக உலர்ந்த தீக்குச்சியைச் சுவரில் உராய்த்தவுடனே நெருப்பு உண்டாகிறது. சிறிது

அனுபவமானது கல்விக்கும் பயிற்சிக்கும் சரியான ஈடாகாது. அனு பவம் எல்லாவற்றுக்கும் மேலாகவே, தான், தலைமை கொண்டு நிற்கும்.

ஜலம் பட்டால் எத்தனை தரம் கிழித்தாலும், நெருப்பு பற்றுகிறதில்லை. அது போல், உலகப் பற்றுகளை யொழித்த சுத்த ஹிருதய முடையவனுக்கு பகவானுடைய மகிமை உடனே தெரியும். அவன் உபதேசப்படி அனுஸரிக்கத் தொடங்குவான். உலக ஆசைகளில் உழன்று திரிபவன் எவ்வளவு வியக்தமாகச் சொன்னாலும் தத்துவத்தை யறியமாட்டான். ஞானத்தைத் தேட மாட்டான். புத்திசாலிகள் மட்டுமே பெரியோர்கள் கூறும் வார்த்தையை உடனே அங்கீகரிக்கின்றனர். மற்றவர்கள் அவர்களின் மகிமையை யுறியாத மந்தர்களே.

ஃ

"ஹித வசனமும் மாணிக்கமும்" குருடனுக்குக் காலின் கீழுள்ள மாணிக்கம் தெரியாது. ஒருவேளை மாணிக்கம் அவன் காலிற்றட்டுப் பட்டாலும், அதைக் கல்லென்று நினைத்துக் காலால் நெட்டித் தள்ளுவான். மறுபடியும் அந்த மாணிக்கம் அவனுடைய பாதத்திற் பட்டாலும், அப்போதும் அவனுக்கு அதன் அருமை தெரியாது. கருங்கல் அடிக்கடி காலில் தட்டுப் படுகிறது; இதை மார்க்கத்தில் போட்ட மகா பாபிகள் யாரோவென்றேசிக் கையாலெடுத்து வெகு தூரத்துக்கப்பால் விட்டெறிவான். இவ்வாறே விவேகிகள் கூறும் நல் வார்த்தையின் அருமை மூடர்கட்குத் தெரியாது. ஒரு ஸமயம் ஹிதவசனங்கள் அகஸ்மாத்தாய் காதில் பட்டாலும் தங்களின் அகங்கார சிந்தையால் அதைக் கவனியார். நல்லவர்கள் மறுபடியும் நல் வசனங்களை வலுவில் வந்துரைத்தாலும் அவற்றைத் துன்பமாயெண்ணிக் கேளாதவர்போல் இருந்து விடுவர். இதை யறிந்துதான் முற்காலத்திலிருந்த துரியோதனுதியர்க்கு துரோணர், கிருபர், பீஷ்மர், வியாசர் முதலிய மகான்களெல்லாம் புத்தி சொல்வதிற் பயனில்லையென்று சும்மாவிருந்து விட்டனர். கடைசியில் பகவானுடைய ஆக்ஞைப்படி மேற்கூறிய துஷ்டர்கள் யுத்தத்தில் மடிந்தனர். ஆகவே, பரம துஷ்டர்களுக்கு உபதேசம் செய்வதில் பயனில்லை.

ஃ

"அநுஷ்டக்க ஸ்துதி" ஓ அன்புள்ள பகவானே! எமது வாழ்நாள் வீண் நாளாகமல் உன் ஏவலிற் செலுத்தும்படி மன்றுடுகிறோம். உனது நட்பென்னும் இனிய பாசத்தால் எம்மை நின்னோடு பந்தித்து எதனாலும் எம்மனம் நின்னை விட்டு வேறுபடாதிருக்க அருளுவாய். துன்பத்திலும், இன்பத்திலும், சுகத்திலும், பிணியிலும், உழைப்பிலும், உல்லாஸத்திலும், நித்திய கிருத்தியங்களிலும், இதர வியாபாரங்களிலும் எச்சமயத்தும் என்றும் நினைவிடாது பற்றும்படி எம்மை நின்னவராக்கிக் கொள்வாயாக. எங்கு எத்தொழிலில் பிரவேசித்திருந்தாலும் நின்னையே ஆச்ரயித்து உன்னையே தொடர்வோமாக. எமது ஜன்ம சாபல்யமெல்லாம் நின்னை யறிவதென்றே எப்போதும் மறவாதிருப்போமாக. எமது மனோ வாக்குகளை நின் சத்கீர்த்

பகவத் சிருஷ்டியில் ஸ்திரீ புருஷர்கள் இருவரும் சுகம், துக்கம், பயம், காமம் முதலிய விஷயங்களில் ஸமத்துவத்தைக் கொண்டிருக்கும்போது, உலக விஷயங்களில் மட்டும், ஸ்திரீகள் ஏன் புருஷர்களுடன் சமத்துவத்தை யடையக்கூடாது என்று வாதாடுவோர் உத்தமமான மனைவிகளை யடைந்தவர்களாயிருக்க வேண்டுமென்று ஒருவர் கூறுகிறார்.

தனப் பிரபாவத்தில் தானே செலுத்துவோமாக. எமது வாழ்க்கையெல்லாம் உன் சிந்தையால் மேம்பாடடையச் செய்வாய். எமது செய்கை யனைத்துக் கும் நினது நட்பே அகப்பற்றும் புறப்பற்றுமாகக்கடவது. எமதுள்ளத்தின் எந்த மூலையிலாவது நின்னின்றும் வேறுபட்ட ஆசா பாசமொன்று கரந் துறையுமாயின் அதை வேருடன் களைந்திடுவாய். ஆநந்தகரமாகிய நினது சாந்நித்தியமன்றி வேறொன்றையும் விரும்பாத வண்ணம் எமது பாசங்க ளெல்லாம் உலகத்தினின்றும் வேறுபட்டு உன்னிடத்தே வேரூன்றிச் செழிக் கும்படி யருள்வாய். ஓ! கருணைகூர்ந்த கர்த்தனே! யாம்—எமது—என்னும் இருபற்றுகளும அற்று, நின்னையே பற்றி, சுத்த சைதன்னிய நிலையாகிய ஆநந்தத்தில் வாழ்ந்துறங்க அருள் புரிவாய். ஓம் தத் ஸத்.

விஷப்பாம்புக்குச் சமமானவர்கள்.

ஒரு குடும்பத்தைக் கெடுக்க நினைத்து சூழ்ச்சி தேடு கிற துரெண்ணத்திற்குப் பகவான் தக்க கூலி கொடுக்காமற் போகார். ஒரு வீட்டில் அவ்வீட்டுக்காரனைப் பகைத்து அவனுடன் பேச்சு வார்த்தை வைத்துக்கொள்ளாமல் விலகி, அவன் மனைவியிடம்மட்டும் ரொம்ப ரொம்ப விஸ்வாசம் போலக் குலாவி மயக்கி நடக்கிற பிரித்துக் கேடுக்கிற பாழுந் தந்திரம் மகா சண்டாளத்தனமானது. ஒருவர்மீது பகை என்பதும், இன்னொருவர்மீது உறவு என்பதும் பெரிய வஞ்சகம். ஒரு வீட்டில் வந்து 10, 15, 20-நாள்போலத் தங்கியிருந்துவிட்டு, போகும்போது அத்தனை நாளும் செல விட்ட அந்த வீட்டுக்காரனுக்குச் சொல்லிக்கொள்ளாமற் போவதென்பது நன்றித் துரோகிகளின் செய்கையாகும். போகும்போது சொல்லிக்கொண்டு போகக்கூட மனமில் லாத அத்தனை துவேஷமும் பகையும் வீட்டுக்காரன்மீது கொண்டவர்கள் அவன் வீட்டிற்கு வராமலே யிருந்துவிடு வதுதான் சரி. வீட்டுக்காரன் இல்லாத சமயம் பார்த்து அவன் வீட்டுக்குள் நுழைவது யோக்கியர்களின் செய்கை யல்ல. ஸ்திரீ சிந்தகனெனக் கண்டு அவன் தப்பு நடத்தை யறிந்து கண்டித்து சந்தேகித்து இனி வரவேண்டாமென்று ஆணையிட்டுத் தடுத்துங்கூட, ரகசியமாய் வருகிறதற்கு முயலுகிறதானது சண்டாளத்தனமான நீசச் செயலாகும்.

லண்டனில் நடந்த ஆகாய விமானப் போட்டிப் பந்தயத்தில் பிரிட்டிஷ் விமானிகள் 2-நாள், 23-மணி, 18-நிமிஷத்தில் 11300 மைல்கள் பிரயாணம் செய்திருக்கின்றனர். சராசரி மணிக்கு 119—மைல் வேகத்தில் சென்றுள்ளார்.

அமிர்தகுணபோதினி

பவ௵ தை௴ 1௳

பழக்கத்தின் அந்நியோந்நியம்.

வெவ்வேறு ஜாதி ஜந்துக்கள் பேதமில்லாமல் நேசிக்கும் விசித்திரங்கள்.

இளுந்திறன் கெட்டு, அழகிய இல்லாள் படைத்தார்க்கு நாளும் துயர் படிந்திடும் ஞாலத்தில் என்பர். இதை மறுப்பதற்கில்லையாயினும், ஆளுதற்குச் சக்தியற்றவனுக்குங்கூட ஒரு உத்தமி மனைவியாக வாய்ப்பாளாயின், அவள் சத்தியவதியாய்ப் பதிவிரதாங்கனையாகவே பரிமளித்திடுவாள். கணவன் தயாநிதியாய், மனைவி நற்குணமுள்ளவளாய் அமையின், அந்த இல்வாழ்க்கையினும் மிஞ்சிய இன்பம் உலகில் வேறு எது? "நாம் பிறருக்கு அளப்பது தான் நமக்கும் அளக்கப்படும்" என்பதைப் பெண்மணிகள் நன்குணர்ந்து, தங்கள் நாயகர்க்கு நலமுற ஒழுகி, பதிபக்தியுடன் நடந்துகொண்டால், அவர்களை மணந்த ஆடவர் கண்ணீர் விட்டுக் கதறவேண்டி யிராதே. சாதாரணமாய் வீட்டு வளர்ப்பு ஜந்துக்களான நாய்களும், பூனைகளும் அறிவுள்ளவைகளாய், பிரீதியாயும் மனக்களிப்பாயும் அந்நியோந்நியமாயுமிசைந்து, சண்டையில்லாமல் ஒத்து ஜீவிக்கின்றனவே! இப்படியிருக்க, மனித ஜாதியில் தம்பதிகள்கூட ஒருவருக்கொருவர் இணங்காமல், எப்பொழுதும் இரண்டு பட்டுக்கொண்டே பகையாளிகள்போல என்றைக்கும் போராட்டமும் மல்லாட்டமுமாய் இருப்பதற்குக் காரணம் என்னவோ விளங்கவில்லை.

ஃ

ஒரு பூனை பெரிய வேட்டை நாய் ஒன்றோடு சாப்பிட்டுக் கூட வளர்ந்து வந்தது. பூனைக்கும் நாய்க்கும் ஜென்மப்பகை என்பர்.

முதலில் தனது பிடிவாத புத்தியுடன் திமிர் பிடித்து முறைத்து விலகினின்றாலும், பிறகு தான் செய்தது சுத்த முட்டாள்தனமென்று தனக்கே தெரிந்துவிடுகிறது.

மாருன குணங்களையுடைய இரண்டு வேறு ஜாதி மிருகங்கள் அந்நியோந்நியமான நேசர்போல இணங்கி இருந்தது வியப்பன்ருே? மிகவும் புகழ்பெற்றதான ஒரு அராபிக் குதிரையை ஒரு பூனை நேசித்துச் சந்தோஷமா யிருந்ததாகச் சொல்லுகிருர்கள். மேற் சொன்ன அராபிக் குதிரையோடு ஒரு கருப்புப் பூனை மிகவும் நேசமா யிருந்துகொண்டிருக்கையில், ஒருநாள் அந்தக் குதிரை இறக்க, பூனை மிகவுமுருகி அப்பிணத்தைவிட்டு நகராமல், அதைப் புதைத்த பிறகு மெல்ல மெல்ல ஒரு வைக்கோல் போருக்கு நகர்ந்து போய் மிகத் துயரத்தால் நாளுக்குநாள் தேகம் மெலிந்து கடைசியாகத் தானும் இறந்தது. இவ்வண்ணமே, பல குதிரைகளும் பூனைகளும் ஒன்றுக்கொன்று நேசமாயிருந்ததாகப் பல கதைகள் கேள்வியுற்றிருக்கிருேம்.

ஃ

ஒரு பெரிய அரமனைக் குதிரை லாயத்தில் பூனையும் குதிரையும் நேசித்து வளர்ந்து வந்தன. அந்த லாயத்தில் இரண்டும் படுக்க இடமின்மையால், குதிரை பூனைக்கு அசௌக்கியம் நேராமலிருக்கும்படி தான் நின்றுகொண்டே தூங்குமாம். குதிரை லாய விசாரணைக்காரர்கள் அதனுல் குதிரைக்கு சௌக்கியக்குறைவு வரும் என்றெண்ணி, அதற்குச் சௌக்கியம் தேட வேறு வகை தெரியாமல் பூனையை வெளியே அடித்துத் துரத்திவிட்டார்கள்.

ஃ

ஒரு ஜமீன்தாரிடத்தில் நல்ல ஜாதிக் குதிரை யொன்றும் வெள்ளைப் பூனை யொன்றும் இருந்தன. பூனை தினந்தோறும் குதிரை லாயத்திற்குப் போய் அங்கிருக்கும் சுண்டெலிகளை வேட்டையாடிப் பின்பு சுகமாகத் தூங்கும். இப்படியிருக்க, அந்த ஜமீன்தார் குதிரையுடன் வேறிடத்திற்குக் குடி பெயர்ந்தார். பூனை குதிரையை விட்டுப் பிரிந்ததனுல் ஓயாமல் இரைச்சலிட்டு முறமுறுக்கவே, அதையும் குதிரை போன இடத்திற்கு அனுப்பிவிட்டார்கள். அந்தப் பூனை குதிரை அருகிற் போய் அதன் பக்கத்தில் சுருட்டிக்கொண்டு படுத்தது. அதன் ஐந்து குட்டிகளும் நிச்சிந்தையாய்த் தூங்கின. குதிரையோ தன் சமீபத்திலிருக்கிற பூனைக்குட்டிகள்மீது கவனம் வைத்து அவைகளை மிதித்துப் போடுவோமோ என்று பயந்து ஜாக்கிரதையாய் நடமாடும். சற்று நேரத்துக்குப் பின்பு பூனை தனது

ஸ்திரீகளுக்கு சுதந்திரமில்லையென்று சொல்வோர் சில வீட்டுப் பெண்களிடம் அவ்வீட்டுப் புருஷர்கள் படும்பாட்டைப் பார்த்தால் தெரியவருமாம்! பெண்களுக்கு சுதந்திரமும் பெரிய மனுஷத்தன்மையும், நீண்ட கால்களும் இரண்டொரு குழந்தைகளைப்பெற்ற உடனே உண்டாகிவிடுகிறதாம்! அதற்குப் பிறகு "மாமி" என்கிற சக்ரவர்த்தினிப் பட்டமும் கிடைக்கிறதாம்.

நேசனாகிய குதிரையானது குட்டிகளைப் பார்த்துக்கொண்டிருக்கும் என்று நம்பி விட்டுவிட்டு வெளியே போகும். அது போனவுடன் குட்டிகளைக் குதிரை கண்காணித்துக்கொண்டிருக்கும். பூனையோ தன் குட்டிகள் இருக்குமிடத்திற்குச் சிறுவர்களாவது வேற்று மனிதர்களாவது வந்தால் மிகக் கவலையோடும் பயத்தோடும் இருந்த போதிலும், குதிரை தன் கண்ணுக்கு முன்பாகவே குட்டிகளைப் பார்வையிடுவதில் கொஞ்சமேனும் பயப்படவுமில்லை, கவலைப்படவுமில்லை.

ஃ

மற்றோரிடத்தில் ஒரு பூனை தனது குட்டிகளை இழந்து விட்டுக் கோபத்தோடும் விசனத்தோடும் இருக்கும்பொழுது, தனக்கு ஆகாரமாக ஒரு சிறுவன் போட்டுப்போன ஒரு கருப்புப் பக்ஷியை மிக அன்போடு வளர்த்து அதை விட்டுப் பிரியாமல் அன்னையைக் காட்டிலும் அதிக ஆதரவாய்ப் பாதுகாத்து வந்தது. வேறோரிடத்தில் ஒரு பூனையும் சுண்டெலிகளும் ஒரு கூட்டில் அடைக்கப்பட்டிருந்தன. நாள் வரிசையில் எலிகள் பூனையோடு நேசம் கொண்டு அதை இழுக்கிறதும் மெல்லக் கடிக்கிறதுமாயிருக்க, பூனை கோபங் கொள்ளாமல், அதிகமாய்த் தொந்திரவு செய்கிறபொழுது மாத்திரம் மெல்லக் கன்னத்தில் அடிக்கும்.

ஃ

ஒரு கனவான் ஊர்க்குருவி யொன்றை வளர்த்துப் பூனையிடம் காப்பாற்றும்படியாக விட்டு வைக்க, பூனை குருவிக்கு ஜன்ம விரோதியா யிருந்தும், அதற்கொரு தீங்கும் செய்யாமலிருந்தது. ஒருநாள் மற்றொரு பூனை அதை வந்து எதிர்க்க, அதைக் கண்டு அந்தப் பூனையை அடித்துத் துரத்திவிட்டு மிக அன்பாய் அதற்கு யாதொரு சங்கடமும் வராமல் அது பாதுகாத்துக்கொண்டிருந்தது.

ஃ

இரண்டு குதிரைகள் தண்ணீர் குடிக்கப் போய்க்கொண்டிருக்க, அவைகளில் ஒரு குதிரையோடு நேசித்திருந்த பூனையானது பின் தொடர, அப்பொழுது அதைக் காட்டிலும் பலமுள்ள ஒரு நாய் வந்து அதைத் தகைய, அந்தப் பூனையின் நேசனாயிருந்த குதிரை அறுத்துக்கொண்டு நாயை நன்றாய் உதைத்து ஒரு தச்சன்

தேயிலைக் கஷாயம் கசப்பாயினும் பாலுஞ் சக்கரையும் சேர்த்துக் கசப்பை மாற்றிப் பருகுவோர் அநேகர். இப்படியே இந்த ஜாதிக்கு இயற்கையாய் அமையாத வழக்கங்களெல்லாம் அப்யாஸத்தால் ஆநந்தகரமாக மாறுகின்றனவேயன்றி உண்மையில் ஆநந்தகரமல்ல. எது வேண்டுமென்று ஸ்வபாவ தர்மத்துக்கு விரோதமாய் அனுஷ்டிக்கப்படுகிறதோ அவ்வழக்கம் ஒரு வீண் செலவேயாகும். அதிகப்பிரஸங்கித்தனமுமாகும்.

கடையண்டை தள்ளிவிட்டு மறுபடியும் தண்ணீர் குடிக்குமிடத்திற்குப் போயிற்று.

ஃ

இங்கிலாந்தில் ஒரு மிருகக் காட்சிச் சாலையில் ஒரு சிங்கத்திற்கு இரையாக ஒரு நாய்க்குட்டியை வேடிக்கை காணவந்த ஒருவன் போட்டுச் சென்றான். நாய்க்குட்டியோ நடுங்கிப் பதுங்கியது. சிங்கம் அதனிடத்து இரக்கம்கொண்டு ஒரு தீங்கும் செய்யவில்லை. பிறகு சிங்கமும் நாய்க்குட்டியும் அதிநேசமாய்விட்டன. சிங்கத்திற்குப் போடும் இரைகளை நாய்க்குட்டியே அத்தனையும் புசிக்க நினைத்து சிங்கத்தை எதிர்க்கும். சிங்கமோ சாந்தமாய் நின்று நாய்க்குட்டி புசித்தபின்பு, தான் தின்னத் தொடங்கும். இவ்வித நேசத்தில், நாய்க்குட்டி ஏதோ நோயால் இறந்துபோக, அன்று முதல் சிங்கமும் உண்ணுமற் கிடந்து உயிர் விட்டது. சிங்கத்தையும் நாய்க்குட்டியையும் ஒன்றாகச் சேர்த்துப் புதைத்தனர்.

ஃ

அந்திரோகிலிஸுும் சிங்கமும் என்ற சரிதை பிரஸித்தி பெற்றது. கார்த்தேஜ் நகரில் அந்திரோகிலிஸு ஒரு அடிமை. தன் எஜமானனின் துன்பங்கள் தாங்காது தப்பி வனத்திற்கோடிப் பசியால் வருந்தி ஒரு குகையில் மறைந்திருந்தான். அக்குகையைத் தனது வாசஸ்தலமாகக்கொண்ட சிங்கமொன்று மிக்க நோயுடன் உபாதையோடும் நொண்டிக்கொண்டு அக்குகைக்கு வந்தது. அந்திரோகிலிஸு தன்னைச் சிங்கம் கொன்று தின்றுவிடுமென நடுங்கினான். சிங்கமோ தன் பாதங்களைத் தூக்கிக்காட்ட, அந்திரோகிலிஸுும் தைரியமடைந்தவனாய்ப் பாதங்களைப் பிடித்துப் பார்த்து ஒரு பெரிய முள் உள்ளுக்கேறி வீங்கியிருந்ததை யறிந்து, முள்ளை மெதுவாகப் பிடுங்கி சீயையும் பிதுக்கி அதைக் குணப்படுத்திவிட்டான். அந்த நன்றியை மறவாத சிங்கம் அதுமுதல் அவனுக்குத் தோழனாகி, அவனுக்கு ஆகாரமும் தேடிக்கொண்டு வந்தது. பிறகு அந்திரோகிலிஸுவின் எஜமானனால் அனுப்பப்பட்ட சேவகர்கள் அந்திரோகிலிஸுவைக் கண்டுபிடித்துக் கொண்டுபோக, அக்கால சட்டத்தின்படி அவனை ஒரு சிங்கத்திற்கு இரையாக்கத் தீர்ப்பாயிற்று. அவன் மிக்க பசியுடன் கிடந்த ஒரு சிங்கத்தின்முன் விடப்பட்டான். அச்சிங்கம் வெகு உக்கிரகத்துடன் பாய்வதற்கு வந்து, திடீரென்று, அந்திரோகிலிஸை அன்புடன் நக்கத்தொடங்கிற்று. அது அவனுடன் பழகிய சிங்கமே. அந்த வரலாற்றை

கை ராட்டினம் 20-ஆயிரம் ஹிந்து முஸ்லிம் ஸ்திரீகளுக்குத் தொழில் கொடுத்திருக்கிறது. சுமார் 5000-கிராமங்களில் நூல் நூற்கும் சங்கங்கள் இருக்கின்றன.

யறிந்து, அவன் குற்றத்தை மன்னித்து சிங்கத்தையும் அவனுக்கே கொடுத்துவிட்டார்கள்.

ஃ

இன்னுமோரிடத்தில் ஒரு நாய் மிக்க அறிவைத் தோற்றச் செய்யும் விதமாய்த் தன் எஜமானியின் குதிரையிடத்திலிருந்த அன்பைக் காண்பித்தது. ஒருநாள் தனக்குப் பிரியமான குதிரை யொன்று கீழே விழுந்து காயம்பட்டுச் சற்றுத் தேறினவுடன் முதல் தடவை வயலில் வேலை செய்யப் போனபொழுது, அதன் எஜமானி சில கிழங்குகளையும் பழங்களையும் அது சாப்பிடும்படியாக அந்த வயலில் கொண்டுவந்து கொடுக்க, அதை எல்லாம் பார்த்தி ருந்த அவள் நாய் காற்றில் அடிபட்டு விழுந்த சில அத்திப்பழங்க ளைக் குதிரையினிடத்தில் இருக்கிற பிரியத்தைக் காண்பிப்பதற்கா கக் குதிரையின் முன்பாகப் பரப்பி அவற்றைப் புசிக்கச் செய்து, அது புசித்தவுடன் மிகவும் ஆநந்தித்தது.

ஃ

குதிரைக்கும் நாய்க்கும் இவ்விதமான தோழமை சாதாரணந் தான். குதிரைகள் பெட்டைக் கோழிகளோடு நேசங்கொண்டு சந்தோஷமா யிருந்திருக்கின்றன என்பது நம்பக்கூடாத விஷயமாய் இருந்தபோதிலும், ஒரு குதிரை தனக்குச் சரியான தோழனில்லா மையினால் ஒரு பெட்டைக்கோழியோடு நேசித்து, அது தன் காலைப் புறண்டுகிறதிலும் தன்னைப் பார்த்துக் கூவுகிறதிலும் மிகக் களிப்பை அடைந்திருந்ததென்றும், அந்தக் கோழியைத் தவறி மிதிக்கப் போகிறோமென்ற பயத்தால் அதிக ஜாக்கிரதையாகத் தன் காலை யசைக்கும் என்றும் நம்பிக்கையுள்ள ஒரு பெரிய மனிதர் சொல்லி யிருக்கிறார்.

ஃ

ஒருகால் ஒரு வேட்டை நாய் ஆண் பெண் வாத்துகளிரண்டில் ஆண் வாத்தைக் கொல்ல, அதன் கெட்ட காரியத்துக்கு சிக்ஷையாக இறந்துபோன வாத்தை அந்த நாயின் கழுத்தில் கட்டிவிட்டார்கள். அந்த நாயின் கழுத்தில் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்துப் பெண் வாத்து நாய் போன இடமெல்லாம் கூடத் தொடர்ந்துகொண் டிருக்க, அந்த நாய்க்கும் வாத்துக்கும் எவ்விதமாகவோ சமாதானம் உண்டாய்ச் சில நாள்களுக்குப் பின்பு அவை நேசர்களுமாகி, ஒரே

ஒருவர் எப்பொழுதும் சத்தியத்தை அனுஷ்டிக்க வேண்டுமென உண் மையிலேயே விரும்பினால் அவர் வாயையே திறக்கக் கூடாது. எப்பொழு தும் மௌனஞ் சாதிப்பது அனுஷ்டான சாத்தியமற்ற காரியமாதலால் எப் போதும் உண்மையுடன் நடக்க முடியாது.—கனம் சாஸ்திரிகள்.

இடத்தில் சாப்பிடுவதும் படுப்பதுமா யிருந்தன. மேலும், நாய் வேட்டைக்காக வெளியே போனால், பெண் வாத்தானது அதன் பிரிவை ஆற்றக்கூடாமல் அலறும்.

ஃ

ஒரு ஆற்றங்கரையில் ஒரு நாயும் பன்றிக்குட்டியும் நேசமா யிருந்தன. எதிர்க்கரையில் உணவு தேடி வருவதற்காக, நாய் கழுத்து மட்டும் ஜலத்தில் இறங்கிப் பன்றியைக் கழுத்தில் உட்கார வைத்து, அதன் முன்னங்கால்களால் விழவொட்டாமல் தன் கழுத்தைக் கட்டிக்கொள்ளச் சொல்லி, ஆற்றுக்கு அக்கரையில் கொண்டு வந்துவிட, அவ்விடத்தில் இரண்டும் இரை தேடித் திரிந்து, அந்தியில் முன்போனதுபோலவே திரும்பியும ஆற்றைக் கடந்து தங்கள் இருப்பிடத்துக்கு வந்தனவாம். இப்படிச் பல வெகுநாள் செய்து வந்தனவென்றும், பன்றி இரை தேடி முடியும்வரை நாய் காத்துக் கிடக்குமென்றும் சொல்லுகிறார்கள்.

ஃ

நாய் இன்னவிதமாக இருக்குமென்று அறியாத ஒரு முயல், முயல் இன்னவிதமாக இருக்குமென்றறியாத ஒரு நாயைக் கண்டும், விரோதக் குறிகள் ஒன்றேனும் காண்பிக்காமல் இரண்டும் அந்நியோந்நியமாயும் நேசமாயும் இருந்தன.

ஃ

ஓரிடத்தில் ஒருவருடைய லாயத்தில் சில வெள்ளை எலிகள் வலையில் அகப்பட்டுக்கொண்டன. அவர் தோழர் ஒருவர் அந்த எலிகளில் சிறியதான ஒன்றின்மேல் ஆசைகொண்டு அதை வளர்க்க யத்தனித்துச் சீக்கிரத்தில் அதற்கு ஒரு செல்லப் பெயரும் கொடுத்தார். பிறகு ஒரு நாயினிடத்தில் காப்பாற்றும்படி அதை ஒப்புவிக்க, நாய் சுபாவமாய் எலிக்கு விரோதியா யிருந்தபோதிலும், அதை வளர்ப்பெலி என்றறிந்து அதற்கு ஒரு தீங்கும் செய்யாமல் பலவாறு துன்பங்களினின்றும் நீக்கிக் காப்பாற்றத் தொடங்கிற்று. எவனாகிலும் வேற்று மனிதன் அதன் அறைக்குள் வந்தால், எலியை மறைத்து வைத்துத் துன்பப்படுத்த எண்ணமில்லையென்று தெரிகிற வரையில் அவனைப் பார்த்து உறுமிக்கொண்டும், அவனைக் கடிக்கிறதுபோலப் பல்லைக் காட்டிக்கொண்டுமிருக்கும். இப்படி ஆச்சரியமாய் ஒத்துப்போன சிநேகிதர்கள் ஒரே பாத்திரத்தில் சாப்பிட்டுக்

மனிதன் மாறுகிறான்; அவனது கலை நாகரீகங்கள் மாறுகின்றன; ஆனால், உண்மை, அழகு, நற்குணம், கடவுள் பக்தி இவை யாவும் நிரந்தரமா யிருக்கின்றன.—ஸ்ரீமதி ஸரோஜினி தேவி.

கொண்டும், ஒன்றாய்த் தோட்டத்தில் விளையாடிக்கொண்டுமிருந்தன. எப்பொழுதெப்பொழுது நாய் தூங்குமோ அப்பொழுதெல்லாம் நாயின் காலின் இரண்டு கால்களுக்கு நடுவில் எலி பதுங்கிக்கொண்டிருக்கும். நாயோ சாப்பிடுகிற மேஜையின்மேல் எலி தாவிக் குதித்து அங்கிருந்து கொண்டுவரும் திண்டிகளைத் தின்னக் கீழே காத்துக் கொண்டே யிருக்கும். இப்படி யிருக்க, மற்றொருநாள் நாயும் எலியும் ஓடி விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது, வலையில் அகப்பட்ட ஒரு எலியை அந்நாயின் முன்பாகக் கொண்டுவந்து உதறினார்கள். வலையிலிருந்து அந்த வெள்ளெலி கீழே விழுந்தவுடனே இரண்டு எலிகளைப் பூமியின்மேல் தன் முன்பாகப் பார்த்த நாய் இரண்டு எலிகளும் ஒரேமாதிரியா யிருந்தும், புதிதாய் வந்த எலியை வளர்ப்பெலி அல்லவென்றறிந்து அதைக் கொன்றுவிட்டது. அவ்விடத்தைவிட்டு அந்த மனிதன் செத்த எலியோடு வெளியே போகிற வரையிலும் வளர்ப்பெலியை நாய் காப்பாற்றிக் கொண்டிருந்தது. அந்த எலியின் சொந்தக்காரர் வேறோரிடத்திற்குக் குடிபோனபொழுது எலியையும் கூடக் கூட்டிக்கொண்டு போய் விட்டார். போன ஒரு மாதத்திற்குள் எலி வெகுவாய்த் தான் நேசித்திருந்த நாயைவிட்டுப் பிரிந்த துயரத்தினால் தானே இறந்து போய்விட்டது.

ஃ

ஒரு நாயும் சிங்கமும் நேசமாயிருக்கிறது மிக ஆச்சரியமென்று சொல்லுகிறார்களாயினும், அத்தன்மையான சிநேகிதங்கள் அபூர்வமல்ல. காடுகளில் அரசனாய்த் திரிந்துகொண்டிருக்கும் சிங்கம் வீட்டில் மனுஷியனால கட்டப்பட்டால், நாய்களுடன் விசேஷமாய்த் தோழமைகொண்டு ஒத்து வாழ்வதுண்டு. ஒரு மிருகாசயத் தோட்டத்தில் பெண் சிங்கம் ஒன்று நோயால் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது அங்கிருக்கும் எலிகள் அதைக் கடித்துத் தொந்தரவு செய்ய, அவைகளைத் துரத்த ஒரு நாய் கூட்டிற்குள் விடப்பட்டது. நாய் உள்ளே நுழையும்போது உறுமின சிங்கம் அது ஒரு எலியைப் பிடித்துக் கொல்லக்கண்டு, தனக்குச் சகாயம் செய்ய வந்ததென்று எண்ணி அதனோடு நேசிக்க யத்தனித்தது. அதை நகைப்புகளால் இச்சகமாய்த் தன் பக்கத்தில் வரவழைத்துத் தன் மார்பில் அணைத்துக்கொண்டது. அதுமுதல் இராத்திரி

சில பெண்கள் ருதுவடைந்த காலத்தைத் தொடர்ந்தே வாயு சம்பந்தப்படுவதால் அவளுக்கு ஆகவேண்டிய மாதப்போக்குச் சிக்குப்பட அதே மூலமாய் வாதஜன்னி முதலானவை யுண்டாகி அதன் சேஷ்டையால் அப்பெண்கள் பலவித கோரணிச் செய்கைகளைச் செய்துகாட்ட நேரிடுகிறது. அதையும் சில முட்டாள் குடும்பஸ்தர்கள் தம் பெண்ணைப் பேயே பெண்ஜாதியாக்கிக்கொண்டுவிட்டதென்று மருண்டு பலவிதமாய் அதை நிவர்த்தி செய்யப் பாடுபடுவார்கள்.

தோறும் அந்த நாய் சிங்கத்தின் மார்பிலேயே படுத்துக்கொண்டு, அதன் நித்திரையைக் கெடுக்க வரும் எலிகளைத் துரத்திக்கொண்டே யிருந்தது.

ஃ

மற்றொரு தோட்டத்தில் ஒரு கூட்டில் ஆண் பெண் இரண்டு புலிகளுடன் ஒரு நாய் சற்றேனும் அச்சமில்லாமல் பார்க்கிறவர்களுக்கு விநோதமாய்ப் பேதமில்லாமல் விளையாடிக்கொண்டிருந்தது. ஒருநாள் இரண்டு புலிகளும் ஓர் உயர்ந்த படுக்கையின்மேலே உறங்க, ஆண் புலியின் வால் கீழே தொங்கிக் கிடந்தது. நாய் வேண்டுமென்று வாலைப் பிடித்திழுத்தது. அந்தப் புலி மிருதுவாய்க் கோபித்துக்கொண்டும் நாய் வாலை விடாமையினால் ஒரு தடவை இரைந்து உறுமவே, அந்த நாய் உடனே வாலை விட்டுவிட்டு முதுகின்மேல் குதித்து அங்கே படுத்துத் தூங்கிவிட்டது.

ஃ

இப்படி வெவ்வேறு ஜந்துக்களின் நேசம் விசித்திரமான வகையாய் இருந்தாலும், ஒவ்வொரு சமயத்தில் "தீயாரைச் சேர்ந்து ஒழுகல் தீது" என்றபடி முடிவில் யமபாசம்போலாய் விடுவதுமுண்டு. அதெப்படியென்றால், ஒரு சிங்கம், கரடி, நாய் இம்மூன்றும் வெகு காலம் நேசரா யிருந்துகொண்டிருக்கையில், ஒருநாள் அகஸ்மாத்தாய் நாயானது கரடிக்குக் கோபம் வரும்படி செய்ய, கரடி நாயைக் கொன்றுவிட்டது. தோழனான நாயை இழந்த சிங்கமும் மிகக் கோபத்தோடு கரடியைக் கொன்றுவிட்டது. துஷ்ட சகவாசம் எப்பொழுதும் கெட்டதே என்பது வெகுவாய்த் தெரிந்த விஷயமேயல்லவா? இம்மிருகங்களுடைய நடத்தையையே நிதர்சனமாய்க் கொண்டு, கெட்ட சகவாஸத்தை விலக்கி, நல்லோரோடிணங்கி அந்நியோந்நியமாய் ஒத்து வாழ்வது அனைவருக்கும் கடமையாம். எப்பொழுது தன் பலத்திற்கும் சக்திக்கும் செல்வத்திற்கும் மேற்பட்ட ஒருவருடன் கூடி வாழ நேருகிறதோ, அப்பொழுது தன்னால் இயன்றமட்டும் வேற்றுமையும் பிரியக்கேடும் இல்லாமல், தனக்கு மேற்பட்டவரின் அபிப்பிராயத்துக்குத் தன்னால் ஆமளவும் இசைந்து அனுசரித்து நடந்து, தன் அபிப்பிராயங்களை விட்டுக் கொடுத்தாயினும் ஒத்துப்போவதே நன்மையாகும். தனக்கு மேற்பட்ட சக்திவந்தனைப் பகைத்துக்கொள்வதிலும் நேசித்துக்கொள்வதே சாமர்த்தியமாகும். அந்த சக்திவந்தனோடு இசைந்து நடக்கத் தன் மனஸாக்ஷி சம்மதிக்காவிடில், அவனால் தனக்குத் தீங்கு சூழாதவாறும், எந்தக் கஷ்ட

குரூரமான முறையில் அவமதிப்பது அப்போது சுலபமாகத் தோன்றினும், பின் எந்தக் காலத்துக்குமே ஒன்று சேரா திருக்கும்படியான துவேஷத்தையும் பிளவையும் விளைவிப்பதற்குத் தப்புவதில்லை.

மும் தனக்கு நேரிடாதவாறும், தான் எதற்கும் தவித்துத் திகைக்காதவாறும்—மற்ரெரு பலமான இடத்தைத் தேடிப் பிடித்துக்கொண்டு, அதற்குப் பின்னர் நேசத்தோடேயே தான் விலகிக்கொண்டு தூரப்போய்விடுவது உத்தமம். மொத்தத்திற்குத் தனக்கு மேற்பட்ட சக்தியுள்ளோரிடம் ஒருமித்துக் கலந்திருக்கையில், உண்டாகிற ஒரு அற்ப பிழையும் மனஸ்தாபமும் ஒரு சிறு நெருப்புக்குச் சமமாகவே இருந்து, பெரும் வைக்கோற்போரைச் சுட்டெரிக்கக்கூடிய தன்மையுடையதாகி, அந்த சக்திவந்தனிடமிருந்து தான் பெற்றுவரும் எல்லா நலங்களையும் அழித்துவிடக்கூடுமானதால், அந்த சக்திவந்தனை சிங்கம், புலி, கரடி இவைகளுக்குச் சமமாக எண்ணி, ஜாக்கிரதையுடனும் பழகி, என்றும் எச்சரிக்கையாயிருப்பதே அபாயத்துக்கிடமில்லாத வழியாகும். பழக்கத்தின் அந்நியோந்நியம் எவ்வளவு முற்றி முதிர்ந்து இருந்தாலும், அங்குங்கூடதீக் காய்வார்போன்று எப்பொழுதும் ஒரு நிதானம், ஒரு அளவு, ஒரு எல்லை, ஒரு மரியாதையுடன் நடந்து, தன் மானம் காத்துக்கொள்வதே ஒழுங்கும் க்ஷேமமுமாகும் என்பதை அறியக்கடவோம்.

ஜீவிய சந்தாதார்.

நமது "அமிர்த குணபோதினி"யின் அபிவிர்த்தியை மனஸ்பூர்வமாய்க் கோரி, நாகூர் மருந்துக்கடை ஸ்ரீமான் கு. பா. கே. காசிநாதன் செட்டியாரவர்கள் தம்மை ஜீவிய சந்தாதாரராகச் சேர்த்துக்கொள்ளும்படி ரூபாய் பதினைந்தும் அனுப்பி யிருப்பதை வந்தனத்துடன் பெற்றுக்கொண்டோம் இவ்விதமே மற்ற அன்பர்களும் ஜீவிய சந்தாதாரராகச் சேர்ந்து, "அமிர்த குணபோதினி"யை விருத்தி செய்து, என்றைக்கும் ஆதரிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

மானேஜர்.

ஒரு மகாத்மாவைத் தலைவராகக்கொண்ட நிலையில் சாதாரண ஜனங்களிடையே சொல்லுக்கும் செய்கைக்கும் வித்தியாஸம் ஸகஜமாக இருக்கத்தானிருக்கும். காரணமென்ன? மகாத்மாவினுடைய மனோ பக்குவமும் திடமும் சாமான்ய ஜனங்களுக்கு இல்லாததால் தான். மகாத்மா ஆத்ம சக்தியை வளர்ப்பதில் திறனுள்ளவராகி ஜனங்களும் அவ்விதமே செய்ய வேண்டுமென்கிருர். ஜனங்களோ மிருக பலத்தையே கொண்டவர்கள். மிருக பலத்தைவிட ஆத்ம சக்தியை வளர்த்துக்கொள்வது அதிகக் கஷ்டமாயிருப்பதாக ஜனங்கள் நினைக்கிருர்கள். இதனுலும் மகாத்மாவின் தூய வழிகளை அப்படியே பின்பற்ற சாமான்ய ஜனங்களால் முடியாமற் போகிறது.



1. உலக அனுபவத்தை முற்றும் உணர்ந்துகொண்டோமென்று இறுமாப்படைகிறோம். பிறகு ஒவ்வொரு விஷயங்களிலும் நாமே ஏமாறி மோசம்போய், அசனல் நடக்கும் விபரீதங்களை யெல்லாம் பார்க்கும்போது இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன வென்று உணர்கிறோம்.

2. தங்கள் க்ஷேமத்தில் அக்கறை கொண்டவர்கள் கூறும் புத்திமதிகளுக்குச் செவி சாய்க்காமலே மகா உக்கிரகத்துடன் அவர்களை எடுத்தெறிந்துத் தாறுமாறாகப் பேசிவிடுகிறார்கள். பிறகு மனம்போகும் வழிச் சென்று படுகுழியில் விழுந்துப் பரிதபிக்கும்போது இக்கோபக்கட்டைகளுக்குப் புத்தி வருகின்றது.

3. பணக்காரன் என்னதான் தவறுகள் செய்திடினும், அது ஒரு தவறுதலாகப் பிறர் மனதில் படுவதில்லை. பக்கத்திலிருப்போரும் அவனுடன் சேர்ந்துகொண்டு ஆடிப் பாடுகிறார்களே யன்றி அவன் குற்றத்தை பளிச்சென்று எடுத்துக்காட்ட முன்வருவதில்லை. முன்வரின் பணக்காரனின் தயவு கெடுமென்று பின்னடைகிறார்கள் போலும்!

4. வீடு தேடிவரும் அன்பற்றவர்களை உபசரிப்பதை ஒரு பெருஞ் சுமையாக உள்ளம் எண்ண வைக்கிறது. வெளிப்பார்வைக்கு "என்ன செய்வது, வந்துவிட்டார்களே" யென்று எண்ணியபடி முகமலர்ந்து காணப்படினும், அகம் அவர்கள் எப்போது வீட்டைவிட்டுத் தொலைவார்களோ வென்று எதிர்பார்த்து முணுமுணுத்தவண்ண மிருக்கிறது.

5. வீட்டில் ஒரு பொருள் இருக்கும்போது அதன் அருமை தெரிவதில்லை; மனம்போனபடி செலவு செய்து விடுகிறோம். பிறகு அப்பொருள் தீர்ந்துபோய்க் கஷ்டப்படும் பொழுதுதான் அதன் அருமை தெரிகிறது; அத்துடன் அதை நிதானமாகக் கையாண்டிருக்க வேண்டுமென்ற எண்ணமும் மனதில் உதிக்கிறது.

6. கொண்ட கணவனுக்குத் தெரியாமல் காசு சேர்த்து அண்டைவீட்டு அம்மாக்கண்ணுவிடம் வட்டிக்குக் கொடுத்து வைக்கிறாள். அந்த அம்மாளோ முடிவில் அதை விழுங்கி ஏப்பமிட்டுவிட, இவள் நடந்த சங்கதியை வெளியே சொல்ல முடியாமலும், கொடுத்த காசை அவளிடமிருந்தும் பெற முடியாமலும் தத்தளிக்கிறாள்.

7. அவர்கள் நிலைமைக்கிரங்கி நாம் வீட்டிற்குள் தங்க சற்று இடங்கொடுத்தால், அவர்கள் நம்மைப்பற்றி இங்குமங்கும் கோள்கூறிப் பெருங் கலகத்தை உண்டுபண்ணி விடுகிறார்கள். வீட்டைவிட்ப் போகும்படிக் கூறினாலோ "முடியாது. உன்னாலானதைப் பார்" என்று நெஞ்சத் துணி

தன் அபிப்பிராயத்துக்கு மாறுபட்டவர்களோடு சேர்வதானது எப்பொழுதும் தொல்லை விளைவதற்கு விதைவிதைத்துக் கொள்வதாகும்.

வோடு கூறி நம்மையே எதிர்க்கத் தொடங்குகிருர்கள்.

8. வாழ்ந்தாலும் பாரார்; தாழ்ந்தாலும் தாங்கார். இது சில உறவினரின் பிறவிக்குணம்! இவர்களுக்கே ஆக்கிக் கொட்டவேண்டியிருக்கிறது. அடிக்கடி வீடுநிறைய விருந்தினராய் வருவோரும் இவர்களே.

9. பெரிய மனிதன் என்பதினுலும், பெரிய உத்தியோகத்திலிருப்பவன் என்பதினுலும் அவன் கூறுவதெல்லாம் சரியென்று நினைப்பதற்கும் நம்புவதற்குமில்லை. தவறுதல்கள் மோசங்கள் எவரிடமுமுண்டு.

10. சிலர் வெளியில் எறிகிற எச்சிலையில் கூட ஒரு சாதம் வைக்கிறதில்லை. இது நாய் நக்கிப்போட்ட இலையா என்று பார்ப்போர் நினைக்கும்படியாகிறது.

11. தலைமூளை யுருகப் படித்து பி. ஏ; எம். ஏ, முதலிய பட்டங்களைப் பெற்று விடுகிருர்கள். ஆனுல், உள்ளத்திலே உதயமாகும் விஷயங்களை அடுக்கடுக்காகத் திரட்டி ஒழுங்குசெய்து எழுதி வெளியிடும் படியான சக்தி சிலருக்கே அபூர்வ வரமாக வாய்த்திருக்கிறது.

12. சௌகரியத்தையும் சாவகாசத்தையும் கவனியாமலே சிலர் தாராளமாய்ப் பிறர் வீட்டுக்குள்ளே நுழைந்து விடுகிருர்கள். இவர்களுக்கும் மிருகங்களுக்கும் பேதம் என்னவோ! நாய்கூட திறந்த வீட்டில் மடமடவென்று புகுந்துவிடுகிறது.

13. வீதி வழியாகச் செல்லும் பந்து மித்திரர்களைக் காணும்போதெல்லாம் "எங்கே என்ன காரியமாகப் போகிறீர்கள்?" என்று கேட்பதையே சிலர் வழக்கமாகக் கொண்டிருக்கிருர்கள். அப்படிக் கேட்கிறவர்களைச் சற்றே உதவிக்குத் துணை வரும்படி அழைத்தாலோ அப்போது வேறு பக்கத்தில் முகத்தைத் திருப்பிக்கொள்கிருர்கள்!

14. தாய் தந்தையரிடம் சண்டையிட்டுவிட்டு ஓடிவந்தவனை வீட்டில் வைத்தாதரித்துப் பின்னர் அவனுக்குக் கலியாணம் செய்வதற்காகப் பணத்தை வாரியிறைத்த பெரிய தந்தையையே "லோபி. பிசுனுறி" என்கிருன் இந்த நம்பிக்கைத் துரோகி. ஏனே இது? உபகாரம் செய்தவர்களுக்குத் திட்டே லாபம்.

14. காரியம் ஆகிறவரையில் நம் காலைப் பிடித்துக் கெஞ்சிக் கூத்தாடுவது. அது ஆன பிறகோ—?

16. பிறருடைய கலங்கலான நிலைமையைக் கண்ணுரக் கண்டாலுங் கூட சிலர் மனம் உருகுவதில்லை. ஜாடையாக அந்த சமயம் நழுவிச் சென்று விடுகிருர்கள். அந் நிலைமை தங்களுக்கு வராது என்ற எண்ணம் போலும்!

17. தங்களை எதிர்க்கக் கூடியவர்கள் எவருமில்லையென்று திமிர் பிடித்துத் துள்ளுகிருர்கள். ஆனுல், காலம் வந்ததும் இப்பாவிகளின் அட்டகாசம் அடியோடு அடங்கிவிடுகிறது. அந்தக் காலத்தின் போக்கை—சக்தியை அடக்க, இவர்களால் முடிகிறதா? அப்போது மட்டும் எங்கிப் பல்லை இளித்துப் பிறரது உதவியை வேண்டுகிருர்கள்.

ஒவ்வொன்றின் உண்மையையும் அறிந்தால் அதன் அழகும் புலப்படும். ஒவ்வொருவருடைய சுபாவத்தையும் நாம் ஊகித்தறிவோமானுல் நாம் எப்படி படி யெப்படி எச்தெந்த விதங்களில் நடந்து கொள்ளவேண்டுமென்ற அறிவும் நமக்கு உண்டாய்விடும்.

18. மனைவி இறந்துபோனால் வேறொருத்தியை மணந்துகொண்டு விடலாம் ஆனால் அன்னையை—தமக்கையை இழந்தால் மீண்டும் பெறக் கூடுமோ?

19. தங்கள் வீட்டில் சாப்பிடும் போது குறைவாக—மிதமாக சாப்பிடுகிறார்கள். பிறர் வீட்டில் சாப்பிடும் போதோ அதிகமாகக் குழம்பு முதலியவற்றை ஊற்றச்சொல்லி வயிறு வெடிக்க—சாப்பிடுகிறார்கள். இது சாதம் விலையின்றிச் சும்மா கிடைக்கிறது என்பதினாலா?

20. உயிருடன் இருக்கும்போது குடிக்கக் கஞ்சிக்கும் உதவி செய்வதில்லை. வைத்தியமும் பார்ப்பதில்லை. இறந்துபோன பிறகோ பிணத்தை மேளதாளத்துடன் சுடுக்காட்டிற்கு எடுத்துச் செல்லுகிறார்கள். அப்போதுதான் பாத்தியக்காரர்களெல்லாம் நீலகிரிமலை, ஸிம்லாமலை, இமயகிரி மலையிலிருந்தும் கூடவந்து கூட்டம் போடுகிறார்கள். இந்த வீண் டம்பத்தினாலாவதென்ன?

21. பணம் இருக்கிறதென்று முன்பின் யோசியாது தாறுமாறாகச் செலவு செய்துவிடுகிறார்கள். பிறகோ?—பிறர் கைக்கு ஏங்கி நிற்கிறார்கள்.

22. தீமையான காரியத்தைச் செய்து பிறர்க்குத் துன்பம் விளைப்பதில் கொண்டுள்ள சுறுசுறுப்பை, நன்மையான காரியத்தைச் செய்வதில் காட்டுவதில்லை. சிலர் குணப்போக்கு இப்படி!

23. அன்பென்றும் நேசமென்றும் ஓயாமல் இரவுபகல் பேசுவார்கள். ஆனால், அவைகளின் உண்மைப் பொருளை நன்குணர்ந்து அவ்விதம் நேசித்தும் உயிர் கலந்து ஒட்டியும் நடப்பதுமட்டும் இல்லை. இதுபோலவே, மற்றவர்களின் குற்றங் குறைகளை எடுத்துக் காட்டிப் பழிப்பர். ஆனால், தங்களுடைய குற்றங் குறைகளைமட்டும் சிறிதும் கவனியார்.

24. ஒருவனை எப்படியாவது அடக்கிவிடலாம். ஆனால் அவனது மனோ உணர்ச்சிகளை மட்டும் எந்நாளும் அடக்க இயலா.

25. பணம் படைத்த நமக்கு என்ன குறை வரப்போகிறது என்று மனம் போனபடி பணத்தை வாரியிறைக்கிறவர்களுக்குக் கூட, ஒரு சோதனை வேளை வந்து புகுந்து கொண்டு,தத்தளித்து,அதனால் காப்பி குடிப்பதையும் நிறுத்திக் காசை மிச்சப்படுத்திச் செட்டாய்ச் செலவிட வேண்டிய நிலைமையும் ஒவ்வொரு தருணத்தில் நேர்ந்துவிடுகிறது.

26. தங்கள் குற்றம் வெளிவந்துவிட்டதற்காக சிலர் மிகவும் வருந்துகிறார்களே யன்றி, தாங்கள் குற்றம் செய்ததைப்பற்றி சிறிதும் வருத்தப்படுவதே யில்லை. அப்படி வருந்துகிற புத்தி யிருந்தால் பிறர்மீது குற்றம் சொல்லத் தோன்றாது.

27. நினைப்பதொன்றும், சொல்வதொன்றும், செய்வதொன்றுமாகக் காலங் கழித்து வருகிறார்கள் சிலர். இம் மனிதப் பதர்களை நம்புவோர்க்கு நடேச சந்நியே கதி.

த. சு. சங்கரலிங்கம்,
திருவனந்தபுரம்.

குற்றங் குறையில்லாத மனிதர்கள் கிடைப்பதரிது. இந்தப் பிறப்பில் உத்தமர்களாயிருந்தபோதிலும், முற்பிறப்புக் குணங்களால் நல்லொழுக்கத்தை மீறும்படி தூண்டப் படுவதுமுண்டு. அது நிமிஷகால சேஷ்டையே. அதற்குப் பிறகு நல்ல குணம் திரும்பி வந்துவிடும்.

II

28. தேவைகளைச் குறைத்துக் கொண்டால் ஐஸ்வர்யமும், சந்தோஷமும் விர்த்தியாகும். அதைக் குறைக்க வீட்டுப் பெண்கள் வழி விடுவதைக் காணோமே!

29. எவ்வளவு வெளியார் சொன்னபோதிலும் தன்னுடைய மனோ உறுதியைக்கொண்டே நடக்கவேண்டும். தன் மனதின் தீர்மானம் ஒன்று தனியாக இருக்கவேண்டும். அந்தத் தீர்மானத்தின்படியே எதுவும் செய்யவேண்டும்.

30. சந்தோஷமாயிருப்பது சுகாதாரத்துக்கு அவசியமானது. ஆனாலும், சமுசாரத்திலே கவலையற்றிருக்க முடிகிறதா? அந்தப் பாக்கியம் யாரோ ஒருவருக்கே.

31. தோல்வி, கல்வியை விருத்தி செய்ய முக்கியமான சாதகம். ஆனால், இது புத்திசாலிகளுக்கு மட்டும்தான். தோல்வி, வெற்றி என்பது சில சமயங்களில் அதிர்ஷ்டத்தைப் பொருத்ததாய்விடுகிறதுமுண்டு.

32. செய்யவேண்டுமென்ற எண்ணம், செய்யக்கூடுமென்ற நிச்சயம், செய்வேன் என்ற மனோதிடம் இவை மூன்றும் ஜெயமடைய முக்கியமான வழிகள். ஆனால், வெறும் வாயால் மட்டும் சொல்லிக்கொண்டிருந்தால் போதாது. வார்த்தையைவிட செய்கையே முக்கியம்.

33. சிநேகிதன் எப்பொழுதும் பிரியமாயிருப்பான். ஆனால், சகோதரனே சண்டை செய்து பங்கு பிரித்துக்கொள்ளும் வழியையே தேடுவான்.

34. அதிகாலையில் எழுந்ததும் பகவானைப் பிரார்த்தித்துவிட்டு மறு வேலை செய்யப் பழக்கிக்கொள்ள வேண்டும். காபி குடிக்கிற நினைவுக்கு முன்பு கடவுளை நினைக்கும் எண்ணம் முன்னிற்கவேண்டும்.

35. தனக்கு ஏற்படும் துன்பங்களைப்போலவே பிறருக்கு ஏற்படுவதையும் நினைக்கவேண்டும். அப்படி நினைத்தால் இவ்வுலகம் தேவருலகமாயிருக்குமே. அதுதானே காணோம்!

36. பயங்கரமான விஷயங்களை எதிர்த்து நின்றால், அவைகளே மறைந்துவிடும். எல்லாம் மனோபலத்தையும் துணிவையும் பொறுத்திருக்கிறது. ஒருமுறை துணிந்துவிட்டால் பிறகு சுலபமே.

37. சோம்பல் அதிக தீவிரமான மூளையையும் மழுங்கச் செய்யும். அத்துடன் போயிற்றா? பிறருக்குப் பாரமாகவும் உட்கார்ந்து தின்ன வைக்கும்.

38. வேறொருவரைப்பற்றி உன்னிடம் இகழ்பவர் உன்னைப்பற்றியும் பிறரிடத்தில் இகழ்வார் என்பது நிச்சயம். ஆதலின், அவர்களிடமே, அவனை இகழ்ந்ததுபோல் என்னைப் பற்றியும் யாரிடம் இகழப் போகிறாய் என்று ஒரு வார்த்தை கேட்டுவிடு.

39. மனதில் திருப்தி ஏற்படின் வேறு சஞ்சலமே கிடையாது.

"காங்கிரஸ்" மகா மதிப்புள்ளதே. ஆனால், அதன் பெயரைச் சொல்லிக்கொண்டு இந்தியா சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் அனைவரையும் உயரிய தர்மிஷ்டர்களாகவும் ஏழைகளுக்கு இரங்கும் கருணை வள்ளல்களாகவும் சொல்லிவிட முடியாது. ஏதோ ஒரு சிலர் பரோபகாரிகளாயிருக்கலாம். மற்றவர்கள் கீர்த்தி வரக்கூடிய இடத்தில் மட்டும் உழைப்பவர்களாவர்.

ஆசையை நசிக்கச் செய்ய மனதின் திருப்தியே முக்கிய ஆயுதம். அந்தத் திருப்தி சரியானபடி ஏற்படமொறு கடவுள் செய்யாமல் அடிக்கடி சோதனை காட்டிவிடுகிருரே! என் செய்வது?

40. இதுதான் என்று நிச்சயமாய்ச் சொல்ல அநுபவம் தேவை. ஆனால், அதை மறுத்துச் சொல்ல அதிக அநுபவம் தேவை. அப்படி அநுபவமாய்ச் சொல்லும்போது குற்றமுள்ள நெஞ்சினருக்கு அதிக ஆத்திரமுண்டாய்விடுகிறது.

T. A. சுப்பராய ஐயர்.

[ஸ்ரீமான் P. M. A. மரியா தாஸ் வரைந்தவை மறு ஸஞ்சிகையில் வரும். ப-ர்.]

ஏதாவது கொண்டுபோ.

ஒருவரின் வீட்டுக்குச் செல்லுகையில், அங்கு குழந்தைகளிருந்தால் ஏதாவது தின்பண்டம் வாங்கிக்கொண்டு போவது நன்று. பெண்களிருந்தால், புஷ்பம், பழம் இவற்றுடன் செல். புஷ்பம் என்ருல் எந்தப் பெண்களும் பிரியத்துடன் ஏற்பர். நீ என்ன கொண்டுவந்திருக்கிருய் என்று பிறர் எண்ணும்படி ஏதேனும் கொண்டுபோகும் வழக்கமுடையவனுகுக. வெறுங்கையாகப் போகாதே. அது உன்னைக் கௌரவப் படுத்தாது.

தன்னடக்கத்திற்குப் பலமே பிரதானம்.

பலம் இருந்தால்தான் தன் மரியாதையை (Self respect) விருத்திபடுத்த முடியும். பலம் ஏற்பட்டாலொழிய தன்னடக்கமுண்டாவது கஷ்டம். பலமில்லாதவன் தன்னடக்க முடையானென்பது கேவலமான ஸமாசாரம். அது ஓர் தர்ம மார்க்கமன்று; அது தன்னடக்கமன்று. அது முழுப் பயங்காளித்தனமாம். பலமில்லாததால் அடங்கியிருத்தல் சுயலாபத்திலேயே திருஷ்டியுள்ளதென்பதில் ஆக்ஷேபணையே யில்லை. நமது பலத்தை விருத்தி படுத்தவேண்டும். பலமுண்டானவுடன் தன்னடக்கமென்னும் அணை கோலி, மிதமிஞ்சி அந்தப் பலம் செல்லாதவாறு பாதுகாக்கவேண்டும். அந்தப் பலமானது நமது சுசீலத்துக்கும், விநயத்துக்கும் மிதமிஞ்சி நடக்கக்கூடாதபடி பாதுகாக்கவும் வேண்டும்.

நாடெங்கும் அமளி நடை பெறுகையில் சேதத்தை மதிப்பிடுவது சாத்தியமில்லை. அதிகப்படியான சேதம் ஏற்பட்டிருக்கிறதென்று இப்பால் தெரிய வந்தாலும் நாம் அதிசயப் படுவதற்கில்லை.

மனோபலத்தின் மாண்பு.



மனோபலத்தின் ஓர் அங்கமாகிய பொறுமை என்பது மிக நுண்ணியதும், கனம் மிக்கதும், அரியதுமாம். "பொறுத்தவர் பூமியாள்வார்" என்றபடி பலவிதமான சுகங்கள் ஆட்சிகள் அனைத்திற்கும் ஆதாரம் பொறையே. பொறை இல்லாவிடின் இதயத்திற்கு இன்பம் தரும் ஆசையும் துன்பமாகிவிடும்.

ஃ

இவ்வுலகத்தில் மனிதர் விருத்தியடைவதற்கு முதற் கருவிகளாகிய மனோபலம், தேக பலம் இவ்விரண்டினுள் மனோபலம் மிகவும் முக்கியமானது. ஆதலின், அதைப் பண்படுத்துவது மிகவும் மேன்மையதாகும். எனெனில், தகுதியான காரியங்களைச் செய்து முடிப்பதில் திறம்பா மனவுறுதியே உண்மையான பெருந்தகைமை அனைத்திற்கும் அஸ்திவாரமாகின்றது. அலுப்பான பாடுபரப்பையும், மனத்திற்கு இதமல்லாத அல்லல் அலைச்சலையும் விரைவாய் ஊடறுத்துச் செல்லும்படியும் மனவலிமை என்பது எவனையும் வல்லவனாக்கி, எந்தெந்தத் தொழிலும் முந்தச் செலுத்தி உயர்பதம் அடைவிக்கிறது. விவேகத்திலும் மனவலி அதிகம் சாதிக்கும். விவேகிக்கு உண்டாகும் கஷ்ட நஷ்டங்களிற் பாதியும் மனவலிமை யுடையானுக்கு உண்டாவதில்லை. செய்யும் கருமம் எதையும் சிதறாது சிந்திக்கும்படி செய்வது அத்தனையும் மனமே தவிரச் சிறந்த விவேகமல்ல; அருந்தொழில்களை முடிக்கத்தக்கது பராக்கிரமம் மாத்திரமல்ல; ஊக்கத்துடன் தொடு பிடியாய் உழைக்கத்தக்க மனமுமேயாம். ஆகவே, எவனெவனுடைய பெருந்தன்மைக்கும் மனவலிமையே முக்கியமான பலம் எனச் சொல்லலாம். பின்னும் ஆய்ந்து பார்க்குமளவில், மனவலியாவது மனிதனே என்னவேண்டும். அஃது அவன் செய்யும் செயல் அனைத்திற்கும் உற்சாகமும், யத்தனிக்கும் யத்தனம் அனைத்திற்கும் ஜீவனும் கொடுக்கும். ஒரு பொருளினிடத்தில் உண்மையாக விருப்பமுண்டாவது மன வலிமையாலேதான். மனவலியற்றவன் எதற்கும் உதவான். மனவலி யுடைமைக்குச் சமானமாகிய பெரும்பேறு வேறில்லை. மனவலியுடையோன் செய்யும் முயற்சி சிறிதும் வாய்க்காமல் போயினும், தன்னால் ஆமளவிற்கு நெஞ்சறிய முயன்றதை நினைத்து அவன் மனம் ஆறும். தாழ்ந்த ஸ்திதியில் இருக்கும் ஒருவன் பொறுமையை யடைக்கலமாகக் கொண்டு துன்பத்துடன் எதிர்த்து, சலியா மனோ தீரத்தை இருபாதமாய்க்கொண்டு நடப்பதைக் காண்பதினும் கண்ணுக்குச் சிறந்த மனதை மகிழ்விக்கும் காட்சி மற்றொன்றும் இல்லை.

ஃ

இளைஞர் விரும்புவதை விரும்பியபடித் தடையறச் செய்யாது,

அளவு கடந்த ஒரு உணர்ச்சியை வெளியே வீசி விடவேண்டும். (மகாத்மா)

விடுவார்களானால், அவ்வெறு விருப்பம் மனதிற்கு ஒருவகைச் சோர்வை உண்டாக்கும். அநேகர் செய்யும் வண்ணம் தளபதி வருமளவும் வீணே காத்திருப்பது உதவாது; அதன் இடையில் சிறிதும் விட்டு விடாமல் சண்டை செய்துகொண்டு வரவேண்டும். நினைத்த நற்கருமத்தை நின்ற நிலையிற் பிரியாமல் உற்சாகத்துடன் செய்து முடிக்கவேண்டும். உலகத்தில் அநேகம் துறைகளில் படும் பாடு பறப்பையும் தேக சிரமத்தையும் நமது நன்மைக்கு உதவும் உத்தமமான பயிற்சியென்று உல்லாஸமாய் உத்தரிக்கவேண்டும். "இம்மையில் மனமும் மெய்யும் வருந்தி உழைக்கும் உழைப்பாலன்றி மற்றப்படிப் பயன் பெறுவது ஒருபோதும் இல்லை. விட்டு விடாமல் மேலுமேலும் வருந்தி முயலுவதுதான் இவ்வுலக வாழ்வு. இவ்விஷயத்தில் என் கருமம் கைகூடி வந்தது; ஆனால், என் தைரியம் ஒன்றுக்கும் அசையவில்லை; யுக்தி அநுபவங்களைச் சார்ந்து சொல்லின் உறுதியும், நெஞ்சின் உன்னத அபிப்பிராயமுமுள்ளவன் நினைத்த காரியம் எதையும் முடிப்பான்" என ஒருவர் கூறியுள்ளார்.

ஃ

அற்ப புத்தியுள்ளவர்களும் ஒரு காரியத்தைச் செய்யும் பொழுது, வேறு நினைவின்றி அதிலே மனம் அழுந்தப் பிரவர்த்தித்து இளைப்புறுது செய்து வருவார்களானால், எத்தனை எத்தனையோ காரியங்களைச் சாதிக்க மாட்டுவார்கள். "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்றபடி மனவலிமை யொன்றிருக்குமாயின், மிகவும் சாதாரணமான கருவிகளைக் கொண்டும் எந்தக் கருமமும் எளிதில் சாதிக்கலாகுமென்பது ஒரு பெரிய வரது கோட்பாடு. "உன் கைக்குக் கிட்டுவது எதுவாயினும் அதை உன் முழுப் பலத்தோடும் செய்." எந்தக் காரியத்தையும் செய்யும் பொழுது வேறு நினைவின்றி அவ்வொன்றிலேயே சிந்தை குவிந்து செய்ததனால் தாம் செய்த கருமம் அனைத்தும் வெற்றியாக வாய்த்தனவென்று மேற்கூறிய பெரியார் புகன்றுள்ளார்.

ஃ

செய்யத்தக்க அருந்தொழில் எதையும் தீரத்தோடு உழைக்காவிடின் செய்து முடிக்க இயலாது. மனிதருக்கு உயர்வு உண்டாவது முக்கியமாய் மனப்போராட்டத்தாலாகும். செய்யும் தொழிலில் இடையூறு உண்டாகும் பொழுது மனதிற்கும் அதற்கும் சண்டை நடக்கின்றது. அம்மனப் போராட்டமே உற்சாகம் எனப்படும். அசாத்தியமெனத் தோன்றும் காரியங்கள் உற்சாகத்தால் பெரும்பாலும் சாதிக்கப்படுவதைக் காணும் பொழுது ஆநந்தம் உண்டாகின்றது. மின்னல் மழைக்கு முற்குறி ஆவதுபோல், பெரும்பாலும் நமது விருப்பம் நாம் சாதிக்கக்கூடிய காரியங்களுக்கு முற்குறியாம். பயங்காளிகளுக்கும், இருமனமுடையவர்களுக்கும் எந்தக் காரிய

பெண் குழந்தைகளுக்குச் சதை பிடிக்காமலும், தேகம் பெருக்காமலும், வளர்ச்சி கொடுக்காமலும், உள்ளுருக்கி நோய்போல் அவர்களுக்குப் பதினாறு பிராயம் கடந்துபோயும் பிரவிடையாகிறதற்கு இடங்கொடுக்காமல் தேயவைக்கிறதுண்டு. அதைச் சில மௌடீகர்கள் பெண்ணைப் பேய் பிடித்துக்கொண்டு உருக்கி வாயில் போட்டுக்கொள்ளுகிறதென்று பெரிய மந்திர தந்திரங்களெல்லாம் செய்துகொண்டு திரிவார்கள்.

மும் அசாத்தியமாகத் தோன்றுவத தனுல், அவர்களால் சாதிக்கக் கூடாதே போகின்றது. மனோ பலத்தின் சக்தியை யறிந்தோர், எத்தனை தடவைதான் தவறி வீழி னும், அடுத்தடுத்து நஷ்டம் சூழினும், தொப்பு தொப்பென்று உயர் நிலையி னின்றும் கீழ் வீழ்ந்து தாழினும், செய்தொழில் விலையாகாது ஸ்தம் பித்து நின்று போயினும், இன்னும் ஒரு கை பார்த்தே தீருவோமென்று துணிந்தே முன்னேறிச்செல்வர். அன் னேரின் சலியா முயற்சியை மதித்து இறைவனும் ஒருவகையிலில்லாவிடி னும், மற்றொன்றின் மூலமாகவேனும் அவர்கட்குத் திருப்தி யுண்டாக்க வழி செய்து வைப்பாரென்பது திண்ணம். மனோபலமே மகா பலமாம்.

பாகவதகோஷ்டி போஜனம்.

உள் கோஷ்டி திரைக்குப் பின் வெளி கோஷ்டி, அதற் கும் அப்பால் சாமான்ய கோஷ்டி என்று பிரித்து வெவ் வேறிடங்களில் உட்காரவைத் துப் பரிமாறுவதில் சிலருக்கு அது மானக் குறைவாகவும் தோற்றுகிறது. யோக்கியமும் பக்தியுமுள்ள மனிதர் வெளி யிலே கிடக்க, எந்த யோக்கி யதையுமற்ற வேஷதாரி உள்ளே திறைகுள் விழுங்குகி ருன். மானஸ்தர்கள் இதை வெறுப்புடன் சகித்து உட்பட நேருகிறது.

பெரிய புத்தி யில்லாமை.

ஒரு நோன்புக்குக் காலையிலிருந்து பலவித பக்ஷணங் களைச் செய்து மாலைவரையும் உழைத்த வீட்டுக்காரி, எல் லாம் ஆகிப் பூஜை செய்து உண்ணவேண்டிய சமயத்தில், சீக்கிரம் சாப்பிட்டுத் தொலைத்தால் பரவாயில்லை, எனக்குப் பசியா யிருக்கிறது, மயக்கமாய் வருகிறது என்று சிடுசிடுத் துப் பேசுகிருள். அவள் கணவனே "ஏண்டி, எல்லாம் பாடுபட்டுச் செய்துவிட்டு, சந்தோஷத்தோடு உண்ணப் போகிற வேளையில் ஏன் இப்படிக் கடுகடுக்கிருய், எரிந்து விழுகிருய், அன்போடிருந்து, செய்த யாவற்றையும் அன் போடு பரிமாறுகிறதுதானே என்கிறுன். அதற்கு மனைவி "எவ்வளவு பாடுபட்டாலும் இந்த வீட்டில் ஒரு நன்றியு மில்லை, விசுவாசமுமில்லையென்று மடமடவென்று பேசத் தொடங்கிவிடுகிருள். புருஷன் சண்டை வேண்டாமென்று மௌனமானுலும், உள்ளத்துச் சந்தோஷம் கெட்டுப்போய் உண்ணவேண்டியதாகி, காலைமுதல் செய்த பக்ஷணங்களும் அவனுக்கு ருசியற்றுப் போகின்றன. இந்தப் பாடு நீங்கள் பட்டிருக்கிறீர்களா?

மாணவர் பக்கம்

மாறி வழங்கும் சில சொற்கள்.

(512-ம் பக்கத் தொடர்ச்சி.)

மருதாணி:—இது காலிலும் கையிலும் ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் செந்நிறம் தோன்றுமாறு அரைத்துப் பூசும் ஒருவகைப் பச்சிலை. மருதாணி என்ற சொல்லுக்குப் பொருள் இல்லை. இதன் திருத்தமொழி "மருதோன்றி" என்பதே. "மருதோன்றி" என்பது வாசனையைத் தோற்றுவிக்கும் மலரை முதலில் உணர்த்திப் பின்னர், அது தோன்றும் செடி அல்லது மரம், அம்மரத்திலுள்ள இலை இவற்றைக் குறிக்கும் மொழி ஆயிற்று.

∴

சதுர்த்தேங்காய்:—ஸ்வாமிக்குப் பிரார்த்தனையின்போது இத்தனை தேங்காய் "சதுர்த் தேங்கா"யாகவே உடைக்கிறேன் என்று வேண்டிக்கொள்வதுண்டு. "சதுர்த் தேங்காய்"என்றால் என்ன? சதுர்என்பது நாட்டியத்தையோ, நாட்டியசாலையையோ குறிக்கும் சொல் ஆதலின், அதற்கும் தேங்காய்க்கும் ஒரு சம்பந்தமும் இருக்க ஞாயமில்லை. சிறிது ஆராயின், "சதுர்க்காய்" என்பது "சிதறுகாய்" என்றிருக்கவேண்டுமெனப் புலப்படும். எனெனில், இக்காய்கள் உடைப்பவரால் எடுத்துக்கொள்ளப்படாமல். பிறர் எவரும் ஓடி எடுத்துக்கொள்ளும்படி நாலா பக்கமும் சிதற ஓங்கி அடிக்கப்படும் காய்கள் அல்லவா?

∴

ஸ்ரீலஸ்ரீ:—மடாதிபதிகள், சாமியார்கள் முதலானோரை ஸ்ரீலஸ்ரீ இன்னார் என்று மரியாதைப்படுத்திப் பேசவும் எழுதவும் செய்கின்றனர். ஸ்ரீ என்பதன் பொருள் "திரு" என்பதை யாவரும் அறிவர். ஸ்ரீரங்கம் என்பதைத் திருவரங்கம் என்று சொல்வது சாதாரணம். ல என்பது எதைக் குறிக்கிறது? மேலும் இரண்டு ஸ்ரீகள் இருப்பதற்குக் காரணமென்ன? ல என்பது லக்ஷ்ம் என்பதைக் குறிக்கும் எழுத்தாதலின், லக்ஷ்ம் தடவை ஸ்ரீ என்று போட்டு எழுதுவதற்குப் பதிலாக சுருக்கமாக ஸ்ரீலஸ்ரீ என்று போடுவது வழக்கம் என்றார் ஒருவர். இது ஒரு வகையிற் பொருந்துமேனும், அவ்வளவு சரியானதல்ல. சீலஸ்ரீ என்பதற்குப் பதிலாக வடமொழிப் பயிற்சி யில்லாத ஒருவரால் அது ஆதியில் ஸ்ரீலஸ்ரீ என்று எழுதப்பட, அதன் பொருளைச் சிந்தியாது, பலரும் அவ்வாறே எழுதி அது வழக்கச் சொல்லாகிவிட்டிருக்க வேண்டும். சீலம் என்பதற்கு நல்லொழுக்கம் என்பது பொருள். சீலஸ்ரீ என்பதற்கு "சீலம் வாய்ந்த சிறப்புப் பொருந்திய" என்பது பொருளாகும்.

∴

அருமாமணை:—காய் கறி அறுக்கும் கருவியை 'அருமாமணை' என்கிறார்கள். அது 'அரிவாள்மணை' என்றிருத்தல் வேண்டும். "அரிகின்ற வாள் பதித்த பலகை" என்பது அதன் பொருள்.

∴

சிலவு:—பணத்தைச் செலவிடுவதைச் 'சிலவு' என்பது சரியல்ல. கையை விட்டுச் செல்லுதல் என்பதன் குறிப்பாக சேலவு என்பதே சரி.

ஃ

கோறுதல் :—வேண்டுகிறேன் என்ற பொருளில் "கோறுகிறேன்" என்கிறார்கள். இது பிழை. கோறுதல் என்பதற்குக் 'கோல்லுதல்' என்பது பொருள். "கோருதல்" என்பதற்கே வேண்டுதல் என்று அருத்தமாகும்.

ஃ

திரேகம்:—"தேகம்" என்பதே சரி. "திரேகம்" என்பது பிழை. அதற்கு அருத்தமேயில்லை.

ஃ

கச்சட்டி:—கச்சட்டி என்பது 'கல்சட்டி' என்பதன் மருஉ. கல்லால் ஆகிய சட்டி என்பது அதன் பொருள். பெரும்பான்மை மாக்கல்லாலும், சிறுபான்மை கருங்கல்லாலும் செய்யப்பட்டதாம். *M. G.*

வெறுங்கையாகப் போகவிடாதே.

உன் வீட்டுக்கு வந்த பிச்சைக்காரர்களை எந்த நாளிலும் வெறுங் கையாகப் போக விடாதே. ஏதோ அரிசியோ, ஒரு காசோ போட்டு அனுப்பு எத்தனைபேர் வரினும் போட்டு அனுப்பு. அதற்குப் பதில் கடவுள் தருவார். கடவுளே பிச்சைக் கோலத்துடன் வரலாம். ஆதலின், எளியவர்கட்கு இட்டுக் கௌரவத்துடன் அனுப்பு உன் உதவி வேண்டி வந்தவர்களையும் வெறுங்கையாக அனுப்பாமல் ஏதோ சக்திக்கியன்றது செய்து அனுப்பு. வீட்டுக்கு வந்த குழந்தைகள் போகும்போது தின்பண்டம், காசுகொடுத்து அனுப்பப்பழகு.

மூன்றாவது மனிதன் ஏன்?

மூன்றாவது மனிதனையே எதற்கும் அழைப்பதில்லையென்றும், மூன்றாவது மனிதன் இல்லாமலே எந்த சச்சரவையும் நேருக்கு நேர் பேசித் தீர்த்துக் கொள்கிறதென்றும், மூன்றாவது மனிதனே வலிய வந்தாலும் அவனை கேடியமே செய்கிறதில்லையென்றும் தீர்மானித்துள்ள ஒருவரின் முன்பு ஒரு சச்சரவு வருகிறது. அவர்கள் மூன்றாவது மனிதனைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும்படி கூறுகிறார்கள். அவ்விதம் சொல்லுகிறவர்களுடைய ஈனப்போக்குகளோ நற்குணங்களோ நேருக்கு நேரே அவர்களிடம் தெரிந்திருக்கும்போது அதைக்கொண்டே முடிவு செய்துவிடலாமென்றும், எப்போதுமே மூன்றாவது மனிதன் தேவையில்லையென்றும் பதில் சொல்லும்படியாகிறது. மூன்றாவது மனிதனை ஒருவன் மதிக்கானுயின் அவனை ஏமாற்றுவதென்பது வெகு கஷ்டம்.

விகட வெற்றி வேற்கை.

1. எழுத்தறி வித்தவன் இறைவனாகும்.
எழுத்தறி நிபுண ரேங்குவ ரிதுகால்.

2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
கல்விக் கழகு காகிதங் கிழித்தல்.

3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
செல்வர்க் கழகு செலவது செய்தல்.

4. வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்.
வேதியர்க் கழகு வேலையில் காபி, டீ.

5. மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.
மன்னர்க் கழகு சீமையில் தங்குதல்.

6. வணிகர்க் கழகு வளர்பொரு ளீட்டல்.
வணிகர்க் கழகு வரும்படி பார்ப்பதே.

7. உழவர்க் கழகே ருழுதூண் விரும்பல்.
உழவர்க் கழகுதம் மூர்விட் டேகுதல்.

8. மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
மந்திரிக் கழகு விருந்துக ளருந்தல்.

9. தந்திரிக் கழகு தறுக ணாண்மை.
தந்திரிக் கழகு சமயம் பார்ப்பது.

10. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
உண்டிக் கழகு கண்டதை யுண்ணல்.

11. பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.
பெண்டிர்க் கழகு பேசுதல் வம்பே.

12. குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல்.
குலமகட் கழகு குழந்தைகள் பெறுதல்.

13. விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்.
விலைமகட் கழகு வீதியில் நிற்றல்.

14. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
அறிஞர்க் கழகு அசட்டோ டழுதல்.

ஒரு மனிதனுடைய மனமும் நன்னெறியும் விசாலிக்கவேண்டுமாயின் அதற்கேற்ற சமயமும் பொறுப்பும் அவனுக்குக் கொடுத்தால்தான் முன்னேறிச் செல்ல முடியும்.

15. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.
வறிஞர்க் கழகு வாழ்ந்ததைப் புகழ்தல்.

16. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
தேம்படு பனையின் தீந்தரு கள்ளால்,
வானுற ஓங்கி வளமிகு குடும்பம்
ஒருவரும் வாழா தொழிவது நிசமே.

17. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
தெள்ளிய ஆல்கீழ் தேவியும் தானுமாய்
தெண்ணீர் கயத்து சிறுமீன் சமைத்து
நுண்ணிய முட்களை நோக்கா விழுங்கிட
தொண்டையில் அவைபோய் துயர்பல தருமே
புண்ணிய யாத்திரை பண்ணுவார் தமக்கே

18. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.
சிறியோரெல்லாம் சிறியரு மல்லர்.
பெரியோ ரெல்லாம் போக்கைவாய்க் கிழவரே.
சிறியோரெல்லாம் சிறிக்கிபின் செல்வர்.

19. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.
உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்.
கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.
பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் பெறுவர்.
உற்றோர் தம்மால் ஓயாச் செலவே
கொண்டோரெல்லாம் சண்டையில் பிசிவர்.

(தொடரும்.) மூ. துரைப் பிள்ளை.

பீர் என்னும் சாராயத்தைக் குடிக்கும் பெரிய மனிதர்கள் பலருளர் அச்சாராயம் வெகு தித்திப்போ? வாய்க்கு இன்பமோ? ஒருபோதுமில்லை அது கசப்பு. வெகு கசப்பு. ஐரோப்பியர் அச்சாராயத்தைப் பருகுவதால் அவர்களின் ஸகவாஸ தோஷத்தால் பெரிய(?) மனிதர்களும் குடிக்கிறார்கள் ஆதியில் அப்பானத்தின்பேரில் வெறுப்பு தோன்றினாலும், எப்படியோ கஷ்டப்பட்டுக் குடித்து குடித்து வாடிக்கை செய்வதால், சில தினங்கள் சென்றவுடன் அந்த சாராயத்தில் அத்யந்த விருப்பமுண்டாய்விடுகிறது. இயற்கையாய் உண்டான வெறுப்பை வேண்டுமென்றே போக்கடித்துக் கொண்டு ஒருவித போலி ஸந்தோஷத்தையடையும் ஜனங்கள் அவிவேகிக ளன்றோ?

வியாபார மர்மங்கள்.

வியாபாரம் என்பது பொருளை உற்பத்தி செய்தல், உற்பத்தி செய்தவற்றை வேறிடங்கட்கு மாற்றுதல், இன்னின்ன இடங்களில் இன்னின்னவற்றை விளைவிக்கக்கூடுமெனப் பிரித்தல் என்பதற்குள் அடங்கியுள்ளது. திரவியம் தேடுதற்கு நாட்டின் இயற்கைச் செழிப்பு, முதல் போட்டு வேலை செய்வது, உழைப்பு இம்மூன்றும் தேவை. இந்தியர்களில் 100-க்கு 77-பேர்களுக்கு விவசாயமே முக்கிய தொழில். செல்வம் திரட்டுவதற்கு தானியங்கள், உலோக வகைகள், வனங்களில் விளையும் பொருள்கள், நீர்வீழ்ச்சியினின்று மின்சாரமுண்டாக்கித் தொழில்களுக்கு உபயோகித்தல் முதலியன பிரதான கருவிகளாகின்றன. தெற்கு வடக்கில் 2000-மைல்களும், மேற்கு கிழக்கில் 2000 மைல்களும் போல உள்ள இந்தியாவில் கைத்தொழில் செய்ய எவ்வளவோ வசதிகள் இருந்தும் இந்நாட்டார் உபயோகிக்க சௌகரியமற்றிருக்கிறார்கள். ஜப்பானில் ஒரு ஏக்கருக்கு லாபம் ரூபாய் 150-கிடைத்தால் இந்தியாவில் 25-ரூபாய்களே பெற முடியும். பஞ்சு உற்பத்தி விஷயத்தில் எகிப்தில் 300-முதல் 400-ராத்தலும், அமெரிக்காவில் 180-ராத்தலும், இந்தியாவிலோ 75-ராத்தலுமாக ஒரு ஏக்கர் விஸ்தீரணத்துக்கு விளைகிறது. இதில் இந்திய விளைவு எவ்வளவு தாழ்ந்துவிட்டிருக்கிறது! நம் நாட்டுச் சரக்குகளை இங்கிலாந்து எதிர்பார்த்த காலமும் உண்டு. பிறகு இங்கிலாந்தில் இறக்குமதியாகும் இந்தியச் சரக்குகளுக்கு 100 க்கு 400-வரையும் இறக்குமதி வரி விதித்து அச் சரக்குகள் அங்கு விலையாகாதபடி செய்யவே, இந்தியக் கைத்தொழிலும் க்ஷீணிப்பதாயின.

தாயும் மாற்றாந்தாயும்.

தன் தாயும் மாற்றாந்தாயும் தன் தந்தைக்குப் பிரியமான மனைவிகள் தான். ஆயினும், இருவர் மனமும் வெவ்வேறுபட்டே செல்லுகிறது. ஒரே அந்தஸ்தில் இருவர் இருப்பதாயின், இருவருக்குள்ளும் எப்போதும் போட்டியும் சச்சரவும் ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கும். மாற்றாந்தாய் தன் வயிற்றில் பிறந்தவர்களுடைய க்ஷேமத்தையும் தன் க்ஷேமத்தையும் கோருவாளேயன்றி, மூத்தாளின் மகனைக் கவனியாள். தன் தாயின் சொந்தத் தங்கையையே தன் தந்தை மணந்தபோதிலுங்கூட, அவள் மாற்றாந்தாய் என்கிற பதவிக்கு வந்துவிடும்போது, உனக்கு அவள் சத்துருவாகவேதான் அமைவாள். உன் தாயின் தங்கை உன் தந்தையை மணக்காமல், வேறொருவரை மணந்திருந்தால், அப்பொழுது அவள் தங்கக் கட்டியாகி, தன் மக்களைவிட உன் மீது அதிக பிரியம் வைத்து விசுவாசமாக நிற்பாள். மாற்றந்தாய் என்ற நிலைக்கு எந்த உத்தமப் பெண் வந்தாலும் அங்கு பேதம்தான் ஏற்படுகிறது. என் செய்ய?

தன் தாயை மதித்து நடந்தவன் தன் மாற்றாந்தாயை மதித்து நடவாததேன்? தன் தாய் தனது நன்மைக்கு உரியவள் என்பதாலும், அவளிடம் நன்மை பெறுவதாலும் அவளுக்கு உட்பட்டு நடக்கிறான். மாற்றாந்தாய் தனக்கு நலம்புரியாளாதலின் அவளை மதியாமல், தனக்கு நலம்புரியும் தன் தந்தையை மட்டுமே மதிக்கிறான். அவரிடமே தனக்கு வேண்டிய காரியங்களுக்குக் கேட்டும் வற்புறுத்தியும் பெறுகிறான். பள்ளமுள்ள இடத்தில் நீர் தங்குவதுபோல் அன்புள்ள இடத்தில்தான் வணங்குதலும் இருக்கும்.

ஊக்கத்தின் உன்னதம்.

நமது தேசத்திலும், இதர நாடுகளிலும் கைப்பாடு பட்டு வருந்தும் ஏழைகளாய்ப் பிறந்து, விடாமுயற்சியினாலும், ஊக்கத்தினாலும் லோகோபயோகமும் செல்வாக்குமுள்ள உயர் பதம் பெற்றவர்கள் இப்பொழுது நாலு பேர் பத்துப் பெயரல்ல, பல பெயர் உண்டு. இத்தனை திரளாயிருப்பதனால், அவர்களுக்குப் பூர்வ காலத்தில் இருந்தபடி இப்பொழுது அத்தனை விசேஷமாய்ப் பிரதிஷ்டையில்லை. இவர்களில் உத்தமர்களான சிலருடைய வரலாறுகளை யோசிக்குமிடத்தில், சிறு பருவத்தில் பலவாறு சங்கடப்பட்டு மிடியில் அடியுண்டு களை தெளிர் தெழுந்தாலன்றி எவனும் சித்தி பெறுவது அசாத்தியமென முக்காலே மூன்றுவீசம் உறுதி சொல்லும்படி நேரிடுகின்றது.

ஃ

இவ்வாறு பெருமை எய்திய பலரும் தாம் பெற்ற புகழுக்குச் செலுத்திய கிரயம் மற்றொன்றுமல்ல; அவர்கள் தாம் வருந்தி முயன்ற முயற்சியேயாம். எவ்வித மேம்பாடும் சோம்பர்க்கு எட்டாக் கரையில் அமைந்திருக்கின்றது. ஓயாது உழைக்கும் கையும் மனமுமே தன்னைத்தான் பண்படுத்தி, அறிவைப் பெருக்கி, நினைத்த காரியத்தை நினைத்தபடி கைகூட்டுவிக்கும். நற்குலத்தில் பிறந்து குபேர தனமுடையவர்களாயிருப்பவர்களுக்கும் தம்மில் தாம் ஏதாயினும் கனமான புகழ் பெறுவார்களானால், அது ஊக்கத்துடன் அவர்கள் செய்த முயற்சியின் பயனாக விளைந்திருக்குமேயல்லாது மற்றபடி அல்ல. ஒருவன் தன் நிலத்தை மற்றொருவனுக்குக் கொடுத்துவிடலாகுமெனினும், அறிவையும் ஞானத்தையும் கொடுத்துவிடுவது அசாத்தியம். பணக்காரன் தன் வேலையைக் கூலிக் கொடுத்துச் செய்விக்கலாம்; தான் சிந்திக்க வேண்டுவதைக் கூலிகொடுத்துச் சிந்திக்கமுடியுமா? தன்னைத்தான் பண்படுத்தி யிருக்கும் இயற்கையைக் கிரயம் கொடுத்து வாங்கிக்கொள்ளக் கூடுமோ? அப்படிச் செய்ய முடியாது. எந்தெந்தத் தொழிலிலும் மெய்வருந்தி முயல்வாருக்கு மாத்திரமே மேம்பாடு உண்டாகும். இது அநுபவத்திற் கண்டது. இக்கொள்கை செல்வம் மிகப் பெற்றவருக்கும் சரி, சக்கிலித் தொழிற்சாலையன்றி வேறு பாடசாலை அறியாதவர்களுக்கும் சரி, யாவருக்கும் பேதமறப் பொருந்தும்.

ஃ

ஒருவனைச் சீர்படுத்தி உயர்த்துவதற்குச் செல்வமும் சுகமும் வேண்டுவதில்லையெனத் தெளிவாய்த் தெரியவருகிறது. ஏனெனில், எக்காலத்தும் உலகத்துக்கு மகோபகாரம் செய்தவர்கள் வெகுவாக முதலில் கீழோராய்ப் பிறந்து, பிறகு பெருமை பெற்றவர்களாகவே யிருக்கின்ற

தனிப்பட்ட மனிதனுக்கு லக்ஷ்யங்கள் இருப்பதுபோல சமூகத்திற்கும் லக்ஷ்யங்கள் உள. தனிப்பட்ட லக்ஷ்யங்கள் ஒன்று சேர்ந்தால் சமூக லக்ஷ்யமாக மாறுகிறது.—ஸ்ரீமான் வி. சாரனாத ஐயங்கார்.

னர். மேலும், துன்பம் அறியாத பெருவாழ்வானது தொழில் செய்ய முயல்வும், நேரிடும் சங்கடத்திற்கு அஞ்சாது நிர்வகிக்கவும் தக்கதிறமை உண்டாக்காது; உலகத்தில் எந்தக் கருமத்தையும் முயன்று சாதிக்க இன்றியமையாத் திறமை தமக்குண் டென்று எவரையும் தேற்றவும் தேற் ருது. தரித்திரம் துர்க்கதியே அல்ல. ஆனல், தரித்திரன் ஆண் மையுடன் ஆமளவிற்கு முயர்சி செய்துவந்தால் தரித்திரம் அவனுக்கு அரிய வரப்பிரசாதமானலும் ஆகும்; அது உலகத்துடன் போராடுவதற்கு ஒருவனை உற்சாகப்படுத்தி எழுப்பி விடும். இந்தப் போராட்டத்தில் பங்கப்பட்டுச் சிலருக்குச் சுகம் கிட்டா தொழியினும் மனதார முயன்ருேம் என்று திருப்தி கொண்டு மேலுக்கும் முயற்சிக்கத் தூண்டுதல் தரும். மன நேர்மையும் உண்மையும் உள்ளவர் களுக்கு பலமும் துணிவும் ஜெயமும் கடைசியில் சித்திப்பது நிச்சயம்.

ஃ

"மனிதர்கள் தங்கள் செல்வமும் சௌரியமும் இத்தன்மையன வென்று அறிந்திருப்பதாகத் தோன்ற வில்லை. செல்வத்தை மேலாகவும், சௌரியத்தைக் கீழாகவும் அவர் கள் மதிப்பிட்டிருக்கிருர்கள். தன் பலத்தை நம்பித் தன் சுகத்தை வெறுத்து நடப்பவனுக்குத், தான் தேடிய பானத்தைப் பருகவும், இனிய அன்னத்தை உண்ணவும், ஜீவனத்துக்கு வேண்டுவதைத் தேடப் பால்மாருமல் வகை அறிந்து உழைக் கவும். தன் வசப்பட்ட நற்பொருளைப் பதனமாய்ச் செலவிடவும் அறிவு உண்டாகும்" என ஒருவர் மொழிந் திருக்கிருர்.

ஃ

சுகத்தையும் அவரவர் மனதிற் குரிய போகங்களையும் நாடுவது மனி தர்க்கு இயர்கையான குணமாம். அதனுடன் மிகுந்த செல்வமும் அமைந்திருக்குமாயின், அது அந்தச் சுகபோகங்களையே எப்பொழுதும் தேடும்படி அவர்களை விசேஷமாய்த் தூண்டுகின்றது. ஆதலின், லக்ஷாதி பதிகளாய்ப் பிறந்தாலும், தங்கள் குலாசாரமாக வந்த தொழில்களில் பிரவர்த்தித்து, இன்பத்தை நிந்தை செய்து, இருக்கும் நாளெல்லாம் மெய்வருந்தி உழைப்பவர்களுக்கே விசேஷப் பிரதிஷ்டை உண்டு.

ஃ

நற்காரியம் ஒன்று செய்ய முயல் வதற்குச் செல்வம் தேவையாயினும் அது இல்லாமலும் முயற்சியின் மூல மாகவே எதையும் சித்திபெறச் செய் யவுங் கூடும். ஆதலின், தனிகராயி னும் தரித்திரராயினும் ஊக்கமது கைவிடாமல் தாமே வருந்திப் பாடு பட்டு, ஒரு பெருங் காரியத்தைச் சாதிப்பதே தமக்குப் பெருமை என் பதைச் செவ்வையாய்க் கண்டுணர் ந்து, அதற்கு ஏற்றபடி பாடுபடக் கடவர்கள். ஊக்கத்துடன் உழைக் காதவர்களுக்கு எந்தச் துறையிலும்

பிரதி வருஷத்திலும் இந்தியாக் கவர்ன்மெண்டார் பிறநாடுகளிலிருந் தும் முக்கியமாக இங்கிலாந்திலிருந்தும் 10-கோடி ரூபாய் மதிப்புள்ள சரக்குகள் வாங்குகிருர்கள். இவற்றில் பெரும் பகுதியை இந்தியாவில் வாங்குவதாயின் இந்தியாவுக்கு எவ்வளவு நன்மையுண்டாகும். ஐரோப் பாவிலிருந்தும் இந்தியாவுக்கு ஸமுத்திர மார்க்கமாக 15-ம் நூற்றுண்டில் வழி கண்டுபிடிக்கப் பட்டதிலிருந்தும் பயன் அடைந்தவர் அன்னிய தேசத் தார்தான்.

சித்தி கிடைக்கமாட்டாது. குலமக்களாயினும், குபேர சம்பத்துடையோராயினும், மகாராஜனாயினும், அகண்ட பூமண்டலத்தையும் தன் ஒற்றைக் குடையின்கீழ் அடக்கியாளும் சக்கரவர்த்தியே யாயினும், அனைவரும் அவரவர்கள் இறங்கிய துறையில் ஊக்கத்துடன் பாடுபடாமல் தீராது. பாடு இல்லாவிடின் பலனுமில்லை.

"தெய் வத்தா லாகா
தெனினு முயற்சி
மெய்வருந்தக் கூலி தரும்"

தெய்வானுகூல மில்லாதார்க்கும் விடாமுயற்சி ஒன்று இருக்குமாயின் விதியையும் வென்று வெற்றி பெறலாகுமெனக்கூறியிருக்கிறதென்றால், தெய்வானுகூலமுள்ள மற்றவர் விஷயத்தில் விடாமுயற்சியால் விளையும் மேன்மை இத்தன்மைய தென்பதையும் நாம் எடுத்துரைக்க வேண்டுமோ?

சுயேச்சையே சுகம்,
அடிமையே துக்கம்.

ஒருவரிடமிருந்து பத்து ரூபாய்க்கு சம்பளத்திலிருந்தவன், அதில் பிரியமின்றி விலகி, ஒரு சிறிய கடை வைத்துக்கொண்டு ஜீவிப்பதானான். ஏன் வேலையை விட்டாயென்றதற்கு; ஒரு ரூபாய் கிடைத்தாலும் சுயேச்சையே சுகமென்றான். இன்னொருவர் பிறருக்குட்பட்டு நூறு ரூபாய் சம்பாதிப்பதிலும் சுயேச்சையுடன் அறுபது ரூபாய் சம்பாதிப்பது மேலென்று கருதி நாற்பது ரூபாயை இழக்கவும் சம்மதித்தார். சுயேச்சையிலுள்ள மனோ திருப்தி மற்றெதிலுமில்லை.

க்ஷயரோகத்தின் கொடுமை.

க்ஷயரோகத்தால் பீடையுள்ளவர்களின் ஸமீபத்திலிருந்தால் ரோகம் ஒட்டிக்கொள்ளும். க்ஷயரோகி காறியுமிழும் கோழை யல்லது எச்சிலைப் பரிசோதித்தால் அதில் அந்த ரோகத்தை விளைத்த விஷப்பூச்சிகளிருக்கும். இவைகளில் ஒன்று ஒருவரது ரத்தத்தில் புகுந்துவிட்டால் ஆயிரக்கணக்காகி ஸ்வாஸப்பையை ஆவரித்துக்கொள்ளும். இந்த வியாதி முற்றினால் தீருவது அரிது. நமது ரத்தத்தில் Redcorpuscles கலந்த பூச்சிவடிவங்கள் உண்டு. இவைகள் அதிகமானால் சுத்த ரத்தம் பரவி சரீரம் ஆரோக்கிய ஸ்திதியிலிருக்கும். எக்காரணத்தாலாகிலும் இவ் வடிவங்கள் குறைந்தால் இரத்தம் கெட்டு உடம்பில் நீர் அதிகரித்து பலம் குன்றி உற்சாகமொழிந்து பலவித வியாதிகள் தோன்றும் மனுஷ்யனுக்கு ஹிருதயமும் மூத்திரப்பையும் ஜீரணப்பையும் சரியான நிலைமையிலிருந்தால் ஆரோக்ய ஸம்பத்து குறையாது.



* 'திருப்தி'யின் மேன்மை.

(Contentment)

1

என்னுடை மனமே எனக்கோரு ராஜ்யம்.
கைக்குமேல் இன்பம் காண்கின் றேன் அதில்.
இந்த இன்பம் இம்மா நிலந்தனில்
இயற்கை யானும் செயற்கை யானும்
அடையும் இன்பம் அனைத்தினும் மேலது.
பெரும்பா லார்கோள விரும்புவ அநேகம்
அடைந்திலேன் எனினும், அவைகளை நச்ச
எனது மனம்எனக் கிடந்தந் திலதே!

2

அரசர்க் குரிய ஆடம் பரங்களும்
செல்வக் குவியலும் செயம்பெறச் சேனையும்
மனப்புண் ஆற்றும் மதிமிகு சூழ்ச்சியும்
காதல் நோக்கைஉண் காமர் வடிவமும்
ஆகிய எதற்கும் அடிமையா கேன்யான்.
ஏனோ என்னில், என்மன நிறைவால்
எய்தி யுளேன் யான் இவையா வையுமே.

3

ஏகமா நிரம்பிய போக போக் கியங்களும்
பனமுறை தேவிட்டப் பார்த்திருக் கின்றேன்.
அதிவிரை வாய்உயர் பதவியிற் செல்வோர்
விரைவிற் கீழே வீழவும் கண்டுளேன்.
உயர்ந்த நிலைமை உற்றவர் பல்லோர்
ஊறுக ளால்அச் சுறவும் காண்கிறேன்.
அரிதின் முயன்(று)அவை அடைக்கின் றனர் அலர்.
பேரச் சத்துடன் பேணுவர் அவற்றை.
என்றும் இத் தகைக்கவல் என்மனக் கிலையே!

---

* இது ஆங்கில கவிஞரும் யாத்திரிகரும் ராஜதந்திர நிபுணருமான ஸர் எட்வர்ட்டையர் என்பவர் இயற்றிய "Contentment" என்பதன் மொழிபெயர்ப்பு. இஃது காலஞ்சென்ற பண்டிதர்பெருமான் ஸ்ரீ ம. கோபால கிருஷ்ண ஐயரவர்களின் அமிர்தவாக்கு.

4

மனநிறை வுடனே மன்னுநல் வாழ்வே
எனக்கா தரவென யான்கொண் டேளது.
வேண்டும் பொருட்குமேல் தேண்டுவ தில்லைநான்
அன்றியும் பிறர்மீ(து) அகங்கா ரத்துடன்
ஆணை செலுத்தும் ஆசையும் எனக்கில்லை.
இல்லா எதனையும் ஈயும் என் மனம் காண்.
யான்இவ் விதமா என்மனம் ஈவதை
ஏற்றுத் திருப்தி எய்திஓர் வேந்தனை
ஒத்தே வெற்றி உற்றுளேன் என்னே!

5

அளவிற் கதிகம் அநேகருக் கிருந்தும்
மேலும் பெறஅவர் விருப்புறு கின்றனர்
என்னிடத் திருப்பதெல் லாம்சிறி தேனினும்
அதிகம் தேடும் ஆசை எனக்கில்லை.
அதிகமே படைத்தும் அவர்கள்ஏ ழையரே.
சிறுபொருள் படைத்தும்யான் செல்வ வானே.
தரித்திர ரேஅவர்; தனிகன் யானே.
ஏற்போர் அன்னோர்; ஈவோன் யானே.
வேண்டிநிற் போர்அவர்; விடுத்துநிற் போன்யான்
வருந்துவோர் அன்னோர்; வாழ்பவன் யானே.

6

ஒருவன் நஷ்டம் உறுவதை நோக்கி
ஏளனம் செய்யேன்; எவரேனும் ஊதியம்
எய்துழி யும்வயிற் றெரிச்சல் எனக்கில்லை.
உலக பாச அலைத்திறன் எதற்கும்என்
மனத்தினை அலைக்கும் வல்லமை யின்று.
என் நிலை ஓர் அமை(வு) எய்திய தென்றும்.
பகைவருக் கஞ்சேன்; பரவேன் நண்பரை.
வாழ்வு வெறுத்திலேன்; சாவும்அஞ் சேனே.

7

ஐம்பொறி வாயிலா அடைசிற் றின்பமே
இன்பம் என்ன எண்ணுகின் றனர்சிலர்.

ஹிந்து சமூகம் பல காரணங்களால் பிரிவுபட்டாலும் அடிப்படை தத்துவம் எல்லாவற்றிருக்கும் ஒன்று. அது எல்லா ஆத்மாவும் ஒன்று என்பதே.

கடுகடுப் புடன்தாம் பிடிவா தத்துடன்
உரைப்பதே ஞானமென் றுன்னுகின் றனர் அவர்.
அவர்க்குச் செல்சார் அவரது பொருளே;
உறுபுனை சுருட்(டு)' அவர் திறமைக் களஞ்சியம்
எனினும் யான்காண் இன்பம் எல்லாம்
அமைவுறு மனத்துடன் அமர்ந்திருப் பதுவே.

8

ஆரோகமும் பூரண அநாயா சமுமே
எனது செல்வமா இருப்பன; எனக்(கு) என்
மாசிலா மனமே மாண்தடு படையாம்.
ஒருவர் உள்ளம் உவந்திடு மாறு
நான்.கைக் கூலி நல்குவோன் அல்லன்
மற்றும் ஒருவனை வஞ்சித் ததனல்
கோபத் திற்கிடம் கோடுப்பவ னும்அலன்.
இவ்வித மேயான் இருந்துவாழ் கின்றேன்.
இவ்வித மேயான் இருந்திறந் திடுவேன்.
எனது விருப்பம் எனைப்போல் யாவரும்
யாண்டும் வாழ வேண்டு மென்பதுவே.

9

யாண்டும் என்மனத் திருக்கும் எதனையும்
மீண்டும் பெற்றிட விரும்புகி லேன் யான்.
உள்ளதற் கதிகமா உறயான் அலைகிலேன்.
சமநிலத் தேயே அமர்கல் என் விருப்பு.
எம்மலை மீதுமுற் றிருக்க யான் ஏறேன்.
கடும்புயல் அடித்திடும் காலந் தன்னிலும்
கடற்கரை மீ(து) உட்கார்ந்து கொண் டிருக்கின்றேன்
இழக்கவே நேரும் எதனையும் மீண்டும்
உற்றிட வீணே உழைத் துழைத்துழல் வோரைப்
பார்த்(து) அன்னோரைப் பரிகசிக் கின்றேன்.
இச்சை எற்கிதுவே——இதற்குக் காரணம்
'அமைதிசால் மனத்தினும் அரும்பெருஞ் செல்வம்
மற்றிலை' எனயான் உற்றுணர்ந் ததுவே.

அந்த நிர்வாண வயோதிகரால் தான் இந்தியா ஒரு சாத்வீகநாடு' என உலகெங்கும் ஒரு பெயர் நிலவிவருகிறது. இந்தியா நமது சொந்த நாடு என்பதை நாம மறந்துவிட்டோம். நமது சொந்த நாட்டில் நாம் சுதந்திரத்துடன் வாழ உரிமை உடையவர்கள் என்பதையும் மறந்துவிட்டோம்.—

ஸ்ரீமதி ஸரோஜினிதேவி.

யுத்தத்தால் விளையும் கொடுமை.

தென்னாப்பிரிக்கா போவர் யுத்தம் முடிவுக்கு வந்தபோது போவர் ஜெனரல்களான இருவர் 12-6-1902-ல் பின் வருமாறு பேசினர்.

ஜெனரல் லூயி போதா:—நமக்குக் கஷ்டகாலம். ஆயுதங்களைக் கீழே வைத்து நிற்பது நம்முடைய ஸ்வயாதீனத்தை யடக்கம் செய்து அதைச்சுற்றி நாம் நின்று கொண்டிருப்பது போலிருக்கிறது. நம்மாற் கூடியவரை சண்டை போட்டோம். ஸாத்தியப்படவில்லை. தேச அரசாக்ஷி நம்முடைய ஸ்வாதீனத்திலிருந்து போய் விட்டதென்பது உண்மை. ஆயினும், தேசம் நம்முடையதுதான். அதில் வஸிப்பவர்களும் நம்மவர்களே. கவர்ன்மெண்டு மாறியதேயன்றி வேறொன்றும் மாறவில்லை. புதிய கவர்மெண்டுக்கு அடங்கி யிருப்போம். யுத்தத்தால் ஸ்திரீகள் பட்ட ஸங்கடம் சொல்லி முடியாது. 4000-போவர்கள் யுத்த முனையில் தங்கள் தேசத்துக்காகப் பாடுபட்டுப் பிராணனை விட்டார்கள். 2000—ஸ்திரீகள் இறந்து போயினர். அநேகர் தங்கள் மனைவி மக்களை நிராதரவாய் விட்டு மாண்டு போனார்கள்.

ஜெனரல் டிலாரே:—நம்முடைய கதியை நினைக்கத் துக்கமாயிருக்கிறது. நம்முடைய ஸ்வயாதீனத்தை இழப்பது கல்லறைக்குப் போவது போல் காணப்படுகிறது. ஆயினும் என்ன செய்யலாம்? கடவுளுடைய இஷ்டத்தை யாரால் தடுக்க முடியும்? மனுஷ்யர்களால் எவ்வளவு செய்யக் கூடுமோ அவ்வளவும் செய்தாயிற்று. நம்முடைய வீடுகளெல்லாம் பழய நிலைமைக்கு வந்து விட்டன. (அதாவது யுத்தத்தில் எல்லாம் கரியாகித் தரைமட்ட மாயிற்றென்றபடி)

சில ஸாதுக்களின் மோசம்.

இக்காலத்தில் மோசம் செய்யும் ஸாது ஸந்யாசிகளின் தொகை பெருகி வருகிறது. இவர்களின் வெளி வேஷத்தையும் கபட ஹிருதயத்தையும் அறியாத நிஜ ஸாதுக்கள் தங்கள் திரவியத்தைப் பறிகொடுத்து அந்தோ திகைக்கின்றனர். இப்போதுதான் ஆகாசத்திலிருந்து பொதியமலை வழியாய் இறங்கி வந்தது போல் பாவனை காட்டி, கண்ணை யுருட்டிப் பிறரது மதியை மயக்கிப் பேராசையை விருத்தி செய்து உள்ள காசைப் பிடுங்கிக்கொண்டு ஓட்டம் பிடிக்கிறார்கள். கல்கத்தாவில் ஒரு ஸாது மூலிகையின் உதவியால் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கித் தருவதாய் ஒரு வியாபாரிக்குக் கூற, அவர் ஒரு சிறிய தங்கக் கட்டியைத் தந்து பதின் மடங்காக்கித் தரும்படி வேண்டினார். ஸாதுவுக்குக் கோபம் ஜனித்து, 'அடே! உன்னிடமுள்ள எல்லா தங்கம் வெள்ளிகளையும் கொண்டுவா, ஒரே முகூர்த்தத்தில் பதின் மடங்காக்கித் தருகிறே'னென, வியாபாரி ஸந்தேகித்து, போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் கூறி, அவர் யோசனைப்படி 80—தோலா தங்கத்தை ஸாதுவினிடம் தர, ஸாது ஒரு ஓட்டைச் சட்டியில் சாம்பலைக் கொட்டி அதில் தங்கத்தை வைத்து மந்திரங்களை யுச்சரிப்பது போற் காட்டித் தங்கத்தைத் தன்னுடைய லாங்கோட்டுக்குள் ஒளித்து வைக்க, மறைந்திருந்த இன்ஸ்பெக்டர் உடனே ஸாதுவைக் கைது செய்து, பலர் முன்பு அவன் ஒளித்து வைத்த தங்கத்தை எடுத்துக் காண்பித்து மோசத்தை வெளியாக்கினார்.

பழமொழிக் குறிப்புகள்

4. மக்கள்.

(500-ம் பக்கத் தொடர்ச்சி.)

385. "பால் இருக்கிறது, பாக்கியம் இருக்கிறது, பாலில் போட்டுக் குடிக்கப் பத்து பருக்கைக்கு வழியில்லை"

ஒரு குழந்தை யில்லாமல் ஒரு வீடு நசித்துவிடுகிறது. ஒரு குழந்தைப் பேற்றுக்காக எவ்வளவோ தவமிருக்கிறார்கள். கடவுள் கிருபையால் வேண்டிய குழந்தைகளைப் பெற்றிருந்தும், மற்றும் பல சுகநலங்கள் செம்மையாக அமைந்திருந்தும் செய்தொழிலில் விருத்தியில்லாமல், வரவும் போதுமானதாயின்றி, செலவுக்கு ஏங்கி வாடுகின்றார்கள். வெளிப்பார்வைக்கும் வெளியிலிருந்து பார்ப்பவர்க்கும் எவ்வளவோ பாக்கியமும் மேன்மையுமாகத் தாங்கள் வாழ்வதாகத் தோன்றினாலும், அந்தரங்கத்தில் படும்பாடு பரிதாபப்பிழைப்பாயிருக்கின்றது. வெளியில் சொல்லவுங்கூடவில்லை. உதவி செய்வாருமில்லை. இப்படியாகக் கடவுளை நம்பித் தம் மக்களுடன் காலங்கழிப்பவர்கள் எவ்வளவோ பேர். குழந்தைகளைப் பெற்றும் ஸந்தோஷப்பட முடியவில்லை. ஒன்றிருந்தால் மற்றொன்றில்லை என்பதே உலக ரீதி.

386. "பிள்ளைச் சீர் கொள்ளக் கிடைக்குமா?"

தட்டுதட்டாகச் சீர்வரிசைகள் பெறலாம், ஆனால், பிள்ளையென்பது அப்படிச் சீர்வரிசையாக கிடைக்கக்கூடியதா? அது கடவுளே மனம் இரங்கித் தரும் பெரிய நன்கொடையன்றோ? மக்களின் அருமை இதனால் புலப்படும்.

387. "பிள்ளை பெற்றவனுக்கும் மாடு படைத்தவனுக்கும் வெட்கமில்லை."

மாடு கொண்டவன் அதனோடு திரியவும், அதை ஆற்றில் தேய்த்துக் கழுவவும் வெட்கப்படுகிறதில்லை. மாடு அவனுக்கு ஒரு பெருஞ் செல்வம். அதைப் பார்த்து அவன் பூரிக்கிறான். இவ்விதமே குழந்தையைப் பெற்றவனும், அது செய்யும் ஆபாசங்களைச் சகித்துக்கொள்ளப் புத்தி பெறுகிறான். மலஜலங்களை வாரியெடுக்கவும், குழந்தையைத் தூக்கிக்கொண்டு திரியவும்

இராத்திரி பன்னிரண்டு மணி நேரங்கடந்து ஒருமணி அடிக்கிறதற்குள்ளாக மனிதர்களுடைய தேகமும் அதன்கூட மாறுபடுவது எல்லோருக்கும் வழக்கம். அப்போது தேகத்தில் ஒருவித அனல் கிளம்பிக் கொதிப்புற்றுத் தேகம் வியர்வை தட்டும். மனோவிகாரமும் உண்டாகும்.

அவன் நாணுகிறதில்லை. தந்தை என்ற அந்தஸ்து தனக்கு ஏற்பட்டதும் அதற்குத் தக்கபடி தன்னை மாற்றிக்கொள்கிறான். ஏனெனில், குழந்தை என்பது கடவுள் கொடுத்த லாபமாய் இணையிலாப் பெருஞ்செல்வமா யிருப்பதனால்தான்.

388. "பிள்ளை பெற்றுப் பேரிடவேண்டும்."

ஒவ்வொருவருக்கும் அவரது உள்ளத்திடையே இருக்கும் ஆவலாதியை இது குறிப்பிடுகின்றது.

389. "பிள்ளையில்லாச் சோறு புழு."
"பிள்ளையில்லாத பாக்கியம் பெற்றிருந்தென்ன சிலாக்கியம்?"

இவ்விரு பழமொழிகளும் ஒரே பொருளைக் குறிப்பவையாகும். எது சமைத்தாலும் பிள்ளைகளுடன் கூடி யுண்ணும் உணவே அமிர்தமாகும். அவ்விதமின்றி, தனியே சமைத்து எவ்வளவு உயர்ந்த போஜனத்தைப் புசிப்பினும் அது புழுக்கள் கலந்து சுவை கெட்டதாகவே இருக்கும். இவ்விதம் பிள்ளையற்று, வேறு பாக்கியங்கள் பெற்றிருந்து என்ன பிரயோஜனம்?

390. "பிள்ளையில்லா வீட்டில் கிழவன் துள்ளி விளையாடுகிறானும்."

புத்திரப்பேறு இல்லாத சதிபதிகள் தாங்களே அவ்வீட்டுக்குக் குழந்தைகளாக நினைத்துக்கொண்டு சமாதானப் படவேண்டி யிருக்கிற பரிதாபத்தை இது விளக்குகிறது.

391. "பிள்ளையின் மடியிலே பெற்றவன் உயிர் விட்டால் பெருங் கதியுண்டு."

புத்திர பாக்கியமில்லாதார் 'புத்' என்னும் நரகத்தில் வீழ்வார்கள் என்பது சாஸ்திர வசனம். பிள்ளைப் பாக்கியமுடையவனுக்கு நற்பதவி கிடைப்பதுடன், இவ்வுலகிலும் தன் பிள்ளையால் பெயர் விளங்கவும் பெறுகிறான். அவனுக்கு ஆதரவு சொல்லவும் அவனைக் கவனித்துக்கொள்ளவும் ஒரு புத்திரன் இருப்பது மனதுக்கு எவ்வளவோ ஆறுதலும் நிம்மதியுமாகும். தனது மரணத்திற்குப் பிறகும் தனக்குத் திதி முதலியவைகளை நடத்தி, தன்னை நற்கதிபெறச் செய்விக்கவும் புத்திர பாக்கியம் வேண்டுமென்றபடி.

தேசாபிமானம் என்னும் குணம் ஹிந்துக்களுக்கு இயற்கையாய் உண்டானதல்ல. வெள்ளைக்காரர்களைப் பார்த்து அனுஸரிக்கும் குணமாயிருப்பதால் அதில் எல்லோருக்குமே மனம் ஆழ்ந்து காரியம் முடிகிறதில்லை அப்போதப்போது பிரமாததாய்த் தோன்றி உடனுக்குடன் மறைந்து போகிறது. இராஜரீக சங்கங்களில் பேசும் தேசாபிமானிகள் பிரஸங்க மேடையினின்றும் கீழே இறங்கியவுடன் தாங்கள் தேச நன்மைக்காகச் செய்யவேண்டிய கடமைகளை மறந்துவிடுவதே அதிகம். ஸமயம் வந்தபோது ஸங்கம் கூடிக் கூத்தாடி பின்னர் ஓய்ந்து நிற்பது ஒருவித நோயாகும். கதர் உடுத்தினால் எங்கே தங்களின் உத்தியோகத்தில் மண் விழுந்து விடுகிறதோவென்று அஞ்சும் தைரிய ஸம்பன்னர்களும் அநேகரே.

வில்லு பண்டிகையில் துடைப்பக்கட்டை.

ஹெக்கண தேவன் கேகட்டைக் கடுத்த "தக்கே" என்ற கிராமத்தில் ஒரு காளி கோயில் உண்டு. அந்தக் கோயிலில் வருஷத்துக்கு ஒருதரம் ஏப்ரல் மாதத்தில் உத்ஸவம் நடக்கும். வில்லு பண்டிகை யென்றும், பாம்பல் பண்டிகை யென்றும் இரண்டுவிதம் கொண்டாடப்படும். பண்டிகையன்று இரவில் மூங்கிலால் ஒரு கூடுகட்டி, அதைத் துணிகளால் அலங்கரித்து, தெருத்தெருவாய் ஊர் கோலம் கொண்டுபோவார்கள். அங்கு வந்திருக்கும் ஜனங்களெல்லாம் மனம் வந்தபடி பாட்டுகள் பாடிக்கொண்டு ஒரு அரசமரத்தண்டை சென்று அந்த மூங்கில் மண்டபத்தைக் கொளுத்திவிட்டு ஸந்தோஷிப்பார்கள். மறுதினம் அதன் சாம்பலைக் கோணிப் பைகளில் நிறைத்துக் கொண்டு எல்லோர்மீதும் வாரி இறைப்பதும், விளக்குமாற்றால் அடிப்பதுமா யிருப்பார்கள். சிலர் தாமாகவே சாம்பலை வாரி தங்கள் மேலே போட்டுக்கொண்டு விளக்குமாற்றால் அடித்துக்கொள்வர். இந்தக் கோலாகலத்தைச் சொல்லிமுடியாது. காளிகாதேவியை வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டோடுவர். இப்படி விழுந்த சாம்பல் நிலத்துக்குமேல் இரண்டடி உயரமிருக்கும். இது நடந்த மறுதினம் ஸகலரும் ஸ்நானம் செய்து இரண்டு பிரிவாகப் பிரிந்து வில்லடிப்பார்கள். இந்த ஸந்தோஷோத்ஸவத்தைப் பார்ப்பதற்காக நானாவிடங்களிலிருந்து பிரஜைகள் வருகின்றனர். வியாபாரிகளுக்கு வேண்டிய லாபம் கிடைக்கும். இந்த விநோதோத்ஸவம் வெகு காலமாய் நடந்து வருகிறது.

படித்தவர்களின் சமர்த்து.

சட்டம் தெரியாத மூடன் சட்டத்துக்குத் தவறாய் நடந்தால் தண்டனையடைவது நிச்சயமே. ஆனால், சட்டம் தெரிந்தவன் அவன் எவ்வளவு அக்கிரமம் செய்தாலும் அந்த சட்டம் ஒன்றும் தன்னை அசைக்காதபடி சட்டத்திற்குக் குல்லா போட்டுவிடுவான். இது படித்த சமர்த்தாகும். படிப்பாளி தன்னை வெகு மேன்மையாகவும் சத்தியவந்தனாகவும் வெளிக்குக் காண்பித்துக்கொண்டு, உள்ளுக்கு வஞ்சகமும் மோசமுமாக நடப்பானாகில், அதைப் பிறர் கண்டுகொள்வது அருமையாகும். அதிகப் படிப்பாளியென்று வெளிப்பெயரேயன்றி, அந்தரங்கத்தில் ஒரு நற்குணமுமில்லை. எத்தனையோ பெண்களின் கற்பைத் தொலைத்த சண்டாளர்களாகவும் பலர் இருக்கிறார்கள். அந்தப் படிப்பாளியின் வித்தியா சக்தியிலே உலகமே பிரமிக்கிறது. ஆயினும் என்ன? எத்தனையோ இடங்களில் படுமோசம் செய்தவனா யிருக்கிறான். ஒரு படிப்பாளி எழுதிக் கொடுக்கும் பத்திரத்தில் எந்த வார்த்தை முக்கியமாயிருக்கவேண்டுமோ அது கபடத்தனமாய் விட்டுவிடப்பட்டிருக்கிறது. பத்திரம் எழுதுகையிலேயே மோசமும் சூழ்ச்சியுமாய்த் தயாரிக்கிற தன்மை படிப்பாளிக்குதான் அதிகம். படிப்பாளியின் பிரியத்தில் விஸ்வாசம்கொண்டு ஏமாறியவர்கள் எண்ணிலர். படிப்பு நல்ல விஷயங்களையே போதித்தபோதிலும் பூர்வ ஜென்மத்தின் தீய குணம் அந்தப் படிப்பால் விருத்தியடைந்துவிடுகிறது. இவ்விதமே நற்குணமுடையோர் தமது படிப்பினால் தம்மைத் திருத்திக் கொண்டு சத்தியவந்தர்களாய் விளங்குவதும் கண்டு வருகிறோம்.

நிதானித்து யோசித்தல்.

அவனவனுடைய மனப்போக்குக்குரிய வழியை அவனவனே நிதானித்து யோசித்துக்கொள்ள வேண்டுமேயன்றி, ஒருவனுக்காக மற்றொருவன் யோசிப்பதென்பது கூடாது. நாம் எந்தப் பொருளைப் பார்த்தாலும், எவரைக் கண்டாலும் நமது மனதிற்கு சிரமம் உண்டாகாதிருக்கும்படியாக மேற்பார்வையாகப் பார்க்க விரும்புகின்றோமேயன்றி உற்று நோக்கி ஆராய்வதில்லை. சிலர் மற்றவர்களைப் பார்க்கிலும் அதிக துரிதமாய் ஒரு பொருளைப்பற்றியோ ஒரு மனுஷ்யரைப்பற்றியே குறிப்பாகத் தெரிந்துகொண்டுவிடுகிறார்கள். அவர்களின் மூளையிற் பட்டதே கடைசியில் சரியாகின்றது. எவ்வளவோ உத்தமர்களென்று ஒரு சிலரை மற்றவர்கள் மதிக்க, இந்தக் கூர்மையான நுண்ணறிவுள்ளவர்களோ அவர்களை மிகப் பொல்லாத மனிதர்களென்றும், எந்தப் பிடிப்பும் தற்சமயம் அகப்படாததால் அவர்கள் அத்தனை சாதுக்கள் போலிருக்கிறார்களென்றும் கூறிவிடுகிறார்கள். இவ்விதமே, ஒவ்வொருவரைப்பற்றியும் அவர்களின் குணங்களை அதிசயிக்கும் விதமாய் எடுத்துரைத்து ருசுப்படுத்தியும் விடுகிறார்கள்.

ஃ

ஏதாவது ஒரு விஷயத்தில் உண்மையாய்த் தேர்ச்சி பெறவேண்டுமென விருப்பமுடையோர் எந்த விஷயத்தையும் தாமே நிதானமாக யோசித்துப் பார்க்க வேண்டும். பிறர் ஒரு விஷயத்தில் ஒரு விதமாய் அபிப்பிராயப்பட்டிருந்தால், அவற்றுடன் தாமும் கலந்துகொண்டு 'ஆம்' என்று கூறிவிடாமல், அவர்கள் கூறியதைத் தூரத்தில் வைத்துவிட்டுத் தமது சொந்த அறிவுகொண்டு நிதானமாக யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஃ

எவ்வளவோ அற்புத யந்திரங்களை நாம் காண்கிறோம். அத்தனை நுட்பமாய் அந்த யந்திரங்களை நிருமித்தது எது? யாரோ சிலருடைய நிதானமான ஆலோசனையேயன்றி வேறல்ல. முதல் தடவையிலேயே இவ்வளவு புதுமைகளையும் யந்திர நுட்பங்களையும் அவர்கள் கண்டுபிடித்தார்களோ? இல்லை. நெடுநாள் நிதானமாக யோசித்து யோசித்துக் கடைசியில் அந்த யந்திரங்களைச் செய்யும்படியான வழிகளைக் கண்டறிந்தனர்.

ஃ

நிதானமான யோசனையில்லாமல் பெரிய காரியங்கள் எதுவும் இதுவரை சாதிக்கப்பட்டதுமில்லை; இனிமேலும் சாதிக்கப்படவு மாட்டாது. நாம் புத்திமான்களாயும், யோக்கியர்களாயும் ஆவது நிதானமான யோசனையினாலேதான். நம்மனதில் நல்ல யோசனைகள் குடி கொள்

கற்றலிற் கேட்டலே நன்று; கேட்டதைச் செயல் முறைக்குக் கொண்டுவருதல் அதனினும் நன்று.

ளும்படி நாம் எவ்வளவுக் கெவ்வளவு பாடுபடுகிறோமோ, அவ்வளவுக்கவ் வளவு உண்மை யுள்ளவர்களாயும். பெருமைப் பெற்றவர்களாயும் ஆகி றோம். நாம் ஒருவர்க்கு ஒருவர் சண்டையிட்டுக்கொண்டு ஈசுவர சிருஷ்டியின் உத்தம ஒழுங்கை அழிக் கவா வந்து பிறந்தோம்? ஒருபோது மில்லை. நிதானமான யோசனை யுடையோர் பிறரது மனஸ்தாபங்க ளுக்கு ஆளாகாது தப்புவித்துக் கொள்வதுடன். தங்களின் காரியத் தையும் விவேகத்துடன் முடிக்கவல்ல லவராவார்கள். நிதானியாமல் அவ சரப்பட்டு ஒன்றைச் சொல்லிவிடுவதி னும் மிக்க அனர்த்தம் வேறில்லை.

ஒருவரின் நிச்சய உறுதியை மாற்ற முயலுதல்.

எத்தகைய உறவினராயினும் அவரைத் தன் வீட்டுப் பெண்களுடன் அதிகம் பழகவிடுவதில் சில சமய விபரீதப் பட்டுவிடுகின்றது. ஒருவர் தமது உறவினனொருவனை, தமது வீட்டுப் பெண்களிடம் சரச வார்த்தைகளை வைத்துக் கொண்டு தீய சிந்தனையுடன் தோன்றுவதாகக் கண்டு, இனி அந்த உறவினன் தம் வீட்டில் காலடி வைக்கக்கூடாதென்று கண்டித்து விலக்கிவிடுகிறார். அவர் அதே உறுதியுடனும் எச்சரிக்கையுடனும் இருக்கிறார். அந்த உறவினனின் தாயார், தங்கை, மனைவி முதலியவர்கள் அவர் வீட்டு விசே ஷத்துக்கு வந்து போகிறார்கள். அந்த உறவினனை மட்டும் அழைக்கவில்லை; அவனும் வரவில்லை. அந்த உறவினனின் தாயார் பல தினங்கள் தங்கிக்கொண்டு வெகு விசுவாசமாய் நடந்து மயக்குகிறாள். இடையில் இன்னொரு விசேஷம் நடக்கப்போகையில், அதற்காவது தன் குமாரனை வருமாறு சொல்லக்கூடுமென்று எண்ணுகிறாள். ஆனால், வீட்டுக்கா ரரோ தன் உறுதியில் மாறாமல் அந்த உறவினனை அழைக் காமலே யிருந்துவிட, இது அந்த உறவினனின் தாய்க்கு வருத்தமாகி, இத்தனைநாள் தங்கி வெகு பிரியம்போல காட்டி மயக்கியும் பயன்படவில்லையே யென்று கோபித்துக்கொண்டு சென்றுவிடுகிறாள். எவர் மயக்கினும் தனது நிச்சய உறுதி மாறாதிருப்பவரே அவர்களை வென்ற தீரராவார்.

ஒருவர்க்கொருவர் நேசமாயிருந்துகொண்டு ஆரோக்கிய லாபத்தையும், வித்தியார்ஜனையையும் அடைந்து ஸத் கீர்த்தி பெறுவது சிரேயஸ்கரம். அவ்விதமின்றி. ஒருவருக் கொருவர் முட்டி மோதிக்கொண்டு துவேஷப் படு வதில் தங்களின் தீக்குணங்களையே பெருக்கிக்கொள்வோராகின்றனர். எதி ரில் நல்ல வஸ்து கிடைத்திருந்தும் அவர்களுக்கு அனுபவிக்கப் பிராப்த மில்லை போலும்!

கிருக யுத்தம்.

பாதகண்டம் என்ற பத்திரிகைக்கு 'தூமன்,' 'குளிகன்' என்ற இருவர் விஷயங்கள் அனுப்பி வந்தனர். 'தூமன்' ஒரு அனுபவம் வாய்ந்தவர். அவரது கட்டுரைகளில் உலகாநுபவங்கள் பொதிந்து கிடக்கும். அர்த்தம் மறைந்து நிற்கும். அவர் வேண்டுமென்று ஒருவரையும் தாக்குவதில்லை, ஆனால், அவருடைய வார்த்தைகள் பாணங்களைப் போலிருக்கும். அது யாருக்கேனும் சவுக்கடிபோல் அமைந்துவிழும்!

ஒருமுறை அவர் "படிப்பும் பட்டமும்" என்ற வியாசத்தில் பி. ஏ. பட்டதாரிகளைக் குறித்து எழுதியிருந்தார். அதனில் அவர்—"பி. ஏ. என்றால், கலைகளில் பிரும்மாச்சாரி என்று பொருள். ஆனால், ஒரு பி. ஏ. பட்டதாரிக்கு என்ன கலாஞானமிருக்கிறது? சங்கீதத்தில் அவனுக்கு ஞானமுண்டா? வைத்தியத்தில்தான் தெரியுமா? அல்லது ரஸாயன நிபுணனாகவாவது இருக்கிறானா? பொடாஸியம் நைட்ரிக் ஆஸிட் என்று இரண்டு பாஷாணங்களின் பெயரையும், ஆஸ்திரேலியா ஆப்பிரிக்காவென இரண்டு கண்டங்களின் பெயரையும் தெரிந்து கொண்டவன் எப்படிக் கலா நிபுணன் என்ற பட்டத்தைத் தாங்கத் தகுதியுடையவனாவான்? என்றெல்லாம் எழுதியிருந்தார். இக்கட்டுரை எத்தனை பி. ஏ. பட்டதாரிகளது ஆத்திரத்தைக் கிளப்பி விட்டிருக்காது?

இன்னொருமுறை ஸ்திரீ சுதந்திரங்களைப் பற்றி எழுதிய குளிகனை நேரடியாய்த் தாக்கி, "ஸ்திரீகள் எவரும் விரும்பும் மிட்டாய்க்குச் சமமானதால், அதைத் திறந்து வெளியில் வைப்பது கெடுதி" என்றெழுதினார். குளிகன் நிருபர் மிக்க கோபங் கொண்டு "பாதகண்டம்" பத்திராதிபரிடம் சென்று, தான் "தூமனை" நேரில்கண்டு கண்டிக்க வேண்டுமென, பத்திராதிபரும ஒரு நாள் தூமன், குளிகன் இருவரையும் சந்திக்க வைத்தார். இருவரும் ஒருவரை யொருவர்கண்டு பிரமித்தனர். குளிகன் என்ற பெண் தூமனைத் தன் கணவன் என்று அறிந்து வியப்புற, அவ்விதமே தூமனும் தன் மனைவியே குளிகன் என்றுணர்ந்து ஆச்சரியப் பட்டான்.

S. V. A. சுமி.

சிறிய ஆசைகளில் திருப்தி.

சிறிய ஆசைகள், சிறியலக்ஷியங்கள் எப்போதுமே பெரிய ஆசைகளுக்கும், பெரிய லக்ஷியங்களுக்கும் சத்துருக்களாகும். சிறு மீனுடனே திருப்தி பெற்றுத் தன் வலையை எடுத்து விடுவோன் பெரிய மீனைப் பிடிக்கவேண்டிய பொறுப்பை யிழந்து, பெரிய மீனும் கிடைக்கப் பெறுகிறான். இன்றைக்கு ஒருவர் நாற்காலியில் வீற்றிருக்க, அவரின் கீழ்தான் வேலையாளாக இருந்தாலும், தன் ஆயுள் காலம் முழுதும் அப்படியே இருந்துவிட எண்ணுவது கூடாது. வேறோரிடத்தில் தானும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து பெருமைப் படுவதற்கு ஒரு புறம் முயற்சியும் ஆசையும் வைத்துக்கொண்டு, தற்போதைக்கு வேலையாளாக இருந்துகொண்டு, அந்த வேலையாள் முறையில் தன் காரியங்களையும் ஒழுங்காகவும் சுறுசுறுப்பாகவும் நடத்திக்கொண்டு போகவேண்டும். எப்போதும் பெரிய நோக்கம் ஒன்று வைத்துக்கொண்டே வேலை செய்ய வேண்டும். தற்போதுள்ள கூலிக்கார நிலையில் திருப்தி பட்டுப்போகக் கூடாது. இன்று கிடைக்கிற சொற்ப சம்பளத்தில் சந்தோஷப் பட்டுவிடக் கூடாது. தனது நியாயமான முயற்சியில் உழைத்து ஓங்கமுயன்றால் அது பேராசை யாகாது பிறரைக் கெடுத்து வாழப்பார்ப்பதே பேராசை.

விவசாய வினாவிடை.

வினா:—ஒரு கிணற்றில் 7-கவலைக்கு ஜலமிருக்கிறது. அகலம் 40-அடி இருக்கிறது. மேற்படி கிணற்றைச் சுற்றி 150-எக்கர் நிலமிருக்கிறது. நீர் இறைக்க யந்திரங்களை உபயோகிப்பதெப்படி?

விடை:—கிணற்றில் 7-கவலைக்கு ஜலம் இருந்தால், அதில் எண்ணெய் இயந்திரமும் (Oil Engine), பம்பும் (Pump) ஸ்தாபிக்கலாம். எவ்வளவு விஸ்தீரணம் தண்ணீர் பாய்ச்சலாமென்பது நிலத்தின் இயல்பையும், சாகுபடி செய்யும் பயிரையும் இன்னும் இதைப்போன்ற மற்ற விஷயங்களையும் பொருக்கும். இதைக் குறித்து விவரம் அறிய விரும்புவோர் சென்னையில் டைரெக்டர் ஆப் இண்டஸ்டிரில் (Director of Industries) என்பவருக்சாவது, அல்லது, சூப்பிரண்டண்டு ஆப் போரிங் டிபார்ட்மெண்ட் (Superintendent of Boring Department) என்பவருக்காவது எழுதினால் அவர்கள் அவ்விடத்துக்கு வந்து பார்த்து வேண்டிய உதவி புரிவார்கள். 25-அடி உயரத்துக்கு சாதாரணமான பம்புகள் தண்ணீர் எடுக்கும். 30-அடி உயரத்துக்குமேல் தண்ணீர் எடுக்கக் கூடியதான Force Pumpகள்கூட இருக்கின்றன. கோயமுத்தூர் ஜில்லாவில் ஆழமான கிணறுகளிலிருந்து இன்ஜினும் பம்பும் கொண்டு தண்ணீர் இறைப்பதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம்.

ஃ

வினா:—இன்ஷூர் பாங்கிகளில் குடித்தனக்காரர் தன் சொத்தின் கிரய மதிப்பில் பாதிக்குக் கடன் வாங்கி பிறகு திருப்பிக்கொடுக்க சகாயமாய் எந்த பாங்கி யிருக்கிறது?

விடை:—சர்க்காரின் கோஆபெரிடிவ் டிபார்ட்மெண்டார் ஸ்தாபித்த பாங்கியில் ஒரு மெம்பராகச் சேர்ந்தால், ஐந்து வருஷ வாயிதாவில் வட்டியும் முதலும் செலுத்திவிடலாம். ஐந்து வருஷத்துக்குள் பாதி வட்டியும் முதலும் செலுத்தியிருந்தால் பின்னும் ஐந்து வருஷம் வாய்தா கொடுக்கக்கூடும். இவ்விதமாக 10-வருஷத்தில் வட்டியும் முதலுமாய்ச் செலுத்தி கடன் முழுதும் தீர்த்துவிடக்கூடும். இவ்விஷயத்தைப்பற்றிய விவரங்கள் தெரிய வேண்டி யிருந்தால் திரிச்சினாப்பள்ளியிலிருக்கும் மகாண கோஆபரெடிவ் அசிஸ்டண்டு ரிஜிஸ்தார் அவர்களுக்கு விண்ணப்பம்செய்துகொள்ளலாம்.

ஃ

வினா:-குங்குமப்பூவைப்பற்றியும், அதைப் பயிர் செய்யும் விதத்தைப் பற்றியும் தெரிவிக்கவேணும்.

விடை:—குங்குமப்பூ என்பது குங்குமப் பூச்செடியின் புஷ்பங்களினுடைய நடுத் தண்டின் கீலம். சுமார் 400-சேர்ந்தால் ஒரு அவுன்ஸ் சேரும். இச்சரக்கு சாதாரணமாய் ஐரோப்பா தேசத்திய செலவுக்காக பிரான்ஸ் (France), ஸ்பெயின் (Sp.in), இத்தாலி (Italy) முதலிய இடங்களிலிருந்து கிடைக்கும். இந்தியாவில் விற்பனையாகிறது. பிரான்ஸ் (France), சீனா (China), காஷ்மீரம் (Kashmir) முதலிய இடங்களிலிரு

மடையர்களுக்கும் அடி முட்டாள்களுக்கும் என்னதான் தெரியும்? பிறர் சொன்னதை அவர்கள் கேட்கவேண்டியவர்களே. (பர்னார்ட்ஷா.)

ந்து விசேஷமாயும், பெர்சியா (Persia)விலிருந்து கொஞ்சமாயும் கொண்டுவரப்பட்டு விற்கப்படுகிறது. இச்செடி இந்தியாவில் காஷ்மீருக்கு சமீபத்தில் பாம்பூர் (Bampur) என்னும் இடத்துக்குச் சுற்றிலும் சுமார் 130-எக்ரா விஸ்தீரணத்தில் விளைவிக்கப்படுகிறதாகத் தெரிகிறது. இது சமுத்திர மட்டத்திற்குமேல் 6000 முதல் 9000 அடி உயரத்தில்தான் வளரும். இதில் விதை உண்டாக சுமார் 3-வருஷம் பிடிக்கும். அப்போதுதான் அவைகளின் கிழங்குகளை எடுத்து நடும் வழக்கம் உண்டு. ஒருதரம் கிழங்குகளை நட்டால் சுமார் 15-வருஷத்திற்கு செடி மறுபடியும் உண்டாக்க வேண்டியதில்லை. வருஷா வருஷம் பழைய தாய்க் கிழங்குகள் அழுகி, புதுக்கிழங்குகள் பக்கத்தில் கிளைத்து, அதிலிருந்து பயிர் உண்டாகும். இச்செடியை நாம் பார்க்காததாலும், அதின் பயிர் செய்யும் விதத்தைப்புஸ்தகங்களில் வாசித்திருப்பதாலும் இங்கு சுருக்கமாய் அதைக் குறித்துச் சொல்ல முடியுமே தவிர, விஸ்தரித்து எழுத நமக்குப் போதுமான அனுபவம் கிடையாது.

J. R. R.

தன்னிலும் மீறிய ஒரு பலவானையோ, சக்திவந்தனையோ தான் வேலைக்கு இருக்குமிடத்தில் அதிகம் வருமாறும், தன்னுடன் பழகுமாறும் வைத்துக் கொள்ளக்கூடாது. அவன் தான் இருக்கும் உத்தியோகத்தையே பறித்துக்கொள்ளும் எதிரியாகவும் ஆகலாம். தான் ஒன்றை முடியாதென்று மறுத்திருக்க, தன் எஜமானனிடம் சென்று தூண்டி அதை முடித்துக்கொள்வோன் விஷயத்தில் அவன் கபட மனிதனென்றும், தனக்கு மிகஆபத்தானவனென்றும் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும். அவன் பிறகு தன்னோடு நேசமாய்க் குலாவ வரினும், எங்கு தன் ஜீவனத்தைக் கெடுக்க வருகிற பயங்கர சண்டாளனோ என்று அஞ்சி நடுங்கி, அவனை அதிகமாக உள்ளே சேர்க்காமல் ஜாக்கிரதையாக விலக்கி எச்சரிக்கை கொள்ள வேண்டும். இன்னோர் அநுகூல சத்துருக்களாவர்.

பிறர் தாழ்த்துகையில் உயர்த்துதல்.

ஒருவரை மற்றவர் கர்வ சிந்தையுடன் தாழ்த்திக் கூறுகையில், நாம் அதற்குப் பதிலாக அவரை உயர்த்திக் கூற அருகிலிருக்கிறோமென்று காண்பித்துக்கொண்டு தைரியம் தரவேண்டும். பிறர் தாழ்த்தியதால் நாம் கேவலப்படுத்தமாட்டோமென்றும் ஆதரவு சொல்ல வேண்டும். தன் வீட்டில் கலகம் சண்டையால் நம் வீடு தேடி வந்தவருக்கு அவர் மனப்புண் ஆறும்படி எத்தனை நாளிருப்பினும் இருக்கட்டுமென்று உபசரிக்கவேண்டும். பிறர் கலங்குகையில் நாம் காப்பது பெரிய உதவியாகும்.

பக்த கோபால்.

"உண்மையில் பகவானிடம் பக்தி செய்வது உயர் குலத்தி லுதித்தவர்களுக் குரியது மட்டுமல்ல" என்று துளசிதாஸ் மகாகவி கூறியுள்ளார். அது போல, நாரத மகா முனிவனுக்குப் பகவானே நேரில் உபதேசித்திருப்பதாவது:-"ஏ நாரதா! நான் வைகுண்டத்திலுமில்லை; யோகிகளுடைய ஹிருதயத்திலுமில்லை; என் பக்தர்கள் எங்கு என் திருநாமத்தை ஸ்மரணை செய்கின்றரோ அங்கு நான் சதா இருக்கின்றேன்."

ஃ

ஸ்ரீ மகாவிஷ்ணு மகரிஷி துர்வாசருக்கு அருளினதாவது:—"ஏ பிராமண! நான் நிச்சயமாய் என் பக்தனுக்கு அடிமைபட்டவன். என் பக்தர்கள் தத்தம் ஹிருதயத்திலேயே நான் இருக்கும்படி என்னை வசியப்படுத்தி விடுகின்றனர். நான் உத்தம பக்தர்களைத் தவிர எதையும் விரும்புவதில்லை. எனக்கு மிக்கப் பிரியமுள்ள மகா லக்ஷ்மியைக்கூட பக்தர்களுக்காகவேண்டி பொருட்படுத்துகிறதில்லை?"

ஃ

இதற்குப் பிரத்தியக்ஷ பிரமாணமாக ஒரு உண்மை பக்தனின் சிறு சரித்திரத்தை இங்கு தருகிறேம்:—பண்டைக் காலத்தில், வட இந்தியாவில் ஒரு சிறு நகரத்தில் யாதவ குலத்திலுதித்த ஒரு பக்தன் இருந்தான். அவன் பெயர் கோபாலன். பெயரைப்போல அவனுக்கு குணமும் அமைந்திருந்தது. சதா காலம் அவன் பகவானுடைய நாமத்தைக் கீர்த்தனம் செய்வதில் மனத்தைச் செலுத்தி வந்தான். இளம்பிராயத்திலேயே பகவத் பக்தியின் உணர்ச்சி அதிகமாய்க் காணப்பட்டது. இதைக்கண்டு இவனுடைய சுற்றத்தார்கள் திகைத்து நின்றனர். யௌவனமும் வந்தது; கோபாலனுக்கு விவாகமும் நடைபெற்றது. பாமரஜனங்களைப்போல, கோபால் இந்த இன்ப வாழ்க்கையில் ஈடுபட்டுக் கிடக்கவில்லை.

ஃ

இளம் பிராயத்தில் எப்படி இருந்தானே, அங்ஙனமே, இவனுக்கு 50-வயதாகிய பின்னும். பக்தி குன்றுமல் வாழ்ந்து வந்தான். பக்தியிற் பரவசமாகி சில சமயம், பாடிக்கொண்டும், சில சமயம், நர்த்தனம்

இத்தனை வருஷங்களாகக் கற்ற கல்வி மேலடியாய்ப்போய் விட்டதேயன்றி எவ்விதத்திலும் ஆழ்ந்த படிப்பாகயில்லை. படிப்பெல்லாம் வாய்ப்படிப்பாக முடிந்து விட்டதால், அதனல் சொல்லறிவு மாத்திரம் உண்டாயிற்றே யல்லாமல் பொருளறிவு இல்லாமற்போய் விட்டது. அந்தப் படிப்பு நம் ஞாபக சக்தியைத் திடப்படுத்தப் பயன் பட்டதேயன்றி, நமது ஞான விர்த்திக்காவது. கிராஹ்ய சக்திக்காவது பயன் படாததாய் முடிந்தது. அதனுல் நம் புத்தி விருத்தி குன்றிப் போனதல்லாமல், நமது ஒழுக்கம், கலைஞானம், சமயநெறி இவை சம்பந்தமான வாழ்க்கையிலுங்கூட நாம் க்ஷீணித்துப் போனேம்.

செய்துகொண்டு மிருப்பான். இவனுடைய சிநேகிதர்கள் இவனைப் பித்தன் என்று ஏளனம் செய்வார்கள். கோபாலன் இவைகளை யெல்லாம் இலட்சியம் செய்யவில்லை. கோபாலன் ஒருநாள் ஒரு பெரியாரைச் சந்திக்கும்படி நேரிட்டது. இவனுக்கும் ஒரு பெரியாரை நாடி அவரிடம் மந்திரோபதேசம் பெறவேண்டுமென அபிலாஷை மிக்க அதிகமாயிருந்தது. இப்பெரியாரை கோபால் பன்முறை பிரார்த்தித்துக் கேட்டும் இவனுடைய மனோரதம் நிறைவேறவில்லை. கோபால் இவ்விஷயத்தில் மனம் குன்றி, பித்தன்போல் இருந்தான். குருவைத் தேடி, சந்திக்க அலைந்து திரிந்து கொண்டிருந்தான். வீட்டில் அதிக நேரம் தங்கி யிருப்பதும் கிடையாது. வெகு நாள் கழிந்த பின், முன் சந்தித்த பெரியாரை மறுமுறை கோபால் கண்டான். விடாக் கொண்டன்கொடாக்கொண்டன் என்பது போல ஆயிற்று. கோபாலன் இப்பெரியாரின் சரணங்களைப் பிடித்துக்கொண்டு மந்திரோபதேசம் செய்யும்படி வேண்டினன். அவரும், பரமாத்மாவே பெரிய குருவென்றும், தன் போன்ற மனிதரை குருவாகப் பாவிப்பதைவிட பகவானையே குருவென்று நினைக்கும்படியாக அருளினர். மேலும், அவர் உபதேசித்தாவது:—"அப்பா! நீ உண்ணும் உணவையெல்லாம் பகவானுக்கு அர்ப்பணம் செய்து, பகவான் உண்ட பிறகுதான் நீ சாப்பிடுவது என்ற விரதத்தை அனுஷ்டித்து வா என்றார். மிக்க சந்தோஷத்துடன் கோபால், பகவானுக்கு நிவேதனம் செய்ய நல்ல உணவு தயாரித்து பகவான் மூர்த்தியின் எதிரில் வைத்தான். எப்படி வைத்தானோ அப்படியே நைவேத்தியமும் இருந்தது. கோபால் அன்று உபவாச மிருந்தான். இங்ஙனமே பலநாள் கழிந்தும், பகவான் உண்டதாகத் தெரியவில்லை. கோபாலும் உண்ணாவிரதம் பூண்டான். நாளுக்கு நாள் இவனுடைய உடல் மெலிந்து, பலமும் குறைந்தது. மனித நடமாட்டமில்லாமல், படுக்க ஆரம்பித்தும், அப்பெரியாரின் சொல்படியே பேசக்கூட சக்தியற்றவனாக விருந்தான். இப்படி இருக்கையில், இவன் படுத்த அறையில் ஒரு பெரிய திவ்ய ஜோதி தோன்றியது. இதைக்கண்டு கோபாலன் அளவில்லாத சந்தோஷத்தை யடைந்தான். தெய்வீக அருளால் தேகவலிவும் திடீரென்று வந்தது. ஆனந்த பாஷ்பம் சொரிந்தான்.

ஃ

கோபாலன் சிரமத்துடன் கஷ்டப்பட்டு வருந்தியபோது, முன்பு கஜேந்திரத்தை ரக்ஷிக்க பகவான் எவ்வளவு துரிதமாய் தானே நேரில் ஆவிர்ப்பவித்தாரோ, அதுபோல பகவான் கோபாலனுக்குத் தரிசனம் அளித்தார். பக்தியின் பிரபாவம் இது அன்றோ!

"பகவானுச்கும், பகவத் பக்தர்களுக்கும் ஜே"!

எஸ். வி. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.

வகுப்புச் சண்டை, அசூசை, ஜாதித்துவேஷம் முதலியன வருங்கால ஜாதீய வளர்ச்சிக்கு ஆபத்தானவை **நாம் இப்போது பிற்பட்டுக் கிடப்பதற்கு நாம தான் முற்றிலும் காரணம் கேசத்தைவிட, தங்களுடைய சொந்த விஷயங்களையே நமது தலைவர்கள் பெரிதாக நினைத்து வந்திருக்கிறார்கள்.—ஜனுப் பஸ்லுல் ஹக்.



இன்று கூடிய நமது கடைக்கு ஒரு தட்டாச்சாரியார்வந்து, "நாம் ஒருவருக்குக் கெடுதியோ அலைச்சலோ உண்டாக்கினால், அதனால், அவர்கள் அடைகிற துன்பம் பிறகு நமக்கே திரும்பி நம்மையும் வாதிக்க வைக்கும். இது நான் பல தடவைகளில்கண்ட அனுபவச்சரக்கு. ஒரு வியாபாரியிடம் ஒரு நோட்டை மாற்றும்போது, அந்த சமயம் நான் அந்தக் கடையில் வாங்கிக்கொண்ட இரண்டு ரூபாய் பெறுமான சாமான்களின் கணக்கை மறந்து, எட்டு ரூபாய்க்குப் பதிலாக ஒன்பது ரூபாயைக் கொடுத்துவிட்டார் கைக்கு வந்ததை விடப்படாதென்று வெகு யோக்கியமாய் வீட்டிற்கு வந்துவிட்டேன். அப்பொழுது என் வீட்டைப் பழுது பார்த்துக்கொண்டிருந்தேன். சுண்ணாம்பு காரைகொண்டு வந்து கொட்டியவனிடம் எவ்வளவோ நேற்றுப்பேசி அவன் ஐந்து ரூபாய் கேட்டதை நான்கு ரூபாய்க்கு முடிவு செய்திருந்தேன். நான் கடையிலிருந்து சாமான்கள் வாங்கிக்கொண்டு ஒன்பது ரூபாயுடனே வீட்டிற்கு வந்த சமயம் சுண்ணாம்பு காரை கொட்டியவன் பணத்துக்காகக் காத்திருந்தான். நான் அவன் கையில் ஐந்து ரூபாயைக் கொடுத்து கணக்கு சரிதானா என, அவனும் ஸந்தோஷத்துடன் விடைபெற்றுச் சென்றான். பிறகு நான் பல ஜோலியிலிருந்து மாலையில், இன்று நாம் கடையிலிருந்து ஒரு ரூபாய் லாபம் பெற்றோமென்று சந்தோஷித்திருக்கையில். சட்டென்று ஒரு நினைவு மனதிற்குத்தோன்றி, நேற்று சுண்ணாம்பு போட்டவனிடம் ஐந்து ரூபாய்க்குப் பதிலாக நான்கு ரூபாயல்லவா பேசி முடித்திருந்தோம். அப்படியிருக்க, இன்று ஐந்து ரூபாயை மறதியாய்க் கொடுத்தனுப்பிவிட்டோமே, இனி அவன் தருவானா; கையில் நிறைய ரூபாய் இருக்கிறதென்று அவன் கேட்டவுடனே யோசித்துப் பாராமல் அவசரப் பட்டுக் கொடுத்துவிட்டோமே, அவன் வந்தது லாபம் என்று வாங்கிக்கொண்டு போய் விட்டானே என்று ஏக்கத்துடன் துக்கப்பட்டேன். பிறகு மறுவாரத்தில் அவனை வழியில் சந்தித்தபோது கேட்க, "நான் ஆறு ரூபாய் பெறுமான கண்ணாம்பை உமக்காக ஐந்து ரூபாய்க்குக் கொடுத்ததற்கா அதை நான்கு ரூபாயென்று பேசுகிறீர் போம் போம்" என்று பழித்துப் பேசினான். இனி அவனிடமிருந்து எதுவும் கைப்பற்ற முடியாதெனத் தெரிந்து திரும்பினேன். கடையில் நான் பெற்ற ஒரு ரூபாலாபத்தை இவன் பறித்துக் கொண்டுபோய் விட்டான். பிறரை

சிற்றின்பத்தில் திருப்தி யடைந்து விடுவோன், பேரின்பமாகிய கடவுள் பதத்தை—முக்தியை—மறந்து விடுகிறான். இன்றைக்குக் கிடைப்பதில் திருப்திகொண்டு, மேலுக்கும் அதிகமாகப் பெறும் வழியில் யோசித்தபடியிருக்கவேண்டும். முயற்சி வீண்போகாது. சுறுசுறுப்பு சுகம் தரும்.

ஒரு காசுக்கு ஏமாற்றினால் நமது ஒரு அணு போய் விடலாம். இப்படியே எட்டுப் பவுன் நகையொன்று செய்யக் கொடுத்தவரை மூன்று மாதம் நான் அலையவைத்துத் தந்ததில், அந்த மனுஷ்யருக்குக் குடும்பத்தில் பல செலவுகளுண்டாகி மொத்தமாய்த் தர முடியாமற்போய், எனக்கு அவர் கூலியாகத் தரவேண்டிய ஒன்பது ரூபாயைப் பல சில்லரையாய் நான் அலைந்தலைந்து ஐந்து மாதத்திற்குப் பிறகு பெறும்படியாயிற்று. இது நான் அவரை அலையவைத்த பாவத்திற்குப் பதிலாகும். எந்தத் தீங்கும் துரோகமும் ஒருக்காலும் வீண் போகாது தனக்கே பிறகு பலித்து விடும்'' என்று பேசினர்.

ஃ

அல்லா பிச்சை:—''கால தேவதையின் தீர்ப்பு நாள் ஒன்று பின்னுக்கு இருக்கிறது நியாய தேவதையின் நிழல் எதிர்படும் வேளையில் முன் செய்த வினையை அனுபவிக்கத் தப்பாது. பலரை மனம் நோகப்பேசி ஒன்ருக இருந்து ஏக குடும்பத்தைக் கலைத்துப் பிரியச் செய்தவளுக்குப் பிற்காலத்தில் வாய்ப்பட்டியான மருமகள் வந்து பதிலுக்குப் பதில் பேசிப் பழிக்குப்பழி வாங்கி விடுகிருள். தன்னை நம்பிய மனைவி மக்களைத் தனது சோம்பல் மிகுதியால் காப்பாற்ருது அலைய விட்டவனைத் தெய்வம் பிற்காலத்தில் அவனை அன்னத்துக்கு அலைந்து நடுத்தெருவிலாகும்படி செய்து விடுகிறது. உண்மையாக நடந்துகொண்டு எவ்வளவோ உதவிகள் செய்தவனுக்குப் பட்டை நாமம் போடுவோர், எவருக்குச் சொத்து சேர்த்துவைக்கவேண்டு மென்று சேர்த்தார்களோ, அவர்கள் அதை அனுபவிக்காமலே இவர்களின் கண் முன்பாகவே மாண்டுவிட, சேர்த்த சொத்துகளும் சின்ன பின்னமாகி இவர்கள் எங்கும்படியாகிறது. எதுவும் முதலில் தெரிவதில்லை; கடைசியில்தான் அதன் பலனை அநுபவிக்கும்போது தான் புலப்படுகிறது. தனக்கு முன்பு விரிந்து கிடக்கும் மிகப் பெரிதாகிய எதிர்காலத்தைப்பற்றி எவரும் ஒரு தீர்மானம் செய்துவிட முடியாது.''

ஃ

தாந்தோணித்தேவர் :—'' பணத்தின் பெருக்காலும் மமதையாலும் சிலர் எவ்வளவு பயங்கரமான கொடிய செயல்களைச் செல்தாலும் அவர்களைத் தண்டிப்பதற்கு நியாய தேவதை உடனே தயாராய் விடுவதில்லை. அதுவரையில் அவர்கள் கும்மாளமடிக்கலாம். தடபுடல் செய்யலாம். கடைசியில் அவர்கள் பாதாளத்தில் இறங்கவேண்டிய நாள் ஒன்று வந்துவிடும். சிலர் மிகுந்த சாமர்த்தியத்துடனும் உறுதியுடனும் தங்களுடைய கொடிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மிக ஜாக்கிரதையோடும் சூழ்ச்சி செய்வர். இப்பாதகர்கள், சாமானியமான விஷயங்களை அலக்ஷியமாய் நினைத்து விட்டு, அவற்றில் அஜாக்கிரதையாக இருந்து விடுவதினல், அவர்களுடைய நோக்கம் இறுதியில் நிறைவேருமலும், முயற்சி பயன் படாமலும் போவதோடு, இவர்கள் எதைச் சாமான்யமாய் நினைத்து அலக்ஷியம் செய்தார்களோ அவற்றின் மூல

அறிவானும் ஆண்டானும் அநுபவத்தானும் நம்மினும் உயர்ந்த உத்தமப் பெரியோர்களின் வாய்மொழிகளையும், அநுமானம் முதலிய அளவைகளையும் துணையாகக்கொண்டு நம் மனம் ஒன்றில் உறுதியடையப்பெறுவது நம்பிக்கையெனப்படும். இவ்வாறின்றிக் கொள்ளும் நம்பிக்கை குருட்டு நம்பிக்கையாகும்.

மாகவே அவர்கள் அகப்பட்டுக்கொண்டும் விடுகிறார்கள்."

ஃ

ஆமவடைப்பண்டாரம்:—"வஞ்சகம் நிறைந்த இன் சொற்களைக் கேட்டு மயங்கிப் பிறகு துன்புற்றுத் தவித்தோர் எத்தனையோ பேர். இவ்விதம் வஞ்சித்தவர்கள் நல்ல வாழ்வு வாழ்ந்ததை நான் கண்டதில்லை. தன் மனிதர்களென்று நம்பியவர்களே தனக்குத் தீங்கு செய்தால், அது பல்லைக் குத்துவதற்கு எடுத்த பல் துரும்பு மற்றொரு பல்லின் சந்தில் போய் சிக்கிக்கொண்டு துன்பம் தருவதற்கே சமானமாகும். பிறருக்குக் கெடுதி தேடியவர்கள் தங்களுடைய இன்பத்தின் உன்னத நிலையில் எவ்வளவு காலம் இருக்கலாம்? அகந்தையும் வஞ்சகமுமுள்ள அக்கிரமி தனது சூழ்ச்சியால் பிறரது க்ஷேமத்தின் ஒரு கதவை மூடும் போது, கருணையுள்ள கடவுள் மற்றொரு வெளிச்சத்தின் கதவைத்திறந்து விட்டு, அச்சண்டாளனால் மோசம் போகாதிருக்கும்படியான விழிப்பையுண்டாக்கிக் காத்தருளுகின்றார்."

ஃ

ஆழாக்கு அரிசியார்:—"புசிக்க வேண்டிய நேரம் வரும் வரையில், இலைபோடும் வரையில் எவ்வளவோ உருக்கமாக நம்மைக் காண்பதற்கே வந்ததாகக் காண்பித்துக்கொண்டு பேசுகிறார்கள். பிறகு உண்ட பிறகோ சரி, காரியம் ஆயிற்றென்று உடனே ஓட நினைக்கிறார்கள். இந்த சுயநலமிகள் இன்னும் சற்று பொழுது இருந்து தங்களுக்கு அன்னமிட்டோருக்கு ஒரு திருப்தி தந்து செல்லலாகாதா? உண்மையான அன்பு கொண்டிருந்தால் ஓட மனம் வருமா? எவர்மீது ஒருவன் பிரீதி பாராட்டுகிறானோ அவன்மீது அவர் பாராட்டாமற் போவதே உலகில் நாம் அதிகமாகக் காண்பது"

ஃ

நம்பிய பெருமாள்:—"பகவானே! உம்மைத் துதிக்கின்றேன். நமஸ்கரிக்கின்றேன். என்னை இந்தத் தரித்திரத்திலும் இடர்க்கடலிலும் ஏக்கத்திலும் வைத்ததற்கு உமது திருநாமம் என்றைக்கும் மகிமைப் படுவதாக; ஒரு பக்கத்தில் என்னை நெருப்பில் வாட்டினாலும், மற்றொருபுறம் என் வயிற்றுக்கு ஊட்ட வகை தேடித் தருபவரும் நீரேதான். உமது அருள் வாழ்க."

ஃ

நூசைப் பிள்ளை:—"என்னை வஞ்சித்துத் தங்களுடன் கூட்டாகச் சேர்த்துக்கொண்டு ஒரு வியாபாரம் நடத்த என்னுடைய நேசர்கள் முயல்கிறார்கள். எனக்கு இப்போதிருக்கிற வீட்டையும் நிலத்தையும் இந்தக் கூட்டு வியாபாரத்திலே சேர்ந்து நஷ்டப்பட்டு அதற்காக அவற்றை விற்றுத் தொலைத்து அநாதையாவதற்கு நான் பிரியப்படவில்லை. என்னைக் கூட்டாகச் சேர்க்க நினைக்கிறவர்கள் எழுதும் கூட்டுப் பத்திரத்திலே நான் கையெழுத்திடுவதில்லையென்று தீர்மானித்திருக்கையில், அவர்கள் கண்டபடி விஸ்தரித்து நிபந்தனைகளைப் பத்திரத்தில் எழுதிக்கொண்டு போகிறார்கள். அதில் என்ன பயன்? அவர்களின் முயற்சி காட்டிலெரித்த நிலவேதான்."

ஃ

இஞ்சி பச்சடியார்:—"மறதி என்றால் என்ன அது? அது வெளுப்பாக

சந்தை என்றால் பண்டங்கள் வந்திறங்கி வியாபாரமாகும் இடம். "சந்தை" என்பதற்கு அதைப்போல் மற்றொரு தெளிவும் சுலபமுமான ஒரே பதம் அகப்படவில்லை.

இருக்குமா, கருப்பாக இருக்குமா? ஒருவன் தபாலுக்கெழுத ஒரு சாதாரண கார்டையும், அதற்கு ஒட்ட முக்காலணு ஸ்டாம்பையும் பெட்டியிலிருந்து எடுத்தான். உடனே அவசரமாகக் கக்கூசுக்குச் செல்லும்படியாகிக் கார்டை மேஜையில் போட்டுவிட்டுச் சென்றான். கக்கூஸிலிருந்த போது தபால் ஸ்டாம்பை எங்கேயென்று மடியில் பார்த்தான். காணவில்லை. கக்கூஸிலும் பல இடங்களிலும் கீழே விழுந்து விட்டதோ என்று தேடினன். அகப்படவில்லை. தன் வேஷ்டியையும் அவிழ்த்துப் பார்த்தான். காணவில்லை. பின்பு கால் கழுவிக்கொண்டு மேஜையண்டை வந்து கார்டை எடுத்தான். அதில் முக்காலணு ஸ்டாம்பு ஒட்டியிருப்பதைக் கண்டு வியப்புற்றுத் தன்னை யறியாமலே தன் கைகள் தமது வழக்கப்படி ஸ்டாம்பை ஒட்டிச் செய்துவிட்ட வேலையானதால் தான் தன்னல் கவனிக்க முடியாமற் போயிற்று போலும் என்று எண்ணலானன். தானே ஸ்டாம்பை ஒட்டியிருக்க, அதற்குள் அந்த நினைவு இல்லாமலே போவதாகில், அதற்கே மறதி என்பதாம் என்றார் இத்துடன் நமது கடையும் பூர்த்தி பெற்றது.

பகதூர்-பொன்வண்டு செட்டியார்.

விலையைக் குறைத்துக் கொடுக்கும்படி கேட்கிறீர்கள். மூன்று ரூபா யுள்ளதை இரண்டு ரூபாய்க்கு உமக்கு இப்போது கொடுத்துவிட்டு நானுதர்க்குஒரு நாலணுஉம்மை இனமாகக் கேட்டால் கொடுப்பீர்களா? என் அவசர செலவுக்கு எட்டணு வேண்டியிருந்து கஷ்டப்பட்டால் அந்த சமயம் நீர் உதவுவீரா? என் காசு என் கையிலிருந்தால்தான் எனக்குப் பயன்படுமேயன்றி உம்மிடமுள்ள தங்கம் எனக்கு உபயோகப்படாது. என் பொருள் நல்ல வஸ்துவாயிருக்கும்போது நான் எதற்காக விலை குறைத்துக் கொடுத்து நஷ்டப்படவேண்டுமோ? ஓட்டையாய் ஒடிந்ததைக் கொடுத்தால் நீர் ஒப்புவீரா? அவ்விதமே நான் சொன்ன விலைக்குக் குறைத்துக்கேட்டால் கண்டிப்பாக நான் தர முடியாது. என்னை ஏமாற்றிப் பெற எண்ணவேண்டாம். இஷ்டமிருந்தால் வாங்கலாம். இல்லையேல் போகலாம்.

இக்காலத்தில் ஹிந்து மதத்திலுள்ள பெருமையை எடுத்துரைக்கும் திறமையின்றி, அந்ய மதங்களிலுள்ள ஊழல்களைக் குறிப்பிடும் ஸாமர்த்தியம் அநேகருக்கிருக்கிறது. இது பிசகான காரியம். வேலை செய்யவேண்டிய இருவரில் ஒருவன் சும்மாயிருந்து, மற்றவன் செய்யும் காரியத்தைச் சொத்தை சொள்ளை யென்று கூறிக்கொண்டிருப்பானுகில் அவனை மூடனென்றே சொல்லலாம். அதுபோல், அந்நிய மதஸ்தர்களான பாதிரிகள் பஞ்சத்தில் பெற்றோர்களால் பாதுகாக்கப்படாமல் விடப்பட்ட குழந்தைகளை எடுத்து வளர்த்து அவர்கட்குத் தங்கள் மதகிரந்தங்களைக் கற்பித்தால், கிறிஸ்துவர்களாக்கவே அவர்கள் வளர்த்தார்களென்று குறை கூறுவதில் என்ன பலன்? அதைவிடத் தாங்களே பொருள் சேகரித்து அநாதைக் குழந்தைகளை ஆதரிப்பது நன்மையன்றோ? அதைக் காணேமே!



பள்ளிச் சிறுவர்களின் தீர்மானம்.

முதல் பாகம்

1-வது அத்தியாயம்.



திருச்சினுப்பள்ளியில் வெள்ளை வெற்றிலைக்காரத் தெருவின் முதலில் விசாலமான இடத்தில் எஸ். பீ. ஜி. கலாசாலையின் கிளையாக ஒரு பள்ளிக்கூடம் ஏற்பட்டிருந்தது. அதில் பாலர் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரையில் இருந்து வெகு திறமையுடனும் கல்வி போதிக்கப்பட்டு வந்தன. மூன்றும் வகுப்பு உபாத்தியாயர் கணபதியா பிள்ளையும், நான்காம் வகுப்பின் ஆசிரியர் ஞானப்பிரகாசம் பிள்ளையும் அப்பள்ளிக்கூடம் ஏற்பட்ட நாள்முதல் சாஸ்வதமாக இருந்துவந்தனர். மூன்றும் வகுப்பு உபாத்தியாயர் மிகக் கண்டிப்பும், கோபமும், அடிப்பதில் கொடுமையும் உடையவர். எப்போதும் காலைப் பார்த்தே ஓயாது பத்துப் பதினைந்து அடிகள் அடித்துவிடுவார். அதன் குரூரம் சகிக்கொணுது. ஆனுல், பாடம் சொல்லித் தருவதிலோ மிக்க திறமையுள்ளவராயிருந்தார். ஒரு தமிழ்ப் பாடத்தை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு வரியிலுள்ள பதங்களில் எதற்கும் விட்டுப்போகாமல் அர்த்தம் தெரிவித்துப் பள்ளிக்கூடத்திலேயே அதை மனப்பாடம் செய்யும்படி வற்புறுத்துவார். உதாரணமாக, 'சிங்கம்' என்ற ஒரு பதத்தை எடுத்துக்கொண்டால் அதற்கு "அரி—ஆளி—கேசரி—கண்டீரவம்' என்று இப்படியே ஒரு பதத்திற்கு நாலுபத அர்த்தங்கள் சேர்த்துச் சொல்லித் தருவார். அவர் வகுப்புக்கு அர்த்த புஸ்தகம் கொண்டுபோகக்கூடாது. அவர் எப்படி அர்த்தம் கற்பித்துக்கொடுத்தாரோ அவ்விதமே ஒப்புவிக்கவேண்டும். இந்த மாதிரியாக 1895-ம் வருஷத்தில் பள்ளிக்கூடம் நடந்துகொண்டிருந்தது. இது பொய்யல்ல; சந்தேகமிருந்தால் விசாரித்துப் பார்த்துக்கொள்ளலாம்.

குறிப்பு:—முதல்பாகத்தில் பாக்கி நான்கு மகா பெரிய அத்தியாயங்களைக் காக்கா கொண்டுபோய்விட்டது. என் செய்வது ?

ஃ

ஸகோதர உணர்ச்சியைக் காட்டிலும் நம்மிடம் அகங்கார உணர்ச்சிதான் அதிகமாய் இருக்கிறது. நாம் வாழும் இவ்வுலகில் ஒவ்வொருவரும் தம் உணர்ச்சியைக் கட்டுப் படுத்தாவிட்டால் ஸமூக ஸமாதானம் இருக்க முடியாது.

இரண்டாம் பாகம்

3-ம் அத்தியாயம்.

கணபதியாப் பிள்ளையிடம் ஒருநாள் ஐந்து சிறுவர்கள் அடிபட்டனர். அன்று மாலையில் ஒரு மரத்தடியில் ராமன், கோவிந்தன், லக்ஷ்மணன், சுந்தரம், கோபாலன் இந்த ஐவரும் ஒன்று கூடி யோசித்தனர். "இந்த உபாத்தியாயரிடத்தில் அகப்பட்டுக் கொண்டு நாள்தோறும் இரத்தக் கண்ணீர் விடுவதைப் பார்க்கிலும் குதித்துக் கொண்டு இறந்தால்தான் என்ன? இவரை விட்டுத் தப்பியோடி எந்த ஊருக்காவது போய்விட்டால், எந்த உபத்திரவமுமில்லாமல் சுகமாயிருக்கலாம்" என்று ராமன் கூறினான். "நாம் நமக்கு வேண்டிய சொக்காய் வேஷ்டிகளை ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு எந்த ஊருக்காவது ஓடிப்போய்விடுவதே நல்லது"



என்று லக்ஷ்மணன் நவின்றான். "என் தகப்பனார் போன வருஷம் என்னை சென்னப்பட்டணத்துக்கு அழைத்துப்போனார். ரொம்ப நேர்த்தியான ஊர். அங்கே நாம் போய்விட்டால் எவரும் நம்மைக் கண்டுபிடிக்க முடியாது. இந்த வாத்தியாரும் எட்டிப்பிடிக்க முடியாது. அந்த ஊர்தான் சரி" என்று கோபாலன் புகன்றான். மற்ற இருவரும் இதைச் சரியென்று ஒப்புக்கொள்ள ஏகமனதாய்த் தீர்மானம் நிறைவேறியது. அவனவனும் தனக்கு வேண்டிய சொக்காய் வேஷ்டிகளை மூட்டைக் கட்டிக்கொண்டு புறப்படுவதென்று முடிவு செய்துகொண்டனர். அப்படியே மூட்டையும் கட்டினர்.

குறிப்பு:—இரண்டாம் பாகத்தில் 1, 2, 4, 5, 6 அத்தியாயங்களை எப்படியோ எலியும் பூனையும் சேர்ந்துகொண்டு தின்றுவிட்டது.

மூன்றாம் பாகம்

2-வது அத்தியாயம்.

ராமன் தன் சொக்காய், கோட்டு, வேஷ்டிகளை யெல்லாம் சேர்த்துப் பெரிய மூட்டையாகக் கட்டிவைத்திருந்தான். அதை அவனுடைய அத்தை அப்படியே தூக்கி வண்ணானிடம் போட்டுவிட்டாள். ராமன் வருத்தத்தோடு அந்த மூட்டையை வண்ணானிடம் போடவேண்டாமென்றும் தான் ஊருக்குப் போவதற்காகக் கட்டி வைத்திருப்பதாயும் சொன்னான். அவன் அத்தை

ஸ்திரீகள் கர்ப்பந்தரிக்கும் நேரத்தில் எந்த ரூபத்தை எண்ணுகிறார்களோ, அதேவிதந்தான் கர்ப்பம் சாதனமாகிறது. அல்லது அன்று காலையில் எதன் முகத்தில் விழிக்கிறார்களோ, அந்தச் சாயல் கர்ப்பத்திலுண்டாகிறது.

சிரித்துக்கொண்டு எந்த ஊருக்குப் போகிறாய் என்று கேட்க, சென்னப் பட்டணம் போகப்போவதாய் ராமன் சொன்னான். அதற்கு, ரயிலுக்கு டிக்கட்டு வாங்க உன்னிடம் காசு இருக்கிறதா வென்று அத்தைகேட்க ராமன் இல்லையென, அப்படியானால், டிக்கட்டுக்குப் பணமில்லாவிடில் ரயிலில் ஏற்றமாட்டார்களே என்று அத்தை சொன்னாள். ராமன் கட்டி வைத்த மூட்டையைப் பாழும் வண்ணான் கொண்டுபோய்விட்டான்.




குறிப்பு:—மூன்றாம் பாகத்தில் 1, 3. 4, 5 அத்தியாயங்களைப் பெருச்சாளியும் பூச்சாண்டியும் கூடிக்கொண்டு கிழித்துவிட்டது.

ஃ

நான்காம் பாகம்

1-வது அத்தியாயம்.

ராமன் தன் அத்தை "பணமில்லாமல் டிக்கட் கிடைக்காது, டிக்கட்டில்லாமல் ரயிலில் போக முடியாது" என்று கூறியதை மற்ற சிறுவர்களுக்குத் தெரிவித்தான். எல்லோரும் கூடிப் பெரிய யோசனை செய்து தினம் தினம் அரையணா வீதம் சேர்த்துவைத்து ரயில் டிக்கட்டுக்குப் பணம் சேர்ந்ததும் புறப்படுகிறதென்றும், முழு டிக்கட்டு ரூ 2-10-0 ஆனதால், அரை டிக்கட்டுக்கு ஆளுக்கு ரூ. 1—5—0 சேர்ந்தால் போதுமென்றும் முடிவு செய்தனர். எல்லோரும் தினம் அரையணா வீதம் ராமனிடம் கொண்டுவந்து கொடுக்கவேண்டியதென்றும், அவனிடம் பெட்டி யிருப்பதால், அவன் பத்திரமாய் வைத்துக்கொள்வானென்றும் ஏற்பாடு செய்தனர். இவ்விதமே ஒரு மாதம் வரையில் பணம் சேர்த்து வந்தனர். ஒருதினம் ராமனின் தகப்பனார் தமது பணப்பையை மேஜையில் மறதியாய் வைத்துவிட்டு வெளியே சென்றார். அவ்வீட்டுக்கு அந்த சமயம் வந்திருந்த உறவினனாகிய கிருஷ்ணன் என்பவன் அதில் கையிட்டு ஐந்து ரூபாய் வரையில் துட்டுகளும் பணமுமாக எடுத்து அருகிலிருந்த பெரிய ஜாடிக்கு அடியில் மறைத்து வைத்துவிட்டு ஒன்றும் தெரியாதவன் போலிருந்தான். இதை மாடியின் ஜன்னல் பக்கமாக நின்றுகொண்டிருந்த ராமன்பார்த்து



விட்டுத் தகப்பனார் வந்ததும் சொல்லவேண்டு மென்றிருந்தான்.

ஃ

வெளியிற் சென்றிருந்த ராமனின் தகப்பனார் பணப்பையை வெளியில் வைத்துவிட்ட ஞாபகம் உண்டாகி அவசரமாய்த் திரும்பிவந்து, பணப்பையை எடுத்து எண்ணிப் பார்க்க ஐந்து ரூபாய் குறைந்தது. ராமனே எடுத்திருப்பானென்று ராமன் பெட்டியைத் திறக்க, அதில் ஐந்தரை ரூபாய்க்குக் குறைவாகக் காலணா அரையணாக்களாய்க் கிடைத்தன. அவர் கோபத்துடன் தன் பையில் எடுத்துப் போட்டுக்கொண்டு, ராமன் வந்ததும்; அவனை அடித்து "என் பணப்பையிலிருந்து திருடினாய்? முளைக்கும்போதே திருட்டுக் கையா?" என்று கண்டித்தார். "அது தாங்கள் பட்டணம் போவதற்காகச் சேர்த்துவைத்த பணமென்றும், கோபாலன், லக்ஷ்மணன் முதலியவர்களை விசாரித்துக்கொள்ளலாமென்றும், பணப்பையிலிருந்து எடுத்தது கிருஷ்ணன் என்றும், தான் ஜன்னல் பக்கமிருந்து பார்த்ததாயும், ஜாடியின்கீழ் அதை மறைத்து வைத்தானென்றும்," ராமன் அழுதுகொண்டே கூறினான். தகப்பனார் இதைக் கேட்டுப் பிரமித்து ஜாடியின் அடியில் பார்க்கப் பணமும் இருந்தது. கிருஷ்ணன் எங்கேயோ ஓடிவிட்டான். திரும்பி வரவேயில்லை. அப்படியே ஊருக்குப் போய்விட்டதாகத் தெரிந்தது. ராமனின் தகப்பனார் ராமனின் பணத்தை அவனிடம் கொடுத்துவிட்டு, எல்லோரும் பட்டணம் ஓடிப்போவதானால்; அங்கே உங்களுக்குத் தங்க இடம் எங்கே, உங்களுக்குச் சோறு போடுகிறவர்கள் யார்? என்று கேட்டுவிட்டுப் பணத்தை அந்தந்த பையன்களிடம் கொடுத்துவிடு என்று ராமனுக்குப் புத்தி சொன்னார்.

ஃ

ராமன் இதை மற்றச் சிறுவர்களிடம் கூறி. "பட்டணத்தில் சாப்பாட்டுக்கு வழி எப்படி? எங்கே தங்குவது, படுப்பது?" என்று கேட்டான். கோபாலன். "இந்த வாத்தியாரிடம் அடி படுவதைவிட பிச்சை எடுத்துத் தின்கிறது" என்றான். லக்ஷ்மணன், "பிச்சை எடுத்த அரிசியை யார் சமைப்பது? அதற்குப் புளி, உப்பு, மிளகாய், சட்டிபானை, விறகு எல்லாம் வேணுமே என்றான். கோவிந்தன், கோபத்தோடு நான் பிச்சை எடுக்க ஒப்பமாட்டேன்" என்றான். புத்திசாலியான சுந்தரம்,—"நாம் ஊருக்குப் போகிற யோசனையை நிறுத்திவிடுவோம். நமது பாடங்களை நன்றாகப் படித்தால் வாத்தியாயர் அடிக்கமாட்டார். நமது நன்மைக்காகவே வாத்தியார் அடிக்கிறார். இனி நாம் ஒரே பிடிவாதமாகப் பாடங்களைப் படித்தபிறகே விளையாடுவது என்று முடிவு செய்து கொள்வோம். நாம் சேர்த்த பணத்துக்கு அடுத்தவாரம் வருகிற தீபாவளியில் பட்டாசு மத்தாப்பு வாங்குவோம்" என்றான். இதை யெல்லோரும் ஒப்புக்கொண்டனர். பட்டணம் போகிற தீர்மானமும் நின்றுபோனது. தீபாவளியில் எல்லோரும் பட்டாசு மத்தாப்புகளை வாங்கிச் சுட்டு சந்தோஷமாயிருந்தனர்.

பள்ளிச் சிறுவர்களின் தீர்மானம் முற்றிற்று. கதையும் முற்றிற்று.

"புரட்சி என்றால் பழயன சில ஒழிவது. புரட்சி வருவது தெரியாமல் வந்து விடும். நான்கு ஜாதிகள் நானூறு ஜாதியானதும், வேதம் ஓதி ஜீவித்தவர்கள் வேறு தொழில்களில் தலையிட்டதும் ஒரு புரட்சியேயாம்.

உலக சமாதானமும், மதக் கொள்கையும்.

உலக சமாதானத்தின்பொருட்டு அமெரிக்காவைச் சேர்ந்த நியூயார்க் பட்டணத்தில் ஒரு பொதுச் சபையை ஏற்படுத்தியிருக்கின்றனர். அச்சபைத் தலைவர் உலகிற்கு ஒரு பொது மதத்தை ஏற்படுத்தி அதன்மூலம் உலகை சமாதான வழிக்குக் கொண்டுவர முடியுமா? அதற்கு எந்த வகையான முறை அநுசரிக்கப்படவேண்டும்? என்பதாகக் கேட்டு பத்திரிகைகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். அதற்கு இந்த கடிதம் எழுதப்பட்டது.

கனம் டாக்டர் அவர்களுக்கு,

தாங்கள் உலக சமாதானத்தைக் கோரி என்ன செய்யலாமென்று கேட்டு விடுத்த வேண்டுகோளைப் பத்திரிகைகளில் நான் பார்த்தேன். உலகத்திற்குப் பொதுவான ஓர் மதத்தை ஏற்படுத்தி அதன் மூலம் சமுதாய வாழ்க்கையைச் சீர்படுத்திவிடலாமென்று தாங்கள் நம்புவதாகவு மறிந்தேன். தங்களுக்கு அது விஷயமாக நான் அறிவிக்க விரும்பும் கருத்தை விரிவுபடுத்தாமல் மிகச் சுருக்கமாகக்கூற விரும்புகிறேன். உலகிற்கு ஒரு பொது மதத்தை ஏற்படுத்தி அதில் ஜனங்களுக்கு நம்பிக்கை யுண்டாகும்படி செய்து அவர்களை நல்ல வழியில் கட்டுப்படுத்திவிடலாமென்று நினைப்பது முடியாத காரியம். செருக்கடைந்துள்ள விஞ்ஞான உலகம் கண்டிப்பாய் அதை ஏற்காது. உலகின் சீர் கேட்டிற்கு மதம் காரணமென்று தாங்கள் நினைப்பது போல சிலர் அரசாங்கம் காரணமென்றும், சிலர் செல்வம் காரணமென்றும், சிலர் கல்வி காரணமென்றும் நினைக்கின்றனர்கள். பொதுவாய் இவைகள் ஒரு காரணமாயிருந்தாலும், ருஷியாதேசம் இவைகளில் அரசாங்கத்தை அழித்தும் செல்வத்தைப் பங்கிட்டும், மதத்தை ஒழித்தும் பரீட்சை பார்த்து விட்டது. அவைகளினால் சில நன்மைகளேற்பட்டதாயினும் மனிதர் வாழ்க்கைக்கு அவசியமான சாந்தம் இன்னும் அங்கு ஏற்படவில்லை. அவர்களும் மற்ற சமூகத்தாரைக் கொல்வதற்கும், அவர்கள் சொத்தைக் கொள்ளையடிப்பதற்கும் வேண்டிய துப்பாக்கி, பீரங்கிகளையும் யுத்த தளவாடங்களையும், ஆகாயவிமானக் குண்டுகளையும், விஷப்புகைகளையும், தயாரித்துக்கொண்டுதான் இருக்கின்றனர். சமுதாய வாழ்வைச் சமப்படுத்தி சமாதானத்தை நிலை நாட்டுவதில் ஹிந்து மதம் பூர்வம் வெகு திறமை வாய்ந்ததா யிருந்து வந்தது. காலக் கிரமத்தில் ஏற்பட்ட சுயநலக் காரரின் வஞ்சனையாலும், அடிக்கடி இந்தியாமீது ஏற்பட்ட படையெடுப்பாலும் மதத்தின் கட்டுக் குலைந்து "சுவர்க்கம் நரக"மாக மாறிப்போயிற்று. இந்து மதத்தின் மதக் கொள்கைகள் சாதாரண மனிதனால் சொல்லியதன்று. மனத் தூய்மையும், தவத்தினால் ஆன்ம பலமும் பெற்ற மகரிஷிகளால் சொல்லப்பட்டது. அவர்கள் ஆண், பெண் தன்மைக்குரிய வேறுபாட்டை வகுத்து, அவர்களின் சம்பந்தத்தை நிருணயித்து, உறவினர் சம்பந்தம், உலகின் சம்பந்தம், தொழில் முறை, அரசிறை முதலியவைகளை அளவிட்டுரைத்து; இடம் காலம், சந்தர்ப்பம் முதலியவைகளின் பாகுபாடுகளை உணர்த்தி; இவைகளுக்கெல்

லாம் தெய்வத்தை பீடமாக அமைத்து அத்தெய்வ சக்தியை மக்கள் வாழ்க்கையின் எல்லாப் பாகங்களிலும் ஊடுருவிப்பாய விடுத்து மதக்கொள்கையை அமைத்திருந்தனர். இதை விவேகானந்த சுவாமிகள் முன்னொரு நாள் அமெரிக்கர்களின் முன்னிலையில் எடுத்துச் சொன்னபோது "மேனாட்டாருக்கு மெட்டீரியல் உலகம் எவ்வளவு பிரத்தியக்ஷமாக விளங்குகிறதோ! அவ்வளவு பிரத்தியக்ஷமாக இந்தியர்களுக்கு மதக் கொள்கை (வாழ்க்கை ஞானம்) விளங்குகிறது," என்று கூறியிருக்கின்றார். இதுவன்றி மதக் கொள்கைக்கு முக்கியமானதும், மனிதர் வாழ்க்கையில் இன்றியமையாததுமான ஜீவகாருண்யம், மனவொழிவு என்ற இரண்டு தத்துவங்களும், இந்து மதத்திலே பிறந்து இந்து மதத்தினராலேயே வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றது. மனிதன் ஜீவகாருண்யத்தை மேற்கொண்ட வகையில் இந்து மதம் மாமிச உணவை நீக்கியது மாத்திர மல்லாமல் ஆராய்ச்சியின் மூலம் தாவர உணவே சிலாக்கிய மென்று ஸ்தாபித் திருக்கின்றது. ஜீவகாருண்ய மில்லாமல் வாழ்க்கையில் இன்பம் கிட்டாதென்பது உறுதி. அது போல வாழ்கையில் மனவொழி வடையாமல் துன்பத்தை விலக்கிக்கொள்ள முடியா தென்பதையும், விட்டுக் கொடுக்குந் தன்மை ஏற்படாதென்பதையும் உணர்ந்து துறவறத்தின் பெருமை பகுக்கப்பட்டிருக்கின்றது. துறவரத்தை மேற்கொள்வதால் மனச் சாந்தியும், ஆத்ம சக்தியின் பலமும் அதிகரிப்பதை யறிந்து தவசிகள் சரீராபிமானத்தையும் விட்டுத் தவத்தை மேற்கொண்டிருக்கின்றனர். இப்பெருமையையும் விவேகானந்த சுவாமிகள் அமெரிக்கர்கள் முன்னிலையில் கூறியபோது "இந்நாட்டில் தெருப் பொருக்கியாய் திரிபவன் பூர்வம் ஊர்க்கொள்ளை யடித்து பொருளைச் சேர்த்துக்கொண்டு 'பிரபு' என்ற பட்டம் பெற்றவன் வமிசத்தில் தான் உதித்தவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை யடைகின்றான். ஆனால் இந்தியாவிலோ இந்நாளில் சிம்மாசனாதிபதியாக யிருப்பவனும் பூர்வம் கோவணாண்டியாய்க் காட்டில் திரிந்து காய், கனி, கிழங்குகளைத்தின்று ஜீவித்து வந்த ஒரு மகரிஷியின் வமிசத்தில் உதித்தவன் என்று தன்னைச் சொல்லிக்கொள்ள முடியுமா வென்று நினைக்கின்றான்," என்று பெருமையாய்ப் பேசியிருக்கின்றார். இவ்வளவு சிறந்த மதமும் இப்பொழுது செயலற்றுச் சீர் குலைந்து கிடக்கின்றதென்றால் இனி ஒரு புதிய மதம், அதைப் பூர்த்தி செய்யுமென்று நம்புவதற்கில்லை. ஆனால் இந்து மதத்தால் பூர்வம் சமூக வாழ்வில் கையாளப்பட்டு வந்த ஒரு புது வழி யிருக்கின்றது. அதை சமூகத்தார் ஏற்று அநுசரிக்கும்படி செய்தால் ஒரு தலை முறைக்குள் ஓர் அமைதியான புது உலகத்தை கண்ணால் காணலாம் என்று திடமாகச் சொல்லலாம். அதனை கூறுகிறேன்.

மனிதவர்க்கம் ஆசையை வித்தாகக் கொண்டு தோற்ற மடைந்திருக்கின்றது. அதோடு குழந்தைப் பருவமுதல் உலகிடை உண்டாகும். ஆசையின் மூலம் அது வளர்க்கப் படுகின்றது. அதனால் மக்கள் பிற்காலத்தில் விட்டுக் கொடுக்குந் தன்மையில்லாத கடினசித்த முள்ளவர்களாகி விடுகின்றனர். இக் கொடுமையினின்றும் அவர்களை விலக்குவதற்கு முதலில் மனிதருக் குரிய இயற்கை வேறுபாடுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். பொதுவாய் மனிதர் ஒரே இனமாகக் காணப்பட்டாலும் அவரவர்க ளடைந்துள்ள உருவம், அழகு, குணம், புத்தி நுட்பம் முதலியவைகளின் வேறுபாட்டால்

விகற்ப முற்று காணப் படுகின்றனர். உருவத்தில் சிலர் மிகப் பருத்தும், சிலர் அதிகம் சிறுத்தும் இருக்கின்றனர். சிலர் உயரத்தில் மிக நீண்டும், சிலர் மிக்க குறுகியு மிருக்கின்றனர். சிலர் அங்க, அவயவ ஈனர்களாயும், வியாதியஸ்தர்களாயு மிருக்கின்றனர். இவ்வுருவ வேறுபாடுடையார் சமூகத்தில் மதிப்பிழந்தவர்களாவர். இக் குறைபாடில்லாத பூரண அங்க அவயவமுடையவர்களிலும், அவர்களடைந்துள்ள அழகும், தோற்றமும் இனத்தில் அவர்களை வேறுபாடடையச் செய்கின்றது. சிலர் கடல், மலை, காடு, தாமரை மலர் முதலியவைகளின் தோற்றத்தைப் போன்று சாத்திரமும் கம்பீரமுமான பெருமித தோற்றமுடையவர்களாய் விளங்குகின்றனர். சிலர் தாமரைக் குளம், சித்திரமிட்ட கூடம், நகரவாயிலின் கோபுரம், நந்தவனம், ரோஜாமலர் முதலியவைகளைப்போன்று பார்ப்பதற்குக் கண்ணேக்கவரும் சித்திரக் காட்சியுடையவர்களாக விளங்குகின்றனர். இவ்விரு வகையினரில் முதற்கூறிய அழகை உத்தம அழகென்றும், இரண்டாவதான அழகு மத்திம அழகென்றும், இவற்றிற்குத் தாழ்ந்த மற்ற வகையான அழகை கடை யழகென்றும் மதிப்பிட்டிருக்கின்றனர். இவ்வழகுகளிற் முதன்மையான அழகு பெரும் பாகமாக ஆண்களிடத்திலும், இரண்டாவதான அழகு பெரும்பாகமாகப் பெண்களிடத்திலும் காணப்படுவது இயல்பாயுள்ளது.

வளர்ச்சியிலுள்ள உலகத்தில் கடைசியான அழகுடையவர்களே பெருங் கூட்டமாயுள்ளவர்களாவர். அதுபோலவே மக்களடைந்துள்ள குணத்தில் முதல்தர குணம், இடைத்தர குணம், கடைத்தர குணம் என்ற மூவகையான பேதங்களுண்டு. சோம்பல், வெகுளி, மயக்கம், மறதி, அதிசயம், பேராசை, பேருண்டி, களியாட்டு, கயவர் நட்பு, பொய், சூது, கொலை, களவு, விபசாரம், மதுக் குடித்தல் முதலிய கெட்ட செய்கைகளில் ஈடுபட்ட குணம், கடையான குணமெனப்படும். உற்சாகம், ஊக்கம், கல்வி, கேள்வி, ஞானம், சத்தியம், தருமம், தவம், வீரம், வைராக்கியம், கோபம், நல்லோருறவு, நற்கருமத்திடை விருப்பம், முதலிய குணங்கள் நடுத்தர குணம் எனப்படும். இதற்கு மேற்பட்ட குணம் முதற்தர குணமாகும். அது வாய்மை, சத்தியம், ஞானம், ஐம்புலனடக்கல், அருள், தவம், நல்லொழுக்கம், பெரியோர் நட்பு, தெய்வ பக்தி, தெய்வத் தன்மை முதலிய குணங்களாம். இக்குணமுடையாரிடத்தில் கடையான குணஞ் சிறிதும் சம்பந்தமிராது. இவ்வேறுபாடுடைய மக்களில் 'அகத்தினழகு முகத்தில் தெரியு' மென்றபடி முதல்தர அழகுடையாரிடத்தில், முதல்தர குணங்களும், இடைத்தர அழகுடையாயாரிடத்தில் இடைத்தர குணங்களும், கடைத்தர அழகுடையாரிடத்தில் கடைத்தர குணங்களும் சம்பந்தப்பட்டுக் காணப்படுவது இயல்பாயுள்ளது. வளர்ச்சியிலுள்ள உலகத்தில் கடையான அழகும், கடையான குணமும் படைத்தவர்களே பெருங்கூட்டமாயுள்ளவர்களாவர் இதற்குமேல் உயர்ந்த அழகும், உயர்ந்த குணமும் படைத்தவர்கள் படிப்படியாக எண்ணிக்கையில் குறைந்தவர்களாவர். இப்பிரிவினையின்படி கடையான மிருகவாழ்க்கை அநுசரிக்கும் மனிதர்களை 'மனித மிருக'மென்றும், மத்தியதர குணம் படைத்தவர்களை 'மனிதர்' என்னும், முதற்தர குணம் படைத்தவர்களை 'மனிதத் தெய்வம்' (தேவர்) என்றும் வகுத்துக்கூறுவர். இப்பிரிவினையின்படி மனித மிருகங்களை மனிதரும், மனித மிருகங்களையும், மனிதரையும், மனிதத் தெய்வங்களும், ஆண்டுகொள்ளக் கூடியவர்களாகவும், ஆளப்படுபவர்களாக

வும் இயற்கையில் அமைந்துவிடுகின்றனர். இவ்வேறுபாடு உலகம் உள்ள வரையில் இருந்தே தீருமாதலால் ஆளுஞ் சக்திபடைத்தவர்களை முதலில் நல்லவர்களாகவும், விட்டுக்கொடுக்குந் தன்மையுள்ளவர்களாவும் செய்ய வேண்டும். இதற்கு இளமைப் பழக்கத்தை முக்கிய சாதனமாக இந்தியர்கள் கையாண்டு வந்தனர். "இளமையில் ஒருவன் ஒரு சேர்க்கையில் 12 வருஷம் பழகிவருவானானால் அவன் அதுவாகவே மாறிவிடுகின்றான்" என்பது அநுபவ மாக விருப்பதால் இளமைப் பழக்கத்திலும் கல்வி முறையிலும் இந்தியர் தகுந்த ஒழுங்கை (சட்டத்தை) கையாண்டு வந்திருக்கின்றனர். அதனை யிங்கு கூறுவோம்.

கல்வியும், ஒழுங்கும்.

பூர்வம் இந்தியர்கள் கல்வி முறையை ஆரம்பக் கல்வி, தொழிற் கல்வி, உலக ஞானக்கல்வி (கலாசாலைக் கல்வி) என்று மூன்று பெரும் பிரிவுகளா கப் பிரித்திருந்தனர். ஆரம்பக் கல்வி சிறுவர்களின் 4, 5 வயதளவில் தொடங்கி, 12-14 வயதளவில் முடிக்கப்படும். அதற்கு மேற்பட்ட கல்வியை தொழிற் படிப்பு, கலாசாலைப் படிப்பு என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக் கப்படும். தொழிற் படிப்பும் கலாசாலைப் படிப்பும் வாழ்க்கையின் உட லும் உயிருமாயுள்ளவைகள். இவ்விருவகைக் கல்விக்கும் ஆதாரமான வகை யில் ஆரம்பக் கல்வி வகுக்கப்பட்டிருக்கும். பொதுவாய்க் கல்வி முறையில் ஒழுக்கமே முக்கியமாக கவனிக்கப்படும். அதனால் ஆரம்பக் கல்வி முறை தொடக்கத்திலிருந்து மாணவர்களுடைய நினைவு, சிந்தனைத் தெளிவு, புத்திப்போக்கு, குணம், உற்சாகம் முதலியவைகளைக் குறித்து வாரத்திற்கு ஒரு முறை ஒரு தனிக் குறிப்பு எழுதி வைக்கப்படும். மனிதரின் சரியான அழகு, குணம் முதலியவைகள் இளமையில் 12, 14 வயதளவில் வெளிப்படையாகக் காணப்படும். அதனால் ஆரம்பக் கல்வி முடிந்ததும் சிறுவர்களுடைய குணவேறுபாடுகளைத் தெரிந்துகொள்வதற்கு ஆறுமாத காலம் அதற்சென்று தனியான ஒரு பரீக்ஷையை நடத்துவர். அப்பரீக்ஷை முடிந்ததும் முன்னம் பள்ளிக்கூடத்தில் பதிவு செய்யப்பட்டு வந்த குணத்தைப் பற்றிய குறிப்பும் அதனோடு ஒத்திட்டுப் பார்க்கப்படும். பிறகு அதன் முடிவைக்கொண்டு முன்னம் சொல்லியபடி மாணவர்களை கடைத்தர மாணவர்கள் (மனித மிருகம்) இடைத்தர மாணவர்கள் (மனிதர்) முதல் தர மாணவர்கள் (மனிதத் தெய்வம்) எனத் தரப்படுத்தி பிரித்து விடுவர். வளர்ச்சியிலுள்ள உலகத்தில் கடைத்தர மாணவர்களே இலக்ஷக் கணக்கா யிருப்பர். அதற்கு மேற்பட்ட இடைத்தர மாணவர்கள் சில ஆயிரம் பேராக வும், முதல் தர மாணவர்கள் சில நூறு பேராகவு மிருப்பர். அவர்களில் கடைத்தர மாணவர்களை அந்த இளம் வயதிலேயே தேக உழைப்பிற்கான தொழில்களில் ஈடுபடும்படி செய்வர். அதனோடு அவர்களுக்கு தருமநூல், நீதி நூல் முதலியவைகளை கதாரூபமாக அமைத்துப் படிக்கக் கொடுப்பர். இங்கு முக்கியமாய் ஒன்றைக் கவனிக்கவேண்டும். அதாவது, மனித மிருகங் களை மனிதரும், மனிதமிருகங்களையும், மனிதரையும் மனிதத் தெய்வங்க ளும், ஆண்டுகொள்ளுஞ் சக்தி படைத்தவர்களாக இயற்கையில் அமைந் துள்ளார்களென்று முன்னம் சொன்னோம். அதன்படி ஆளுஞ்சக்தி படைத் தவர்களை ஒழுக்கமுடையவர்களாகவும், ஜீவகாருண்யமும், மனவொழிவு

முள்ளவர்களாகவும், செய்யவேண்டியது அவசியம். அதை யநுசரித்து ஆரம்பக்கல்வி பயின்று ஆளுஞ்சக்தி படைத்தவர்களாயுள்ள மாணவர்களுக்கு நல்லொழுக்கம் பயிற்றுமுறையில் கல்வி போதிக்கப்படும். மேலும் அறிவு துலங்கிய "ஒருவன் 12 வருஷகாலம் ஒரு சேர்க்கையை யநுசரித்து பழகுவானுல் அவன் அதுவாகவே மாறிவிடுகிருன்" என்பது அநுபவம் அதன்படி அறிவு துலங்கிய அவர்களுக்கு கற்பிக்குங் கல்வி ஒழுக்கத்தையும், மனவொழிவையும் உண்டாக்கும் வகையில் போதிக்கப்படும். இடைத்தர மாணவர்களுக்குத் தொழிற் படிப்பும், முதல்தர மாணவர்களுக்கு மனித நீதியும் (சட்டம்) கற்பிக்கப்படும். தொழிற்படிப்பில் கணிதம், காருகம், கம்மியம், சிற்பம், வைத்தியம், வானம், பரதம், சங்கீதம் முதலிய தொழிற்களில் அவரவர்கள் திறமைக்கும், விருப்பத்திற்கும் தக்கபடி போதிக்கப்படும். 20. 22 வயதளவில் தொழிற்படிப்பு முடிந்ததும் அவரவர்களுக்குத் குத் தக்க பட்டங்களும். பதவிகளும் அளிக்கப்படும். அதற்கு மேற்பட்ட முதல்தர மாணவர்களுக்கு கற்பிக்குங் கல்வி வேறு வகையானது. அவர்கள் மனித நீதியை செலுத்த வேண்டியவர்களாதலாலும், மனித மிருகங்களையும், மனிதரையும் ஆளும் சக்தி படைத்தவர்களாதலாலும். அவர்களை ஆசையை வெறுத்தவர்களாயும், செய்யவேண்டியது அவசியமானது. உலக ஆசையிற் பற்றுடையவன் நீதியைத் தவறவிடுவது மாத்திரமல்லாமல், தானும் பிறருக்கு அடிமையாகிவிடுகின்ருன் என்பது அநுபவமாயிருக்கின்றது அதனுல் முதற்தர மாணவர்களை மனவொழி வடைவதற்கான மார்க்கத்தில் பழக்குவதோடு, உலகநீதி, தருமசாத்திரம் முதலியவைகளையும் படிக்கவிடுவர். அவர்கள் தான் பிறவியானது பசி, பிணி, மூப்பு, துன்பம், மரணம் முதலியவைகளுக்கு ஆளாகின்றதென்பதை உணர்ந்து, உண்மையாக உலக ஆசையில் வெறுப்படைவர். அவர்கள் மனவொழிவிலும், மனித நீதியிலும் தேர்ச்சிபெற்ற பின் உலகியலறிய சிலகாலம் தேச தேசங்களைப்பார்த்து வரும்படி செய்வர். பிறகு, அவர்கள் தேச சஞ்சார அநுபவம்பெற்று திரும்பிய பின் அவர்களைத் தகுந்த முறையில் பின்னும் சோதனை செய்து பொதுநல நியாய ஊழியர்களாக நியமிப்பர். அப்பெருந்தகையார் தேசத்தில் ஆசாரியன், அரசன், அமைச்சன், நீதிபதி, காவற்றலைவன், நிதித்தலைவன் முதலியோராகப் பதவி வகித்து ஆளுகை நடைபெறுமானுல் அது தருமந் தவராத தேசமாயும், அமைதியில் இன்பம் விளைவிக்கும் நாடாகவுமிருக்கும். அத்தகைய பெரியோர்களால் வழங்கப்படும் நியாயத்தைத்தான் தெய்வம் வழங்கிய நிதியாக மனிதர் மதிப்பர். அதைவிட்டு பொருளைப் பங்கிடுவதனுலும். புதிய மதங்களைத் தாபிப்பதனுலும், வாழ்க்கையமைதியேற்படாது. இந்தியர்கள் சமூக வாழ்க்கையில் ஏற்பட்ட பலவகையான அநுபவத்தின் மீதே இந்தக் கல்வி முறையை தாபித்திருக்கின்றனர். மாணவர்களை அவ்வளவு கடுமையான முறையையுடைய கட்டுத்திட்டங்களுக்கு உட்படுத்த முடியுமாவென்று சிலர் நினைக்கலாமாயினும், உலக நன்மையை மதிக்கும்போது இது மிகச் சொற்பமான தியாகமாகவே யிருக்கும். ஆதலால் உலக சமாதானத்திற்கு கல்வியையே சிறந்த சாதனமாகக் கொள்ளவேண்டும்.

S. கலியாண சுந்தரம் பிள்ளை.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

அனுபவ ஞானக் கண்ணாடி!



விகடன் ஒரு கண்ணாடி கொண்டுவந்திருக்கிறேன்! அது ஒரு பெரிய கண்ணாடி! அனுபவக் கண்ணாடி! ஞானக் கண்ணாடி! நல்ல கண்ணாடி! பிறர் உள்ளத்தைக் கண்டறிந்து பேசுங் கண்ணாடி! ஏமாற்ற வந்தவர்களிடமிருந்து தப்ப வைக்கும் கண்ணாடி! அனுபவம் ஒரு பெரிய சொத்தல்லவா! அனுபவமென்பது பழகியே வரவேண்டியதல்லவா! எவ்வளவு படித்தாலும் அனுபவமென்பதைப் பிறகு கற்றே ஆகவேண்டுமல்லவா! பி. ஏ. படித்தாலும் பலசரக்குக் கடைக்காரனுடைய அனுபவம் வராதல்லவா! ஒரு காய்கறி விற்பவளுக்குக்கூட ஒரு தனி அனுபவம் இருக்கிறதல்லவா! இட்டிலி தோசை விற்றுப் பிழைப்பதற்கும் ஒரு தனி அனுபவம் வேண்டுமல்லவா! சமையல் ஒரு பெரிய அனுபவமல்லவா? வைத்தியம், ஜோதிஷம் இவைகளெல்லாம் அனுபவத்தின் ஒரு தனித் திரட்டல்லவா? "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பதும் அனுபவ வாக்கியமல்லவா! தை பிறந்தால் கல்யாணம் போன்றவைகளுக்கும் வழி பிறக்கலாம்! தை மாதத்தில் அறுப்பு முடிந்து தானியங்கள் வீட்டுக்கு வந்து சேர்வதால், கடன் முதலியவற்றைத் தீர்க்கவும் வழி பிறக்கலாம்! சித்திரை மாத முதல் தேதியைத்தான் வருஷப் பிறப்பாகக் கொண்டாடுகிறார்களென்றால், தை மாதம் முதல் தேதியையும் பொங்கலிட்டுக் கொண்டாடுகிறார்களே! எதற்கும் ஒரு வழி வகை காட்டுவிக்கிற தை மாதத்தின் சிறப்புபற்றியல்லவா அப்படிக் கொண்டாடுகிறார்கள்! அவ்விதம் கொண்டாடுவதும் அனுபவமாய் வந்த ஒரு ஞானத்தாலேயல்லவா! ஆகவே, அனுபவம் என்பது ஒரு பெரிய ஞான சம்பத்தானதால், விகடன் இப்போது இங்கே கொண்டுவந்திருக்கிற அனுபவ ஞானக் கண்ணாடியின் ஐம்பது பாகங்களையும் திறந்து காட்டுகிறேன்! ஒவ்வொரு பிரிவையும் அந்தந்த சமயத்திற்கேற்றதுபோல் எடுத்துக் காட்டினால், உன்னிடம் வந்தவன் நல்லவனானால் சந்தோஷப்படுவான்; கபடனானால் வாய் மூடிக்கொண்டு போய்விடுவான்! ஆனதால், இனி விகடன் காட்டுகிற ஞானக் கண்ணாடியைப் பாருங்கள்!

ஃ

1. சுகமா? வா. (A) கண்டு நெடுநாட்களாயின பின்னை. நேரில்

சந்தித்துக் குலாவ வந்தனையா? நின் அன்பு வாழ்க. (B) இதோ வருகிறேனென்று கம்பி நீட்டியவனா இப்போது வந்து முளைத்தாய்? அப்போது கொண்டுபோய்விட்ட என் புஸ்தகம் சாமான்களை எப்போதப்பா கொடுக்கிறாய்? நான் மறந்துவிட்டேனென்று நினைத்துக்கொண்டாயா? ரொம்பவும் நல்ல மனிதனப்பா நீ. வா.

ஃ

2. பொறு, சகி. (A) இன்னும் பொறுத்துப் பார். கருணைக் கடவுள் கண் திறப்பார். கஷ்டம் நீங்கும் வேளையும் வரும். சோர்வு ஒரு பெரிய பிழை. தைரியமாய் நில். சகித்து மன்னித்து வா. (B) எனக்கு மோச எண்ணமில்லை. சீக்கிரம் கொடுத்துவிடுகிறேன். என் காலம் சரியாயில்லை. உன் வேலையை சீக்கிரம் முடிக்கிறேன். நம்பியிரு. காத்திரு.

ஃ

3. ஆமாம், உண்டு. (A) நீ சொல்வது சரிதான். அவன் குணம் நானும் கண்டதே. உத்தம மனிதன். அவனை ஆதரிப்பது நமது கடமை. உண்டு, உண்டு, நீ இல்லாமல் புகை கிளம்புமா? (B) ஆமாம், இனி துணிய வேண்டியதே. என்னவோ ஒரு மறைப்பு ரகசியம் இதில் உண்டுதான்.

ஃ

4. அஞ்சேல். எவ்வுதவிக்கும் நான் தயார். எப்படியும் நீ பிழைப்பாய். உன் அவசரத்துக்கு நான் பக்கத்திலிருப்பேன். என்னை நம்பி நீ ஊர் போய் வா. நீ நல்ல மனதுள்ளவன். கடவுளையே நம்பியுள்ள உனக்கு அச்சம் எதற்காக? எல்லாம் அவர் பொறுப்பு. கவலையை விடு.

ஃ

5. போய் வா. என்னை நினை அப்பா. என் ஞாபகமிருக்கட்டும். அடிக்கடி கடிதம் எழுதி வா. நான் சொன்னதெல்லாம் மறவாதே. க்ஷேமமாயிரு. போன இடத்தில் உன் காரியங்களைக் கவனமாய்ப் பார். சீக்கிரம் நாம் தெய்வ கிருபையால் மறுபடியும் சந்திப்போமாக. உன்னை என்றும் மறவேன். என் எண்ணத்தில் நீ இருப்பாய்.

ஃ

6. முடியுமா? (A) முதலிலேயே முடிவு சொல்ல முடியாது. பிறகே தெரியும். எதுவும் செய்து பார். கடவுள் விட்ட வழியில் நடக்கட்டும். (B) என்னைக் குழியில் தள்ள எண்ணமா?—இன்னும் ஏமாற்றவா? உன் வஞ்சகம் இன்னும் ஜெயிக்குமா? நீ தலை கீழாய் விழுந்தாலும் முடியாது. நான் ஒரே பிடிவாத மனிதன்.

ஃ

7. சம்மதமே. (A) அப்படி ஒரு ஒழிக்கு வா. நீ விட்டுக்கொடுத்தால் நானும் விட்டுக் கொடுக்கிறேன். அன்பு இருந்தால் எதற்கும் சம்மதிக்கும். கஷ்டகாலமானதால் உன் நிபந்தனைகளுக்கெல்லாம் சம்மதிக்கிறேன். (B) இனியாவது சரியாக நடந்தால், ஒழுங்குடன் இருந்தால், சம்மதமே.

ஃ

8. முடியாது. (A) உன்னை நான் என்றும் கைவிட முடியாது. உன் பழய அன்பை-காதலை மறக்க முடியாது. தனியே பிரிந்திருக்க முடியாது. உன் கடிதம் தாமதமானால் பொறுக்க முடியாது. (B) இன்னும் நாள் கடத்தவா?—இன்னும் என் பணத்தைத் தராதிருக்கவா?—உன் கூட வரவா?—அதைச் செய்யவா? அதைத் தரவா?—கண்டிப்பாக முடியாது.

ஃ

9. சரிதான். (A) உன் ஊகிப்பு சரிதான். அப்படியும் இருக்கலாம் தான். நீ சொல்வதற்கெல்லாம் சரி யென்று ஒப்புக்கொள்கிறேன். உன் கணக்கு—காரியம்—நீ செய்தது எல்லாம் சரிதான். (B) சரிதான், இன்னும் என் தலையைத் தடவ நினைக்கிருயா? உன்னை முதலில் கண்டபோதே நான் நினைத்தது சரிதான்.

ஃ

10. நாளை வா. கடன் வேணுமா? என் உதவி வேணுமா?—பாக்கிப் பணத்திற்கா?—இரவல் புஸ்தகத்துக்கா?—இ ரு ம ா?—நகை இரவலா?—குடை வேணுமா?—ஓகோ! அந்த சங்கதிக்கா?—எல்லாவற்றுக்குமே நாளை வா, பார்ப்போம்.

ஃ

11. நம்பி ஏமாறதே. என்னவோ உன்பக்கம் பேசுகிருனென்று ஏமாருதே. நல்லவனென்று நினைத்து விடாதே. சொத்துக்காரனென்ரே, யோக்கியனென்ரே, கடன் வாங்கினல் தந்துவிடக் கூடியவனென்ரே பெண் வீட்டாரையும், மாப்பிள்ளை வீட்டாரையும் நல்லவரென்ரே நம்பி ஏமாருதே.

ஃ

12. பணமில்லை. அந்த செலவுக்கா? புது நகை பண்ணவா?—சம்பளம் உயர்த்த வேணுமா?—கடனுகவா?—நோட்டுக்குச் சில்லரையா?—வெட்டிச் செலவு செய்யவா?—உயர்ந்த திண்டிக்கா?—கண்டதெல்லாம் வாங்கவா?—இப்போது பணமில்லை. இருக்கிற பணமே செலவுக்குப் போதாது.

ஃ

13. கடனில்லை. ஊர் போய் பணம் அனுப்பிவிடுகிருயா?—ரயில் செலவுக்கு இல்லையா?—என் அவசரத்திற்கு வைத்திருக்கிறதை உனக்குக் கொடுத்துவிட்டு நான் என் அவதிப்படவேண்டுமோ? கடன் என்கிற பேச்சே என்னிடம் வேண்டாம்.

ஃ

14. இது சமய உதவி. என் அவசரம் தெரிந்து நீர் செய்த உதவி. ஆபத்தில் காப்பாற்றிய சங்கதி. உங்கள் நன்றியை எந்நாளும் மறவேன்.

ஃ

15. தருவதெப்போ? நான் இப்போது தந்தால் நீ திருப்பித் தருவதெப்போ? எத்தனையோ தடவை விழுங்கி ஏமாற்றியவனல்லவோ நீ? உன் கைக்குப் பிறர் பொருள், பணம் வந்தபிறகு நீ திருப்பித் தந்ததுண்டா? நான் தரவும் முடியாது. திருப்பித் தருகிற பெரிய கஷ்டமும் உனக்கு வேண்டாம்.

ஃ

16. குறைத்து சொல். அவ்வளவுக்கு ஒப்ப முடியாது. நீ பேராசைக்காரன். குறைத்துச் சொல்லு. இன்னும் குறைத்துச் சொல்லு. இல்லாவிட்டால் போ. போ.

ஃ

17. விலை அதிகம். (A) எதிலும் அனுபவம் வேண்டும்; நாலு கடை விசாரித்து வாங்கவேண்டும். அவசரப்பட்டு வாங்கினய். விலை அதிகம். (B) கையில் பணம் குறைவாயிருக்கும் போது அது எதற்கு? விலையும் அதிகம். பின்னல் பார்த்துக்கொள்ளலாம். இப்போது வேண்டாம்.

ஃ

18. பிசகு உன்பிதே. நீ இப்போது திண்டாடுகிற பிசகு உன் மீதே. அவசரப்பட்டுப் பேசிவிட்டாய். மீறினய். தூற்றினய். இரண்டு

பெண்டாட்டி கொண்டாய். வஞ்சகமாக நடந்ததற்கு தெய்வம் உன்னைச் சோதித்துவிட்டது. பிசகு உன்மீதே.

ஃ

19. அது சரியில்லை. (A) ஒரு கண்ணில் தெண்ணெய், ஒரு கண்ணில் சுண்ணும்பா ? நீ பாரபக்ஷமாய் நடக்கிறாய். நீ செய்வது எதுவும் சரியில்லை. (B) உழைக்கிறவனிடம் விசுவாசம் வேண்டாமா? அவன் க்ஷேமத்தைக் கவனிக்க வேண்டாமா? உன் சங்கதியில் மட்டுமே சிரத்தையாயிருப்பது அத்தனை சரியில்லை.

ஃ

20. ஈசன் செயல். தெய்வச் செயலை அறிந்தார் யார் ? நல்லவன் கெட்டான். பொல்லாதவன் வாழ்கிறான். எதற்கும் கடவுளையே நம்பியிருப்போம். யாவும் ஈசன் செயல்.

ஃ

21. பேச நேரமில்லை. இது யோசனையுடன் எழுதிக்கொண்டிருக்கிற சமயம். தபாலுக்கு அவசரமாய்க் காரியம் நடத்துகிற வேளை. அதிகப் பேச்சு தர நேரமில்லை. மற்றொரு சமயம் வாருங்கள். கோபிக்காதீர்கள்.

ஃ

22. காலபேதமே. உயர்ந்த பதவிக்கு அடிக்கடி ஏறித் திடீரெனக் கீழே விழுவதுங் காலபேதமே. எது செய்யப்போயினும் நஷ்டமானால், காரணமின்றி நட்பு, உறவு பிரிந்து வேறானால் அது காலபேதமே.

ஃ

23. ஏன் ஆத்திரம்? (A) உலகத்தின் கோணல் அப்படித்தானிருக்கும். எங்கும் நன்றித் துரோகம் தான். இதற்கா ஆத்திரப்படுவது ? சகித்துக்கொண்டு போ. (B) எண்டா அப்பா ! உன் கபட குணத்தை நான் அப்படியே எடுத்துச் சொல்லிவிட்டதற்கா இவ்வளவு ஆத்திரம் ? உன் குற்றமுள்ள நெஞ்சு இப்படி ஆத்திரப்பட வைக்கிறதா?

ஃ

24. நல்ல நாளல்ல. என்ன நாளென்று பார்க்காமல் புறப்பட்டுவிட்டால் ஒரு கெடுதியுமில்லைதான். நல்ல நாளல்லவென்று தெரிந்தும் புறப்படுவது சரியல்ல. நல்ல நாளாகப் பார்த்து நாம் நடந்துகொண்டுவிட்டால், பிறகு தெய்வ சித்தம் போலாகட்டும்.

ஃ

25. உதவுகிறேன். நம்பு; எதிர் பார். உனக்குச் செய்தால் பகவான் எனக்குச் செய்வார். என் ஆதரவும் துணையும் எப்போதும் உனக்கு இருக்கும். என் அன்பே! தைரியமாயிரு.

ஃ

26. என் பாவம் விடாது. என் நன்றி மறந்து துரோகிகளானவர்கள் வாரிக்கொண்டது என்ன? அவர்கள் வாழ்ந்ததுதானென்ன ? இப்போதைய வாழ்வுதான் எத்தனை நாளைக்கு இருக்கப் போகிறது ? என் பாவம் விடாமல் அவர்களைச் சுற்றும். நான் ஒருவேளை இறந்துபோயினும், நீ உயிருடனிருந்து இதைப் பார்.

ஃ

27. கூடுமோ யாதோ? எப்படி நிச்சயமாய்ச் சொல்லுகிறது? ஏதோ போய்ப் பார்ப்போம். செய்து பார்ப்போம். கூடுமோ என்கிற சந்தேகம் இப்போதே என்னத்திற்கு?

ஃ

28. சினம் வேண்டாம். அவன் புத்தி யில்லாமற் செய்தால் அதற்கு

இவ்வளவு கோபப்படுகிறதா? அவர்கள் திட்டினதாலே குறைந்து போகாது. பொறுமைப்படு. கோபத்தைக் குப்பையிலே போடு. ஆறுவது சினம் என்று கேட்டதில்லையா?

ஃ

29. இரவல் முடியாது. பிறகு போக்கடித்துவிட்டால் நீ பதிலுக்கு வாங்கித் தருவாயா? அது எது? உன்னிடமே வைத்துக்கொண்டு காணாமற் போய்விட்டதாயும் சொல்லி விழுங்கி விடலாம். இரவல் முடியாது.

ஃ

30. அது அன்பினால். அவன் இங்கு அடிக்கடி வர என் இடந் தருகிறாயோ?—அந்தப் புண்ணியவான் என்னை என் ஆதரிக்கிறார் என்கிறாயோ?—என் வாழ்நாளின் நோக்கம் எப்படி என்கிறாயா?—அவர் அவனை மன்னித்ததேன் என்கிறாயா?—அது அன்பினால் தான்.

ஃ

31. ஏமாற்றவா? அது முடியாதப்பா இனி. உன் குணம் தெரிந்து விட்டது. உன்னை என்னவோ பசு என்று நினைத்தேன். நீயோ புலியாய் எமனாய் சுயநலமாய் இருக்கிறாய். இதுவரை நான் ஏமாறியது போதும் இன்னும் ஏமாற்ற எண்ணமா?

ஃ

32. வீண் கலகமேன்? என் வாய் விட்டுச் சொல்லிக் கெட்டவனாகிறாய். அவர்களின் சங்கதி தெரிந்த பிறகு நீ ஜாடையாய் விலகிவிடுகிறது தானே? பதிலுக்குப் பதில் என் பேசிக் கலகம் வளர்க்கிறாய்? உன்னாலேயே தினமும் கலகம். மௌனம் கலக நாசம்.

ஃ

33. பழி வாங்குவேன். எனக்குச் செய்த துரோகத்திற்கும் கெடுதிக்கும், பெண்களிடம் கெட்ட நினைவோடு அதிகப் பேச்சு வைத்துக் கொள்வதற்கும், பிரித்துக் கெடுப்பதற்கும், என்னை மோசம் செய்யப் பார்ப்பதற்கும், என்னைக் கண்டபடி பல இடத்தில் தூற்றுவதற்கும் அவசியம் பழி வாங்குவேன்.

ஃ

34. பயணம் உறுதி. புறப்படுவதாக இத்தனை நாளும் சொல்லித் தவறியதுபோலல்ல. இனி பயணம் உறுதியே நம்பு

ஃ

35. நிச்சயமில்லை. (A) நான் வருவதோ, உனக்குச் சொன்ன வாக்கை நிறைவேற்றுவதோ நிச்சயமில்லை. (B) அவனை நம்பப்போகாது; அவன் குணம் போக்கு ஒரு நிச்சயத்திலில்லை. திடீரென்று மாறுவான்.

ஃ

36. இன்னும் யோசி. எந்தப் புற்றில் எந்தப் பாம்போ? இன்று இனிக்கப் பேசியவர்கள் நாளை எப்படி மாறுவார்களோ? அந்தக் காரியம் செய்தால் எவ்வெவ்வாறாக ஆமோ?—விடுவோமா? பிடிப்போமா? இன்னும் யோசி. பிரிந்து வேறு குடித்தனமாகப் போய்விட நினைப்பா?—உன் கோபக் கடிதத்தை அவனுக்கு இன்றைக்கே அனுப்பப் போகிறாயா? நிதானி. இன்னும் யோசி.

ஃ

37. ஆகா! அப்படியே. உங்கள் சொற்படியே செய்கிறேன். முதலில் தலையை யாட்டிப் பிறகு மறுக்கமாட்டேன். நம்பலாம்.

ஃ

38. லாபந்தான். (A) அதுவும் கடவுள் கிருபைதான். (B) அவன் பகைத்ததும் லாபம்தான். அவர்கள் வராமல் ஒதுங்கிக் கொண்டதும் ஒரு விதத்தில் எவ்வளவோ லாபம்தான்.

ஃ

39. நஷ்ட முண்டு. அந்த நஷ்டம் அவனுடைய வஞ்சனையாலேயே. எல்லாம் காலபேதம். எனினும் முயற்சியை விட்டுவிடப் போவதில்லை.

ஃ

40. மிகு மிகு வறுமை. பெரிய சோதனை. பசிப்பிணி, அரை வயிறே சோறு. எனினும், வறுமையின் அனுபவம் ஒரு பெரிய ஞானமாகும். விடிவு காலத்தை எதிர்பார்க்கிறேன். உழைத்தபடியேதான் உள்ளேன்.

ஃ

41. யோசித்துச் சொல்லுகிறேன். கடன் பத்திரத்தில் என்னை ஜாமீன் கையெழுத்துப் போடும்படி கேட்கிருயா?—என் வீட்டில் இடம் வேணுமா?—நீ இங்கே இருந்து தின்று செலவு வைப்பது போதாமல் உன் மனைவி மக்களையும் இங்கே அழைத்துக்கொள்ளக் கேட்கிருயா?—அந்த சங்கதிக்கு என் உதவி வேணுமா?— கடன் வேணுமா?— பிறகு யோசித்துச் சொல்லுகிறேன்.

ஃ

42. என்னை நம்பு. நான் முடித்துக் கொடுக்கிறேன். உன் வெள்ளை மனமும் உத்தம சிலமும் அறிவேன். உன்னை ஒருநாளும் கைவிடேன்.

ஃ

43. கோள் வேண்டா. அவன் சங்கதியை அங்கு இங்கு கூறிக் கலக மூட்டாதே. உன் கோள் சொல்லுகிற புத்தியை விட்டுத் தொலை.

ஃ

44. நீ மண் குதிரை. உன்னை நம்ப முடியாது. நீ எந்தக் காரியத்தையும் முடித்துக் கொடுக்கவுமாட்டாய். நீ வீண் வாய் டம்பக்காரனென்று எனக்கு நன்ருய்த் தெரியும். நீ சுயநல உருவம். போ ! போ !

ஃ

45. கூட வருகிறயா ? வருகிறேனென்று சொல்லி சமயத்தில் மறைந்துகொண்டு, அல்லது ஏதாவது சாக்கு போக்கு கூறிவிட்டு மோசம் செய்கிருயா? வருவதும் வராததும் இப்போதே கண்டிதமாய்ச் சொல்லிவிடு.

ஃ

46. அது எப்போது? (A) நீ உண்மையாக எந்த நாளாவது நடந்ததுண்டா ? நீ யோக்கியனுகிற காலமும் ஒன்றுண்டா? நீ திருந்தும் வேளையும் வருமா ? (B) வறுமையும் சோதனையும் நீங்கிச் சுகப்படும் காலமும் உண்டா ? அது எப்போது ?

ஃ

47. எல்லாம் கபடம். மனதிற்குள்ளே ஒன்று; வாயிலே ஒன்று. எந்த நாளில்தான் அவர்கள் வஞ்சக மற்று யதார்த்தமாய் நடந்தது? அவர்களின் காரியங்களெல்லாம் கபடமே.

ஃ

48 அது அந்த நாள். போன நாள் திரும்புவதேது ? அவர்கள் உன் மீது எவ்வளவோ அன்பாயிருந்தார்களே என்கிருயா ? அது அந்த நாள்! இப்போது வலியப் போனாலும் முகங் கொடுத்துப் பேசுவாரைக் காணோம் !

ஃ

49. அது பொறுமை. அவனுடைய பொறுமை என்னை அப்படிக் கேவலப்படுத்திப் பேசும்படி தூண்டுகுறது. என்ன இகழ்ந்தாலும் என்னை மதிப்பவர்கள் எப்போதுமே மதிப்பார்கள். அவன் பொறுமை அவனைத்தான் கெடுக்கும்.

ஃ


50. அது அதிர்ஷ்டம். அவன் தொட்டதெல்லாம் பொன்னுகிறது. அவன் முயற்சி எல்லாம் நிறைவேறுகிறது. ஒருகாலம் ஏழையாயிருந்தவன் இப்போது எவ்வளவு சிமானுய் விட்டான் பார்த்தாயா? அவன் வழக்கு ஜெயம் பெற்றுவிட்டதப்பா. அவன் வியாபாரம் இவ்வளவுக்குப் பெருகியதும் மாடி வீடு கட்டியதும் எப்படி என்கிறுயா? அது அதிர்ஷ்டம்.

ஃ

என் நஞ்சான் குஞ்சான்களே! உங்களிடம் பேசியவர்களுக்கும், உங்களிடம் ஒன்றைப்பற்றிக் கேட்டவர்களுக்கும் நீங்கள் சொல்லும் விடையாக இந்த அனுபவ ஞானக் கண்ணுடியிலுள்ள அதற்குப் பொருத்தமான விடையான ஒரு குறிப்பை—இலக்கத்தை—அவர்களின் மூஞ்சிக்கு முன்னே காட்டிவிட்டு வேடிக்கை பாருங்கள். அவரவர்களின் நல்ல குணமும் பொல்லாத குணமும் அவர்களின் மூஞ்சியிலே விளங்கி வெடிப்பதை நேரில் நன்றாகக் காணலாம்! விகடன் சொன்ன சூட்சுமம்—பிறரது குணத்தை முகத்திலே கண்டுகொள்கிற மாதிரி—தெரிந்ததா? இனி இதைப் பரீக்ஷித்துப் பாருங்கள்! ராம்! ராம்! சுபம்! சூ!! சுவாஹா!!!

ஆசிரியர்களிடம் வைக்கும் அன்பு இப்படித்தானு?

நூலாசிரியரை வெகு ஆவலுடன் காண வருகிறுர்கள். கண்டு பல பல பேசுகிறுர்கள். அவர் இயற்றிய நூல்களெல்லாம் தங்களிடமிருப்பதாகப் பெருமை தெரிவிக்கிறுர்கள். கடைசியில், ஒரு புதிய நூலைக் கேட்டுப்பெற்று, அதை விலை குறைத்துத் தரும்படி வற்புறுத்துகிறுர்கள். ஆசிரியரோ இந்த நூல்களை விற்றே தமது பசியையும் வறுமையையும் ஆற்றிக்கொள்ளவேண்டுமென்கிறுர். தனது நூல்களிடத்தும், தம்மிடத்தும் அன்புகொண்டிருக்கையில் விலை குறைத்துக் கேட்பது நியாயமா என்கிறுர். அவர்களின் மனம் இரக்கப்படுவதேயில்லை. புஸ்தகம் வாங்காமலே போய்விடுவார்கள் போலும் தோன்றுகிறது. முடிவில் மன வெறுப்புடன் அவர்கள் குறைத்துக் கேட்ட விலைக்கே தந்து, எப்படியாவது வாசித்துப் பார்த்து இன்புறட்டுமென்று மனம் தேறுகிறுர். ஆசிரியர்களிடம் கொள்ளும் அன்பு இப்படித்தானு? ஆனல், எந்த விலையுமே கொடாமல் இலவசத்தில் பெற்றுப் போய்விடுவோரை விட, குறைத்தாயினும் விலை கொடுத்துப் பெறுவோர் சிரேஷ்டர்கள்தான்.



லலிதா தேவி.



"பெட்டைச் சிறிக்கிக்கு இவ்வளவு ஆணவமா? —அடி உதவுகிறமாதிரி அண்ணன் தம்பி உதவுவார்களா?—உம்" என்று முகுந்தலால் தன் மனைவியின் மீது பாய்ந்தான். லலிதா பயந்தாள்: நடுக்கங் கொண்டாள். உடல் குன்றிச் சுவரோடு சுவராக ஒன்றி நின்றாள்; பிறகு முகத்தில் குத்துகள் பாய்ந்தன; லலிதா மூர்ச்சையானாள்.



"என்னடி பாசாங்கு காட்டுகிறாய்—கள்ளி முண்டை" என்று ஓங்கி உதைத்துத் தள்ளினான்; கழுத்திலிருந்த பொற் சங்கிலியைப் பற்றி இழுத்தான். அது அறுந்து கையுடன் வந்தது. மறுகணம் அம் மிருகம் மறைந்தது.

பள்ளியிலிருந்து வந்த சுகுந்தமாலா "அம்மா. அம்மா" என்று கூவினாள். சின்னஞ் சிறு குழந்தை. வயது ஆறு. மூலையில் கிடந்த தாயைக் கண்டு அழத்தொடங்கிற்று. லலிதா கண்ணைத் திறந்தாள். அருகே மகள் இருப்பது கண்டு, "மாலா..."என்று கதறினாள். மாலாவும் அழலானாள்.

ஃ

முகுந்தலால் தன் மனைவியிடம் பறித்த நகையை அடகுவைத்துப் பணம் பெற்றுத் தான் காதலித்த தாசி இந்திராவின் வீட்டிற்குச் சென்றான்.

"இந்திரா! இதோ நீ கேட்ட ரூபாய்" ஒரு கட்டு நோட்டு; ரூபாய் சப்தம் வேறே! புன்னகை புனைந்து அன்பு கூட்டி, வணக்கம் காட்டி, செயற்கை அலங்கார பூஷிதையாய்த் தோன்றினாள் இந்திரா. கட்டி முத்தம் தந்தாள். முகுந்தலால் மையலில் ஆழ்ந்து போனான். "கண்ணே—ரதியே—கிளியே—கரும்பே" என்ற காமச் சொற்கள் கிளம்பின. இந்திராவின் மையலில் முகுந்தலாலுக்கு மற்றை லோகம் அந்தகாரம் சூழ்ந்ததாயிற்று.

ஃ

முருந்தலால் இந்திராவின் வீட்டிலேயே தங்கலானான். தன்னிடமே இருப்பதாக நினைத்து மயங்கிய இந்திரா மற்றொருவனுக்கும் கண்மணியா யிருப்பதைக்கண்டு கொண்டு வெறுப்பு மிகுந்தான். அதனால் மறுநாளிரவு அவளிடம் தங்காமல் சினிமாவுக்குச் சென்று விட்டு, மறுபடியும் இந்திராவின் ஆசை பிடித்தாட்ட ரகசியமாய் அவள் வீட்டிற்கருகே சென்றான். உள்ளி ருந்து வரும் வார்த்தைகளை ஜன்னலின் பக்கமிருந்து கவனித்துக்கேட்டான்.

ஃ



"இந்திரா! நேற்று வந்தவன் யார்?"

"யார் வந்தது?"

"தெரியாதென்று நடிக்கிறாய்? இங்கேயே அவன் மேல்மாடியில் இருந்தானே?"

"இல்லை......"

"இல்லை யென்றால்..."

"உன் அடிமை நான் இல்லை... என் தலைமேல் ஏறி என்னை மிதிக்க இது இடமில்லை."

"கள்ளி, வேஷக்காரி."

"போதும், யாரிடம் பேசு கிறீர்?"

"உம்...ஒன்று நீ! இல்லையானால் நான்—இருவரில் ஒருவர்—இறக்க வேண்டியதே. இதே இன்றைய முடிவு. என்ன சொல்லுகிறாய்?"

கத்தி மின்னிற்று; நடுங்கினாள்.

ஃ

முருந்தலால் இதைக்கேட்டுப் பிரமித்தவனாய் சட்டென்று வாசற் கதவுக்கு வெளித் தாழ்ப்பாளிட்டான். கயிற்றாலும் கட்டினான்.

☘

"மாலா, உன் அப்பா வந்து ஐந்து நாட்களாயின. நாம் எக்கதி ஆயினோம் என்றுகூட நினைக்காதவரானார். செல்வமே! எத்தனை நாள் சமைக்க மனமின்றிப் பட்டினி கிடப்பது? உன் அப்பாவை ஒருமுறை பார்த் தால் என் உயிரைத் துணிந்து போக்கிக் கொள்வேன்."

முருந்தலால் இந்த சமயம் தடதடவென்று உள்ளே நுழைந்தான். தனது ரயில்வே கார்டின் உத்தியோக உடுப்புடனிருந்தான். கையில் ரயில்வே லாந்தர் இருந்தது.

'அப்பா அப்பா' என்று ஓடிக் கட்டிக்கொண்டாள் மாலா. அவன் ஒன்றும் பேசவில்லை; மௌனம்.

"இவ்வேழைகள்மீது இரக்கங்காட்ட இத்தனை நாளோ...?" என் இந்தவிதமாகக் குடும்ப அலங்கோலமோ?" என்றாள் லலிதா.



"அப்பா பசி."

"பெண்ணே—உன் மன்னிப்பைக் கோரியே வந்தேன்."

"நாதா—என்ன வார்த்தை இது?"

"மன்னித்ததாகச் சொன்னால் இருப்பேன். இல்லாவிடில் இதோ போகிறேன்."

"நானு மன்னிப்பது?—எதை?"

"ஆம். உன்னைப் புறக்கணித்ததை."

"இல்லையே. நீங்கள் என்றைக்கும் என் சொந்த நிதியே."

ஃ

சம்பாஷணை முடிவதற்குள் தெருக்கதவைத் திறந்துகொண்டு ஆயுதபாணிகளாய்ப் போலீஸார் உட்புகுந்தனர். போலீஸ் இன்ஸ்பெக்டர் முகுந்தலாலின் கரத்தைப் பற்றிக்கொண்டு, "இந்திராவைக் கொலை செய்த குற்றத்திற்காக உம்மைக் கைது செய்கிறேன்" என்றார்.

ஃ

எங்கேயோ பாதாளலோகத்தி லிருப்பதுபோல் லலிதா—"என்ன கொலையா ?—நீரா ?ஐயோ !" என்று குளறிக் கொட்டினாள். மாலா தன் தந்தையின் கழுத்தை அணைத்துக்கொண்டு "விடமாட்டேன்" என்று அழலானாள். ஜனங்கள் கூடினர். சில பெரிய மனிதர்களும் முகுந்தலாலுக்காக இரக்கப்பட்டு அங்கு ஓடிவந்தனர்.

ஃ

முகுந்தலால் :—"இந்திரா எப்போது கொல்லப்பட்டாள்? நான் கொன்றேன் என்பது எப்படி?"

இன்ஸ்பெக்டர் :—நேற்று அதிகாலை நான்கு மணிக்குக் கொலையுண்டாள். கத்தியால் குத்தப்பட்ட ஐந்து காயங்கள் அவள்மீது இருக்கின்றன. கூச்சலைக் கேட்டு உள்ளே சென்றபோது கொலையாளி அங்கு இல்லை. நீ அதற்குள் ஓடி மறைந்துவிட்டாய்"

முகுந்தலால் :—"நானே கொன்றதாக எப்படி நிச்சயித்தீர் ?"

இன்ஸ்பெக்டர்:—"இந்த சமர்த்துப் பேச்சு என்னிடம் செல்லாது. நீயே குத்திக் கொன்றதாக இந்திரா தனது மரண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறாள். ஸப் மாஜிஸ்திரேட் அவள் அருகிலிருந்து அவளிடம் வாக்குமூலம் வாங்கியிருக்கிறார். நீ தப்பித்துக்கொள்ள முடியாது."

முகுந்தலால்:—"நீங்கள் இந்திராவின் கூச்சலைக் கேட்டது எத்தனை மணிக்கு?"

"இன்ஸ்பெக்டர்:—"சரியாக நாலு அடித்துப் பத்து நிமிஷம் இருக்கும். நாங்கள் உள்ளே புகப் போனபோது வீட்டின் கதவு வெளித் தாழ்ப்பாளிட்டுக் கயிற்றாலும் பலமாகக் கட்டப்பட்டிருந்தது. அதை அவிழ்த்துத் தாழ்ப்பாளை எடுத்துவிட்டு உள்ளுக்குச் செல்ல முயன்றதில் உள்ளுக்கும் தாழ்ப்பாள் இட்டிருந்ததால் கதவைப் பிளந்துகொண்டு உட்சென்றோம். அங்கே உன்னைக் காணவில்லை. நீ சுவர் ஏறிக் குதித்து ஓடிவிட்டாய் போலும். இந்திரா குற்றுயிராய்க் கிடந்தாள். உடனே மரண வாக்குமூலம் வாங்கப்பட்டது: கால்மணி நேரத்தில் அவள் இறந்தாள்"

முகுந்தலால்:—(1) "இந்திரா கொலையுண்டது நேற்று காலை நான்கு மணிக்கு. (2) வீட்டின் கதவு வெளித் தாழ்ப்பாள் இடப்பட்டிருந்தது: இந்த இரண்டையும் நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?"

இன்ஸ்பெக்டர்:—"ஆம், இந்த இரண்டையும் ஒப்புக்கொள்கிறேன்."


முகுந்தலால்:—"இன்னொரு கேள்விக்கு மட்டும் தயை செய்யுங்கள். இந்திராவின் சவம் இப்போது எங்கே யிருக்கிறது? இந்திராவின் வீட்டிற்குக் காவல் வைத்திருக்கிறீர்களா?"

இன்ஸ்பெக்டர்:—"இந்திராவின் சவம் அவ்வீட்டிலேயே கிடக்கிறது. வீட்டைப் பூட்டிக் காவல் வைத்திருக்கிறோம். உன்னை நேற்றுமுதல் தேடித் திரிகிறோம். உன்னைக் கைது செய்த பிறகு சவத்தை டாக்டரின் பரிசோதனைக்கு அனுப்புவதென்று ஏற்பாடு."

முகுந்தலால்:—"சரி, கொலையாளி நானல்ல. என் அதிர்ஷ்டவசத்தால் உண்மைக் கொலையாளி வீட்டிற்குள்ளேயே யிருக்கிறான். அவ்வீட்டின் கக்கூஸ் மேலே சிறு துவாரமும், அதைச் சுற்றிக் கட்டிடமும் பூமியின்கீழ் சிறு கதவுமானதால் ஒரு மனிதன் அதற்குள் நுழைய முடியாது. மேல் மாடி பூட்டப்பட்டு சாவி என்னிடமிருப்பதாலும், வேறு வெளிச்சுவர் இல்லாமல், முழுதுமே கட்டிடமாக மூடப்பட்டிருப்பதாலும் கொலையாளி தப்பிப் போக முடியாது. கொலையாளி கொலை செய்துவிட்டு வெளியே ஓடப் பார்த்து, வெளிக்கதவு வெளியில் தாளிடப்பட்டிருந்ததால் பிரமித்து நாலு பக்கமும் ஓடித் தப்புவிக்கப் பார்க்கிறான்; முடியவில்லை; எவரும் உள் நுழையாதிருக்க மறுபடியும் உள் தாழ்ப்பாள் இட்டுவிட்டு வீட்டுக்குள் அலைகிறான். அதற்குள் கதவைப் பிளந்துகொண்டு போலீஸார் உட்செல்கின்றனர் கொலையாளி அவ்வீட்டில் எங்கோ ஒரு அறையில் மறைந்துகொள்கிறான் இன்னும் அங்கேயே இருக்கிறான். என்னை அங்கே அழைத்துச் சென்றால் கண்டு பிடித்துக் கொடுக்கிறேன். இன்னொரு சங்கதி. கொலை நடந்த நான்கு மணிக்கு நான் செங்கற்பட்டில் ரயிலில் கார்டாக என் வேலையைச் செய்து

கொண்டிருக்கிறேன். ரயிலுடன் போய்க்கொண்டிருக்கிறேன் என்பதையும் கவனியுங்கள். கொலை இந்த மாயவரத்தில் நடந்தது. அதே நேரத்தில் நான் செங்கற்பட்டு ஸ்டேஷனில் மெயில் வண்டித் தொடரில் இருக்கிறேன். காலையில் சென்னை சேர்ந்து மறுபடி நேற்றிரவு ரயிலுடன் புறப்பட்டு இன்று இங்கு வந்துள்ளேன். இதற்கு என் உத்தியோக முறையில் வேண்டிய சாக்ஷியங்களிருக்கின்றன. இந்திரா கேவலம் ஒரு தாசி. இறக்கும் சமயத்திலும் நன்றியற்றுப் பொய் வாக்குமூலம் கொடுத்திருக்கிறாள். இது ஆச்சரியமே."

ஃ



உக்கிரகமாய் நின்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் யோசிக்கலானார். முகுந்தலாலுடன் சில பெரிய மனிதர்களையும் இட்டுக்கொண்டு இந்திராவின் வீட்டிற்குச் சென்றார். வீட்டின் எல்லா இடங்களிலும் தேடினர். கொலையாளி அகப்படவில்லை. முகுந்தலால் திகைத்து, சமையல் அறையின் பரணிமீது ஏறி, அங்கே அடுக்கியிருந்த கட்டைகளை எடுத்தெறிந்து சோதிக்கையில், கொலையாளி கட்டைகளின் கீழிருந்து துணிகளிலெல்லாம் ரத்தக் கறைகளுடன் அகப்பட்டான். கத்தியும் அங்கு கிடந்தது. இன்ஸ்பெக்டர் அவனைக் கைது செய்தார். கொலையாளி கூறியதாவது:—இரவு எங்களுக்குள் சண்டை நடந்தது. இனி தான் ஒழுங்காக நடப்பதாய்க் கூறியதால் மன்னித்தேன். அதிகாலையில் மறுபடியும் அவளை என் இஷ்டத்திற்கு அழைக்க, அதற்கு அவள் கோபத்துடன் மறுத்தாள். உடனே ஆத்திரமாய் அவளைக் குத்திக் கொன்றுவிட்டு வெளியே போகமுயல, கதவு வெளியில் தாளிடப்பட்டிருந்தது. உடனே கதவை இடிக்கும் சத்தம் கேட்டது பரணியில் ஏறி ஒளிந்துகொண்டேன். அதற்குப் பிறகு தப்பித்துச் செல்லவும் முடியவில்லை. நானே பலமாகக் கட்டிக்கொடுத்த இந்த வீடு என்னையே அகப்பட வைத்துவிட்டது. கக்கூஸ் வழியாய்த் தப்பவும் கூடவில்லை என்றான். முகுந்தலால் தான் வெளிக்கதவைத் தாளிட்ட சங்கதியை வெளியிடவில்லை

ஃ

முகுந்தலால் நிரபராதியென்று விடுதலை செய்யப்பட்டான்.

கையில் பெரிய மிட்டாய்ப் பொட்டணத்துடனே தன் வீட்டுக்குள் நுழைந்தான் லலிதா தன் பிராணபதியை ஆவலுடன் தழுவிக்கொண்டாள். மாலா ஓடிவந்து மிட்டாய்ப் பொட்டணத்தை ஆவலுடன் வாங்கிக்கொண்டாள்

"உத்தமியான உன்னைக் கொடுமைப் படுத்தியதற்குக் கடவுள் எனக்குச் சோதனை காட்டிவிட்டார். வெளிக்கதவை நான் தாளிடாதிருந்

தால் அந்த சண்டாளன் ஓடியிருப்பான். இனி உன்னையன்றி வேறொருவர் முகத்தையும் பாரேன்" என்றான் முகுந்தலால்.

மலைபோல் வந்த துன்பம் பனிபோல் நீங்கியது. லலிதாதேவி தன் பிரேம பதியுடன் சுகமே யிருந்து வருகிறாள்.

"எத்தனைபேர் நட்டகுழி? யெத்தனைபேர் தொட்டமுலை?
எத்தனைபேர் பற்றி யிழுத்தவிதழ்?—நித்த நித்தம்
பொய்யடா பேசும் புவியில்மட மாதரைவிட்
டேய்யடா வுய்யடா வுய்."

P. G. குலசேகரன்.

புதிய 1935-ம் ஆண்டு.

நம்முடன் சென்ற ஒரு வருட காலமாக வாழ்ந்து கலந்து நின்ற 1934-ம் வருடம் இயற்கையன்னையின் நியதிப்படி கால சக்கரத் திரையினுட் புகுந்து மறைந்து மாயமாயது. ஒன்று போக மற்றொன்று என்பதாக, இதுகாலை 1935-ம் ஆண்டு தோன்றியுள்ளது. அந்தப் புதிய கப்பலில் நமது வாணாள் யாத்திரையை இற்றைஞான்று தொடங்கியுள்ளோம். சென்ற வருஷத்துச் சுக துக்கங்களையும், லாப நஷ்டங்களையும் பாம்பு தன் தோல் உரிப்பதுபோன்று நம்மினின்றும் விலக்கி, அவற்றை எண்ணாது மறந்து ஒதுங்கிக் கொண்டு, புது வருடப் பளபளப்புப் பரிமளச் சுந்தர மேனியோடும் புது ஆண்டின் மகிழ்விலே சித்தம் திரும்பி திருப்தி கொண்டாடிப் பூரித்துள்ளோம். புது வருட டைரிகளைப் புதிய சுறுசுறுப்போடும், புதிய ஊக்கத்தோடும் புதுமையாய் ஏற்று, அதன் புதிய பக்கங்களிலே நம் எழுதுகோலை அசைக்க முற்பட்டுள்ளோம். கருணாநிதியாகிய பகவான் இப் புது ஆண்டில் நமக்குப் புதிய ஜீவனும் புதிய சக்தியும் புத்தியும் தந்து, வெற்றியும் புகழுமான நல்ல அதிர்ஷ்ட திசைக்கு நம்மை அழைத்துச் சென்று, 'வருதுயர் சூழ்பிணி யாவும் தொலைய' நலமேயாக, எதுவும் லாபமேயாக, தொட்டதெல்லாம் பொன்னேயாக, எத்திக்கிலும் எத்துறையிலும் நல்லபிவிர்த்தியே எதிர்பட, நம்மைச் சூழ்ந்துள்ளோரனைவரும் இன்புற வாழ, நாமும் புளகித மனத்தினராய் உயர்நலமே காணத் திருவருள் புரிந்து ஆதரித்துக் காப்பாராக. 'அவர்' பாதம் துணை.

"ஆழிபுவடசூ ழுலகம்
யாவும் நல மேவ!
அறத்துறைப் புகுந்து
உயிர்க ளன்பு வேளழ்க!"

மதிப்புரை.

புதிய சீர்திருத்தங்கள் :—

[சென்னை பிராட்வே "தாருல் இஸ்லாம்" கம்பெனிப் பதிப்பு. விலை அணா 2½.]

அரசினர் விடுத்துள்ள "வெள்ளை அறிக்கை"யின் வரலாறும், கூட்டுக் கமிட்டியின் ரிப்போர்ட்டும், அதைக் குறித்துப் பிரபலஸ்தர்கள் கொண்ட அபிப்பிராயங்களும் இந்நூலில் ஒருங்கு சேர்த்துள்ளன. ஆதியிலிருந்து விஷயங்களைத் தொடர்ச்சியாய் அறிய விரும்புவோர்க்கு இச்சிறு பிரசுரம் அதி உபயோகம் தரும். இவ்வாறாய "அந்தந்தக் காலப் பிரசுர வெளியீடுகள்" அவ்வப்போதுமட்டுமே பெறக்கூடியதாகிப் பிறகு விலைக்கும் கிடைக்காமற் போய்விடுமாதலின், அகப்படுகிற இப்பொழுதே ஒவ்வொருவரும் பெற்றுப் பத்திரப்படுத்திக்கொள்வது நன்றாகும்.

அருளிச் செயல் பாகவதம் :—

[ஸ்ரீமான் சே. ரங்கஸ்வாமி ஐயங்கார் எம். ஏ. அவர்கள் இயற்றியது. 8/71, T. P. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. விலை அணா 1.]

ஆழ்வார்கள் அருளிச் செய்த திருமொழியைக் கொண்டே, கண்ணன் கதையைக் கூறுவது. நூற்றெட்டுத் திருப்பதிக் கோவையும் அடங்கியது. பக்திப் பரவசம் தர வல்லது. பாச்சுவையின் இனிமையில் தம்மை மறந்து துள்ளவைப்பது. அத்யந்த அற்புத மதுரம் வாய்ந்த பாடல்களால் அமைந்தது. மனதைப் பகவத் ஸந்நிதியிலிழுத்துப் பக்குவம் தரும் ஆற்றல் வாய்ந்தது. படித்துணர்வாருக்கே அதன் இனிமையும் உயர்வும் விளங்கும். இதனை ஆக்கிய எம். ஏ. பெரியாரின் அமிர்தவர்க்கை பொன்னே போலும் போற்றுகிறோம்.

துரௌபதி கூந்தல் முடித்தல்.

—மஹா பாரதப் போரின் சுருக்கம்—

(705-ம் பக்கத் தொடர்ச்சி.)

V

பீமன் சொன்னதைக் கேட்ட துரியோதனன், "அடா மூடா, அவர்கள் முன்னே என்னென்னவோ பிதற்றுகிறாய்; சீ, மூடா. வெட்கமில்லாதவனே, உங்கள் பெண்டாட்டியை உங்கள் முன்னே என் கட்டளையினாலே என் தம்பி தலை மயிரைப் பிடித்திழுத்து மானபங்கம் செய்தான்; அடே அதற்காகப் பேர் ஊர் இல்லாத ஏழை அற்ப இராஜாக்களை அடித்தோமே யென்று வெட்கமடையவேண்டி யிருக்க, வெளியில் வந்து பிதற்றுகிறது வெகு நேர்த்தி! துஷ்டா, உன்னைக் கொல்பவன் யான் இதோ இருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே எழுந்திருக்க, காந்தாரியும் திருதராஷ்டிரனும் சமாதானப்படுத்தி உட்கார வைத்தார்கள்.

ஃ

இதனால் பீமனுக்கு மிகுந்த கோபம் வந்து விட்டது. "மதிகெட்ட மூடா, இப்போது உன்னை உன் தாய் தந்தையர்கள் தடைசெய்யாமல் விட்டு விடுவார்களேயானால், இந்த நிமிஷத்திலேயே துக்சாசனன் பின்னே உன்னையும் அனுப்பி விடுவேன்" என்று பீமன் கூற, அர்ச்சுனன் "அண்ணா, இவன் வாயால் பேசுவது மாத்திரமே அல்லது கையால் ஒன்றும் செய்ய வல்லவனல்லன்; தம்பிகள் அநேகர் மாண்டுபோன துயரத்தால் ஏதோ பிதற்றுகிறான்; இதனால் என்ன?" என்றான். இவ்விதம் பீமனும் துரியோதனனும் ஒருவர்க்கொருவர் திரஸ்காரமாய் வாதாடிக் கொண்டிருந்தார்கள். இதற்குள் "அஸ்தமானமாகி விட்டது; சத்துருக்கள் வெகுவாய் மடிந்து போனார்கள்; இனி இன்று யுத்தத்தை நிறுத்தி விட்டுத் தண்டுகள் கூடாரம் போய்ச் சேரவேண்டும்; யுத்தத்தில் மரித்தவர்களின் பிரேத சரீரங்களைப் பந்துக்கள் தகனாதிகள் செய்யப் பிரயத்தனம் செய்யலாம்" என்று தர்ம புத்திரர் ஆக்கினை செய்வதாய்ச் சேவகர்கள் இவர்களுக்குத் தெரிவிக்க, பீமனும் அருச்சுனனும் மறுபடி தேரிலேறிக்கொண்டு புறப்பட்டார்கள்.

ஃ

இவர்கள் புறப்பட்டதும், "அர்ச்சுனா! போகாதே; நான் இதுவரையில் ஆயுதங்களை விட்டிருந்தபடியால், நீ போர்க்களத்தில் வெற்றி கொண்டு விளங்கினாய்; இனி உன்னையும், என் பிதாவை அவமானத்திற்குள்ளாக்கின திருஷ்டத்யும்னனையும் விட்டேனா?" என்று சொல்லிக் கொண்டு அங்கு அசுவத்தாமா வந்து சேர்ந்தான். திருதராஷ்டிரன் அசுவத்தாமாவைப் பார்த்து, "அப்பா! நீ

யாவது என் மகனுக்குப் பிடிப்பா யிருக்கிறாயே" என, அதற்குத் துரி யோதனன் "அங்கராஜனுகிய கர்ண னுக்குப் பிறகு தான் யுத்தம் செய்ய வேண்டுமென்று பிடிவாதங்கொண் டிருந்த நீ எனக்குப் பிறகு யுத்தம் செய்தாற் போதும்" என்றான். இதைக்கேட்டு அசுவத்தாமா, அப் படியா? இன்னுங் கர்ணனிடத்தில் பக்ஷபாதந்தானா" என்று சொல்லிக் கொண்டே போய் விட்டான். இப் படித் துரியோதனன் தன் கக்ஷியில் பாக்கியிருந்த அசுவத்தாமாவைக்கூட அவமதித்ததைக் கண்டு திருதராஷ் டிரன் வருத்தங்கொண்டு, தன் மக னைப் பார்த்து "அப்பா! உன் மேற் குற்றமில்லை; இப்பொழுது நமது குலத்திற்கு முடிவு காலம் வந்து விட்டது; இனி நான் என்ன செய் யப் போகின்றேன்" என்று சொல் லித் தன் மனைவியாகிய காந்தாரியை அழைத்துக்கொண்டு சென்று விட் டான். பீமனும் அருச்சுனனும் தங் கள் கூடாரம் போய்ச் சேர்ந்தார்கள்.

ஃ

மறுநாள் துரியோதனன் சல்லிய னுக்குச் சேனாதிபத்தியம் தந்து பல சேனைகளைக் கூட்டி அனுப்புவிக்க, அவன் தர்ம புத்திரரால் மடிந்து போனான். ஸஹாதேவன் தனது பூர்வ சபதத்தின்படி இந்தப்பாரத யுத்தத்திற்கே கலக அஸ்திவாரம் விதைத்த சகுனியைக் கொன்று விட் டான். பாரத யுத்தம் ஏறக்குறைய முடிந்து விட்டது. பீஷ்மாசாரியார் என்ற சமுத்திரம் தாண்டப்பட்டது. கர்ணன் என்ற பாம்பு நசுக்கப்பட் டது. சல்யனும் சகுனியும் சுவர்க்க லோகம் போய்ச் சேர்ந்தார்கள். பீம னும் தான் செய்த உறுதியை அநேக மாக நிறைவேற்றிக்கொண்டான். துரியோதனன் சைனியமெல்லாம் முற்றும் மாண்டுபோய்விட்டது. கிருபர் கிருதவர்மா அசுவத்தாமா மூவரும் போன இடமே தெரியாமல் எங்கேயோ மறைவிடமாய்ப் போய் விட்டார்கள். அன்றைய தினம் பொழுது போவதற்குள்ளே துரியோ தனனைக் கொன்றுவிடுவதாகப் பீமன் பிரதிக்ஞை செய்தான்.

ஃ

பீமன் வெகுவாய்த் தான் செய்த பிரதிக்ஞைகளை நிறைவேற்றி விடவே, இனி அவன் முன்னே தன் உயிர் தப்பாதென நிச்சயமாய்த் தெரிந்து துரியோதனன் ஒருவருக் கும் தெரியாமல் ஒரு குளத்தில் முழுகி மறைந்துகொண்டான். கிருஷ்ணன், பீமன், அருச்சுனன் மூவரும் அவனைத் தேடிக்கொண்டு சென்றார்கள். அங்கே ஒரு வேடன் வந்து ஒரு குளத்திலே தண்ணீர்க் குள் யாரோ இறங்கின அடி தெரி கிறதென்றும், கரையில் ஏறி வர வில்லை யென்றும் பீமனுக்குத் தெரி வித்தான். மூவரும் அந்தக் குளக் கரைபோய்ச் சேர்ந்தார்கள். துரியோ தனனுக்கு ஜலஸ்தம்ப வித்தை தெரியுமாகையால் அவன் இதில் ஒளிந்திருப்பானென்பது நிச்சய மென கிருஷ்ணன் சொல்ல, மூவரும் அவனைக் கண்டு பிடிக்கும்படி அக் குளக் கரையில் உட்கார்ந்தார்கள்.

ஃ

பீமன் பின் வருமாறு கூறி னான் :—"அடா வெட்கங்கெட்ட வனே! மானிடப்பதரே! துரௌபதை யின் தலைக் கூந்தலைப் பற்றி இழுத்த மகா பாவியே! நீ செய்யத் தகாத பல கொடுந்தொழில்கள் செய்தாய்; குலத்தை யெல்லாம் பாழாக்கினாய்; சகாயமாயிருந்த துச்சாசனன், கர் ணன் முதலியவர்களையும் சாகக் கொடுத்தாய்; பரிசுத்தமான சந்திர வம்சத்தில் தோன்றிக் கதா யுத்த

வித்தையையும் நன்ருய்க் கற்றுத் துச்சாதனன் இரத்தத்தைச் சுடச் சுடக் குடித்த சத்துருவாகிய என்னை எதிர்க்காமல் வெட்கமில்லாமல் ஓடி வந்து இந்தத் தருணத்தில் குளத்தில் ஒளிந்து கொண்டாயே! இது உனக்கு அவமானமல்லவா? இதுவோ வீரர் செய்வது! ஏதோ பல வீரவாதம் செய்தாயே; மூடா!" என்று இப்படிப் பலவிதமாகக் கடோரமாய்ச் சொல்ல, அதைக்கேட்டுப் பொறுக்க மாட்டாமல் துரியோதனன் ஜலத்தை விட்டு வெளியே வந்து, "துஷ்டா! உனக்குப் பயந்து யான் இங்கே வந்து ஒளிந்திருப்பதாக நினைத்தாயோ? இல்லை; சத்துருக்களான உங்களைக் கொல்வதற்குமுன் உங்கள் முன்னே இளைப்பாற வெட்கமாயிருந்தது. மறைவாய்ச் சற்று இளைப்பாற வந்தேன்." என்று சொல்லிப் பெருமூச்சுடன் கரையில் ஏறி உட்கார்ந்தான் இப்போதும், தான் இனி சண்டை செய்ய முடியாதென்று துரியோதனன் ஒரு வார்த்தை கூறி விடுவானுகில், உடனே தர்ம புத்திரர் போரை நிறுத்தித் துரியோதனனைத் தழுவிக்கொண்டு சமாதானமாகி விடுவது நிச்சயமே. ஆனால், விதியானது யாரை விட்டது? துரியோதனன் அப்படிச்சொல்வானு? விதி வழி மதி.

ஃ

அப்போது பீமன், "துரியோதனு, பாண்டவர்கள் ஐவராய் அநேக சகாயத்துடனே இருக்கிறார்களே; நான் தனியாயிருக்கிறேனே; இவர்களுடன் எப்படி யுத்தம் செய்கிறதென்று நீ கலக்கமுறவேண்டாம்; எங்கள் ஐவரில் யாருடன் யுத்தம் செய்யவேண்டுமென்று உனக்கு இஷ்டமோ அவருடன் யுத்தம் செய்யலாம்; மேலும், நீ எந்த ஆயுதத்துடன் யுத்தம் செய்கிருயோ. அந்த ஆயுதத்துடனே நாங்களும் யுத்தம் செய்கிறோம்" என்று சொல்ல; துரியோதனன், பீமா, நீ துச்சாஸனனைக் கொன்ருய், அர்ச்சுனன் கர்ணனைக் கொன்ருன்; எனக்கு நீங்கள் இருவரும் சரியே. ஆனாலும், நீ ஸாஹஸப் பிரியனுகையால், உன்னுடனே கதாயுத்தம் செய்ய விருப்பம் கொள்கிறேன்" என்று கூற, இருவரும் தங்கள் கதைகளைச் சுழற்றிக்கொண்டு யுத்தம் செய்யத் தொடங்கினர்கள். பின்பு கிருஷ்ணன், இங்கு நடந்தவைகளையும், யுத்தம் ஆரம்பமானதையும் சொல்லி, பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய சாமக்கிரிகைகள் சேகரித்து வைக்கும்படி தர்மபுத்திரரிடம் பாஞ்சாலகன் என்னும் சேவகனை அனுப்பிவிட்டு, அர்ச்சுனனுடன் உட்கார்ந்து அவர்கள் கதா யுத்தம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஃ

பாஞ்சாலகன் தர்ம புத்திரரிடம் சென்று கிருஷ்ண பகவான் கூறிய யாவற்றையும் தெரிவித்தான். திரௌபதி அதைக்கேட்டு ஸந்தோஷப்பட்டு, "பகவானே சொல்லியனுப்பி யிருக்கும்பொழுது எனது பிராணநாதன் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள என்ன ஆக்ஷேபம் இருக்கப் போகிறது?" என்று களித்தாள். அதற்கு தர்ம புத்திரர், அவளைப் பார்த்து," எனது தம்பிக்கு நிகரானவன் ஒருவருமில்லை என்பது எனக்கு நன்ருய்த் தெரிந்திருந்தபோதிலும், துரியோதனன் பலராமனிடத்திலேயே கதா யுத்தப் பயிற்சி அடைந்தவனுகையால் இந்தச் சண்டை முடியும் வரையில் எனக்கு மனது தைரியப்படாது" என்ருர்.

ஃ

இது இவ்வாறிருக்க. துரியோதனனுக்கு மிகவும் மித்திரனாகிய சார்வாகன் என்னும் இராக்கதன் தர்ம புத்திரரை வஞ்சிக்கவேண்டுமென்று நினைத்து, இருடி வேஷம் பூண்டு, மிகவும் இளைப்புற்றவன்போல வந்து, "நான் ஒரு முனிவன்; மிகக் களையாயிருக்கிறது; நாக்கு உலர்ந்து விட்டது. கொஞ்சம் குடிக்கத் தண்ணீரும் உட்கார நிழலும் கொடுத்து ஆதரிப்பவர் யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டுக் கொண்டே வந்தான். அதைக் கண்டு தர்ம புத்திரர் சஞ்சுகியை அனுப்பி அவனை அழைத்து வரச் செய்து, அவன் வரும்போதே நமஸ்காரம் பண்ணிக் கைகால் சுத்தி செய்ய ஜலம் கொடுப்பித்துப் பிறகு பானத்திற்கு நல்ல தண்ணீரும் தருமாறு செய்தார். அவன் அதை வாங்கிக்கொண்டு இவர்களை நோக்கி, "நீங்கள் க்ஷத்திரியர்கள் என்று தோன்றுகிறது" என, தர்மபுத்திரர் "ஆம்" என்று ஒப்புக்கொண்டார். உடனே அந்த ரிஷி, "இப்போது பெரும்போர் நடக்கின்றமையால் உங்கள் பந்துக்களில் பலர் மாண்டுபோயிருப்பார்கள்; உங்கள் ஜலத்தைப் பருகலாகாது; இந்த நிழலே எனக்குப் போதும்" என்று சொல்லி உட்கார்ந்தான். துரௌபதி தன் சேடியைக்கொண்டு அவனுக்கு விசிறச் செய்தாள்.

(தொடரும்.)

தன்னையே யறியாது தோன்றும் உணர்ச்சி.

கோயிலைக் கண்டதும் கைகள் தன்னையே யறியாது வணங்க மேலே தூக்குகின்றன. நண்பனைக் கண்டதும் ஆ! என்ற அதிசயக் குறிப்புடன் பரவசமாகிறான். தமக்கை ஊரிலிருந்து வந்த தன் தம்பியைக் கண்டதும் ஒரு துள்ளு துள்ளிக் கட்டித் தழுவிக்கொள்கிறாள். தாயைக் கண்டதும் குழந்தைகள் ஓடிவருகின்றன. ஸதிபதிகள் பிரிந்திருந்து ஒன்று சேரும்பொழுது மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றனர். வாரப் பத்திரிகை இன்ன கிழமையில் வருமென்று காத்திருந்து பெற்றுப் புளகிதமுற்றோரும் உண்டு. ஒருவரிடம் பத்திரிகையின் ஏஜண்டு, தங்கள் பத்திரிகையைக் கடையில் கொடுத்தேன் பெற்றுக்கொண்டீர்களா, என, அதற்கு அவர் சரி, கொடுத்தாயிற்று என்று சொல்லிவிட்டு வீட்டிற்குச் சென்றார். உடனே கடைக்கு ஓடிவந்து பத்திரிகையை எடுத்துப் பார்க்கவேண்டுமென்ற பரவச உணர்ச்சி அந்த வியாபாரியின் முகத்தில் காணாதது நோக்கி, பத்திரிகையின் ஏஜண்டு "அந்த முதல் பரவச உணர்ச்சியை இவரிடம் காணோமே, இதுதானா பத்திரிகாபிமானம்?" என்று தன்னுள்ளே சொல்லிச் சலித்தபடி சென்றார்.

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

(639-வது பக்கத் தொடர்ச்சி.)

(*Mrs. Neelakanta Sastri Rajammal.*)

பறங்கி மாளிகை

பறங்கிக் கோட்டையிலுள்ள ஒரு பெரிய ஹாலில் ஒரு சோபாவில் பதினாறு வயதுடைய ஓரழகிய பெண்மணி ஓர் ரோஜா மலரைக் கையில் பிடித்துக்கொண்டு அதன் வாசனையை உணர்ந்துகொண்டிருந்தாள். அவள் முகமும் அப்பொழுதே மலர்ந்த ரோஜா மலரை யொத்திருந்தது. அவள் முகத்தில் கள்ளங் கபடற்ற சிறு குழந்தைக்குள்ள ஸ்வபாவம் நன்கு விளங்கிக் கொண்டிருந்தது. அவள் முகம் எப்பொழுதும் புன்சிரிப்பைக் கொண்டிருந்தது. ஸுகுமாரியாகிய அவள் மிக்க வனப்புடன் காண்போர் கண்களுக்கும் மனத்துக்கும் நல் விருந்தாயிருந்தாள். அவள் தேக காந்தி மின்னல் போலப் பிரகாசித்தது அவளருகில் ஓர் தோழி இனிமையாக அழகிய வீணை ஒன்றைச் சுருதி கூட்டி வாசித்துக்கொண்டிருந்தாள். அந்த வீணாகானத்திலாழ்ந்திருந்த அப்பெண்மணி அவ்வீணையைத் தானும் வாசிக்க ஆவல்கொண்டு தானெடுத்து வைத்துக்கொண்டு குயிலினு மினிய குரலெடுத்து வீணைக்குச் சரியாகப் பாடிக்கொண்டிருந்தாள். ஆகா! ஸங்கீதத்தின் மகிமையே மகிமை. ஸங்கீதத்தில் கொஞ்சம் பிரிய மிருந்தாலும் நல்ல ஸங்கீதங்களைக் கேட்டனுபவிப்பதால் தாங்களும் அச்சங்கீதத்தை அடைய எவ்வளவோ ஆவலுண்டாகிறது. சங்கீதத்திற்கு வசிய சக்தி மிகவும் உண்டு என்பது ஸங்கீதத்தில் ஆழ்ந்த பக்தி உள்ளவர் அனைவருக்கும் பிரத்தியக்ஷமான விஷயம். அழுத குழந்தைகூடச் சங்கீதத்தைச் செவி சாய்த்துக் கேட்பது ஒரு சக்தி யல்லவா? பக்தி மார்க்கத்திற்கோ உருக்கமான சங்கீதம் மிக அவசியமாயிருக்கிறது. மனக்கவலை கொண்ட காலத்தும் ஸங்கீதமே எற்படுகிறது. மிகவும் ஸந்தோஷமான காலங்களிலும் ஸங்கீதம் முழங்குகிறது. ஆகையால் ஸங்கீதம் பிடிக்காத ஜென்மம் ஜென்

மமேயில்லை. அப்படிப்பட்டவர் நெஞ்சம் கல்லினும் கடியது. பூர்வ புண்ணிய வசத்தாலேற்படும் இச்சங்கீத ஞானம் சாமானிய மன்று. எல்லோருக்குமே பகவான் சங்கீதத்தைப் பூர்ணமாய் அளிப்பதில்லை. நன்மை தீமை எப்படி உண்டாகிறதோ அதேபோல் பூர்வ புண்ணியத்தால் ஏற்படுவதால் அதைத் தெய்வத்துக்கொப் பாகவே எண்ணவேண்டும். இவ்விதமான எண்ணங்கொண்ட அப் பெண்மணி தன்னை மறந்து உருக்கமாகப் பாடிக்கொண்டிருக்கும் பொழுது முப்பத்தைந்து வயது மதிக்கக்கூடிய அழகிய மாதொ ருத்தி அவ்விடம் வந்தாள். ஆகா! கண்மணி மிகவும் நன்றாக வாசித் தாய்; இதுவரையில் இவ்வளவு அழகாக நீ வாசித்ததில்லை என்று அவளை அணைத்து முத்தமிட்டு அவள் பக்கத்தில் தானும் உட்கார்ந் தாள். அப்பெண்மணி நாணித் தலைகுனிந்து உண்மையில் எனக்கு நன்றாக வந்து விட்டதா என்று மழலையான சொற்களால் தன் முகத்தை நிமிர்த்திக்கேட்டாள். அதற்கம்மாது ஆம் செல்வமே மிகவும் பூர்ணமாய் வந்து விட்டது. உன்னைக்கண்ட எனக்குக் கலாவதியாகிய ஸரஸ்வதியே போல் தோன்றியது. ஆஹா! உன் சவுந்தர்யத்தையும் உன் சங்கீதத்தையும் உன் சாமர்த்தியத்தையும் கண்டு களிக்கப் பெறாமல் அவர் பரலோகம் எய்தியது நினைத்தால் கண்ணே எனக்கு மிகவும் குறையா யிருக்கிறது. என்று கண் கலங்குகிறாள். அதற்கப் பெண்மணி போனதை நினைத்து நீங்கள் வருந்துவதைக் காண எனக்கு வருத்தமாயிருக்கிறது. உங்களை யாவது பகவான் தயவு வைத்து எனக்காக விட்டிருக்கிறார். நீங் களும் இல்லாவிட்டால் இவ்வுலகில் நான் அனாதையல்லவா என்றாள்.

அம்மாது:— ஆம் என் செல்வமே அதற்கே நான் யோசிப்பது. என் விசாரத்தில் என் வாழ்நாள் சீக்கிரம் முடிந்தாலும் முடியலாம். பிறகு உனக்கார் துணை? நான் யோசனை செய்திருக்கிறேன். அதைப்பற்றி உன்னைக் கேட்க எனக்காசையுண்டு. அதாவது சீக்கிரம் உனக்கு விவாகம் செய்து விட்டால் நலமென்று தோன்றுகிறது. நீ என்ன சொல்லுகிறாய்?

அப்பெண்மணி:—இவ்வார்த்தைகளால் வெட்கித் தலை கவிழ்ந்து கொண்டாள்.

அம்மாது:—அம்மா. உனக்கு வயது ஆகவில்லையா? இன்னும் உனக்கு வெட்கமா? உன் மனதிலுள்ளதைச் சொல்.

அப்பெண்மணி:—அம்மா அதற்கிப்பொழுதென்ன அவஸரம்? கலியாணம் என்பது அவசியமேயில்லை யென்று இப்பொழுது எனக்குத் தோன்றுகிறது. நான் இன்னும் கொஞ்ச நாள் குழந்தையாகவே யிருக்க ஆசை கொள்கிறேன்.

அம்மாது:–நீ எப்பொழுதுமே எனக்குக் குழந்தைதான். விவாகமாகி விட்டால் மட்டும் நீ பெரியவளாகி விடுவாயா? ஆனால் உனக்கெப்பொழுது இஷ்டமோ அப்பொழுது செய்துகொள். தானகக் கனிந்த கனிபோல உன் மனங்களித்து விவாகஞ் செய்து கொள்வது எனக்குச் சம்மதந்தான். ஆனால் சீக்கிரம் செய்து விடுவது நலமென்று எனக்குத் தோன்றுகிறது. பிறகு ஈசன் பிரியப்படி நடக்கிறது என்று பெருமூச்சு விட்டுச் சற்று மனம் அயர்ந்தவுடன் அந்த ஸோபாவில் சாய்ந்தாள். அவளைக் கண்டதும் அப்பெண்ணுக்குப் பரிதாப மேற்பட்டு நெஞ்சு திடுக்கிட்டது. உடனே அவளைத் தூக்கி உட்கார வைத்து, அம்மா! என்னால் நீங்கள் இவ்விதம் ஆயாஸப்படுவதைக் காண என் மனம் நோகிறது. என்னுலான உபகாரம் இதுதானு? உங்களின் இஷ்டப்படி நடக்க நான் சித்தமாகக் காத்திருக்கிறேன். இதற்காக நீங்கள் வருந்துவானேன் என்ருள்.

அம்மாது,—இல்லை நான் கல்லியாணத்திற்காக வருந்தவில்லை உனக்கேற்ற கணவன் வேண்டுமே. கிளியை வளர்த்துப் பூனை கையிலா கொடுப்பது? இவைகளை யோசித்தே நான் வருத்தப் படுகிறேன்.

பெண்மணி:—அம்மா இதற்கேன் நீங்கள் வருந்தவேண்டும்? அவரவர் விதிபோல் நடக்குமே தவிர நம்முடைய விசாரத்தால் என்ன ஆகப் போகிறது? இந்த விசாரத்தை விட்டு விடுங்கள். சற்று நாம் வெளித் தோட்டத்தில் உலாவி வருவோம் என்று

தன் தாயின் கரத்தைப்பற்றி வாஞ்சையுடன் தோட்டத்திற்குச் சென்றுள். உலகத்தில் ஒருவரைப் பற்றி ஒருவர் கவலைப் படுவதே சகஜமாய் விட்டது. மகளைப் பற்றிய கவலை தாய்க்கு; தாயைப் பற்றி மகளுக்கு. இதைப்போலவே ஒவ்வொரு பந்துவின் கவலையும் பெருகுகிறது. இந்தக் கவலைக்கு முடிவென்பதே கிடையாது. இவ்விதமான சம்ஸார பந்தத்தில் ஒருவர் மனம் போல் ஒருவர் நடப்பது கஷ்டமா யிருக்கிறது. அதிகாரத்தாலோ, அல்லது கட்டுப் பாட்டாலோ அல்லது விசுவாசத்தாலோ ஒருவர் மனப்படி நடக்கலாம். அதுவும் மனப் பூர்வமாக இல்லாமல் பலவந்தமாக நடக்கலாமே தவிர, முக்கால் வாசி ஒருவர் மனப்படி நடப்பது முடியாத காரியம். அப்படி எதேச்சையாயும் சுய அதிகாரத்துடனும் நடக்க ஒருவருக்குச் சக்தி யிருந்தாலும் அது விபரீதமாகவே அநேகமாயிருக்கும். அதனுல் அநேகருக்குத் தீமையே உண்டாவது உலகத்தின் இயல்பாயிருக்கிறது. அப்படிக் கெல்லாமில்லாமல் மானத்துக் கஞ்சியும் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டும் நடப்பவர்கள் தாம் கஷ்டப்பட்டாலும் பிறருக்கு எவ்வளவோ நன்மைகள் உண்டாகின்றன. உலகத்திலுள்ள கஷ்ட நிஷ்டூரங்களுக்கிடையிலும் கவலைகளுக்கிடையிலும் அயர்ந்த அப்பெண்மணி தன் மகளழைத்துச் சென்ற அரும் பல புஷ்பங்கள் புஷ்பித்துப் பச்சைப் பசேலென்ற பச்சை தரும் இனிமையான பூந்தோட்டத்திலுள்ள ஓர் பளிங்குமண்டபத்தில் மகளுடன் உட்கார்ந்தனள். அதற்குள் இரு சிறு தோழியர் இளவசிரயை விளையாடக் கூப்பிட அச்சிறிய மங்கை வயதிற்கேற்ற உற்சாகத்துடன் அப் பூங்காவைச் சுற்றிவரச் சென்றுள். உலகத்தில் கஷ்டம் என்ற தொன்று இருப்பதாக அவள் நெஞ்சம் அதுவரை அறிந்ததில்லை. அவள் தன் தாயின் உள் கவலையை எவ்வாறறிவாள்? ஒருவிதமான கவலையுமே தன் மகளறியாவண்ணம் அவ்வளவு ஜாக்கிரதையாகப் போஷித்து வந்தாள்.

(தொடரும்.)

" அமிர்த குணபோதினி "

பவஸூத்திய தை மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
ம	14	1	திங்	[கிருத்திகா விரதம், ஸங்கிராந்தி, உத்தராயணம். தச 17-13, கிரு 60-0, கரிநாள்.
சி-அ	15	2	செவ்	ஏகா 18-47, கிரு 2-9, கரிநாள், அதிதி, ஸர்வைகாதசி, மாட்டுப்பொங்கல்.
சி	16	3	புத	துவா 21-42, ரோ 5-59, கரிநாள், கூர்மதுவாதசி, சீவரம் பார்வேட்டை. (2உ ஏகாதசியாகையால் இன்று நடத்தப்படும்.)
ம	17	மகரம் ௴ 4—45 · 4	வியா	திர 25-39, மிரு 10-59, திருக்கச்சியூர் பார்வேட்
சி	18	5	வெ	சதி 30-40, ஆரு 16-53, ஜயலக்ஷ்மி விரதம். [டை
சி	19	6	சனி	○36-25, புந 23-39, எம்பார், கந்தஸ்வாமி கைலா
சி	20	7	ஞா	பிர 42-51, பூச 30-57, தைப்பூசம். [சகிரி.
சி-ம	21	8	திங்	துவி 49.32, ஆயி 38-39.
சி	22	9	செவ்	திரி 56-15, மக 46-24, திருமழிசையாழ்வார்.
அ	23	10	புத	சது 60-0, பூர 53-53.
ம	24	11	வியா	சது 2-37, உத் 60-0, கரிநாள், சண்டேசுவரர்.
சி-அ	25	12	வெ	பஞ் 8-18, உத் 0-46, கூரத்தாழ்வார்.
ம	26	13	சனி	ஷஷ் 12-57, ஹஸ் 6-42. ஸத்தியகாமர்.
சி	27	14	ஞா	ஸப் 16-3 சித் 11-12,
அ-ம	28	15	திங்	அஷ் 17-21, ஸ்வா 14-1.
ம-சி	29	16	செவ்	நவ 16-40, விசா 14-56, திருநீலகண்டர், தாயுமான
அ-சி	30	17	புத	தச 14-3, அநு 13-57, கரிநாள். [வர்.
பி-சி	31	18	வியா	ஏகா 9-32, கேட் 11-6 ஸர்வைகாதசி.
அ-பி	1	19	வெ	துவா 3-21, உப 52-29, மூல 6-38. பிரதோஷம்.
சி	2	20	சனி	சதி 47-21, பூரா 0-50, உப 53-16, சிவராத்திரி.
அ-ம	3	21	ஞா	● 38-16, ஶ்ருவ 46-51, தை அமாவாசை.
சி	4	22	திங்	பிர 28 54, அவி 39-24, கைலாச கௌரீவிரதம்.
ம	5	23	செவ்	துவி 19-47, சத 32-16, திதிதுவயம், அப்பூதியடிகள். [தீர்த்தம்.
அ-சி	பிப்ரவரி 1935 ௵ · 6	24	புத	திரி 11-26, பூட் 25-50, திலசதுர்த்தி, வீரராகவர்
சி	7	25	வியா	சது 4-5, உப 54-2, உட் 20-40, குந்த-வர-சதுர்த்தி, மதன-ஶ்ரீ-பஞ்சமி.
அ	8	26	வெ	ஷஷ் 53-50, ரே 17-1, ஷஷ்டி விரதம். [தம்.
சி	9	27	சனி	ஸப் 51-25, அசு 15.3, ரதஸப்தமி சந்திரார்க்க விர
பி-சி	10	28	ஞா	அஷ் 50-59, பர 14-59, கிருத்திகா விரதம், பீஷ்மாஷ்டமி.
ம-அ	11	29	திங்	நவ 52-26, கிரு 16-48.

பு-சு சனி / ரவி ராகு	15உ-உதயத்திற்கு ராசி		கேது
		குரு	குஜ

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone, at the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.